40708

TAM TAM

20 Books

ஜிலாத்தொட்டு புராணம்

1934

கணபதி துணை

விளத்தொட்டிப் புராணம்.

திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான்

திரிசிரபுரம் - ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

OFFICE OF THE REGISTRAR OF ...
25 MAY 1934
MADRAS

இது

ஷை பிள்ளையவர்கள் மாணாக்கருள் ஒருவரான

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் - உ. வே. சாமிநாதையரால்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை, கதைச்சுருக்கம்

முதலியவற்றோடு

40738
685

சென்னை:

கேஸரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

பவ சித்திரைமீ

1934 [விலை 0—6—0

Q23:38.211 N34
59222

M. I. P. PROJECT
Microfilmed.

59222

A0708

இப்புத்தகத்தில் அடங்கியவை.

		பக்கம்.
1.	முகவுரை	v - xii
2.	விளத்தொட்டிப் புராணம் மூலமும் கதைச் சுருக்கமும் குறிப்புரையும்	க-எக
	கடவுள் வாழ்த்து	க
	நூல் இயற்றுதற்குக் காரணமுதலியன	ரு
க.	திருநாட்டுச்சிறப்பு	௬
உ.	திருநகரச்சிறப்பு	௯
௩.	நைமிசப்படலம்	கக
ச.	வயிரவபூசைப்படலம்	க௬
ரு.	வேணுகோபாலபூசைப்படலம்	உஉ
௬.	பிரமன் பூசைப்படலம்	உ௬
எ.	திருமணப்படலம்	௩க
அ.	திருவிழாப்படலம்	௩௯
௯.	விளத்தொட்டிப்படலம்	ச௩
க0.	இந்திரதீர்த்தப்படலம்	சஅ
கக.	அக்கினிதீர்த்தப்படலம்	ருச
கஉ.	யமதீர்த்தப்படலம்	ருஎ
க௩.	நிருதிதீர்த்தப்படலம்	௬0
கச.	வருணதீர்த்தப்படலம்	௬உ
கரு.	வாயுதீர்த்தப்படலம்	௬ச
க௬.	சோமதீர்த்தப்படலம்	௬௬
கஎ.	ஈசானதீர்த்தப்படலம்	௬அ

முகவுரை.

க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணிப் படிக்கரை வாள்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
விளமர் விராடபுரம் வேட்களத்தும்
பெண்ணை யருட்டுறைதண் பெண்ணாகடம்
பிரம்பில் பெரும்புலியூர் பெருவேளூரும்
கண்ணை களர்காறை கழிப்பாலையும்
கயிலாய நாதனையே காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

புராணம் என்பது பழைய வரலாறு என்னும் பொருளை உடையதென்பர். திருவாசகத்தின் முதலில் உள்ள 'சிவபுராணம்' என்பதற்கு, 'சிவனது அநாதி முறைமையான பழமை' என்று காணப்படும் விளக்கக் குறிப்பானது புராணம் என்பதன் பொருளைப் புலப்படுத்துகின்றது; "பல்லார்க்கு மினிதிருந்தப் பழங்கதைகற் போர் படிப்போர்" (விளத்தொட்டிப். எ : ருஉ) என்ற அடியில் உள்ள 'பழங்கதை' என்பதும் இக்கருத்தை வலியுறுத்தும். புராணங்கள் பலவகைப்படும். தலங்களின் பழைய வரலாறுகளைக் கூறுவன தல புராணமெனப்படும். இவ்வகைப் புராணங்கள் வடமொழியில் அள விறந்தனவாக உள்ளன.

தமிழ் நாட்டில் உள்ள சிவதலங்கள் பலவற்றிற்கு உரிய வட மொழிப் புராணங்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின் றன. பழைய காலத்தில் தமிழிற் செய்யப்பெற்ற புராணங்களோ வரலாறுகளை மட்டும் கூறிச் செல்வனவாகும். பின்பு சில புலவர்பெரு மக்கள் காப்பிய இலக்கணங்கள் அமையும்படி புராணங்களைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினர். அங்ஙனம் இயற்றப்பெற்ற நூல்கள் திருக்குற்றாலத் தலபுராணம், திருக்கழுக்குன்றத் தலபுராணம்,

சீகாளத்திப் புராணம், காஞ்சிப்புராணம் முதலியனவாகும். இத்துறையில் நூலியற்றலை மேற்கொண்டு பிறரினும் அதிகமான நூல்களை இயற்றியவர் சென்ற நூற்றாண்டில் இருந்து விளங்கியவரும் திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவானும் என்னுடைய ஆசிரியருமாகிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களாவர். இப்புலவர்பிரான் இயற்றிய தலபுராணங்களுள் இவ்விளத்தொட்டிப் புராணம் ஒன்றாகும்.

*விளத்தொட்டியென்பது சோழநாட்டில் மண்ணியாற்றின்கரையில் உள்ள ஒரு சிவஸ்தலம். இது திருநாவுக்கரசுநாயனாரால் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் குறிக்கப்பட்ட வைப்புஸ்தலங்களுள் ஒன்று. இங்கே தலவிருட்சம் வில்வமாதலின் வில்வாரணியம், வில்வவனம், வில்வக்கானம், வில்வாடவி, கூவிளக்கானம், கூவிளவனம் என்றும், பிரமன் பூசித்துப் பேறுபெற்றதனால் பிரமபுரி என்றும், கூவிளம் தொட்டி என்னும் இரண்டன் பெயரும் இணைந்து விளத்தொட்டியென்றும், முருகக்கடவுள் தொட்டியில் கண்வளர்தலால் வளர்தொட்டியென்றும் இத்தலத்தின் திருநாமங்கள் வழங்கும்.

இங்கேயுள்ள தல விநாயகர் திருநாமம் ஆபத்துக்காத்த விநாயகரென்பது. இவர் இத்தலத்தில் தெற்குவீதியின் மேல்பால் எழுந்தருளி யிருக்கின்றார். சிவபெருமான் திருநாமங்கள் பிரமபுரீசர், வில்வமூலநாதர், வில்வநாயகரென்பன. அம்பிகையின் திருநாமம் வடமொழியில் இட்சுரஸநாயகி என்றும், தமிழில் கரும்பிரதநாயகி என்றும் வழங்கும். இக்காலத்து இத்தலத்திலுள்ள பெண்களுக்குக் கரும்பாயி என்னும் பெயர் வைக்கப்பெற்று வழங்குகின்றது. இங்கே முருகக் கடவுள் அம்பிகையின் விருப்பப்படி பாலசுப்பிரமணியராக அவதரித்து எழுந்தருளியிருக்கின்றனர். அவர் தொட்டியில் (தொட்டிலில்) என்றும் இளங்குழந்தையாகவே எழுந்தருளியுள்ள காரணம் பற்றி இத்தலத்தில் உள்ளார் தம் குழந்தைகளுக்குத் தொட்டில் இடுவது வழக்கமில்லை. இத்தலத்தில் பூசித்துப் பேறுபெற்ற வேணுகோபாலர் இக்கோயிலில் எழுந்தருளியுள்ளனர். அகத்தியராற் பூசிக்கப்பெற்ற இலிங்கமொன்றும், பிரமதேவராற் பூசிக்கப்பெற்ற

* தென் இந்தியா ரெயில்வேயில் உள்ள 'குத்தாலம்' என்னும் ஸ்டேஷனில் இறங்கி வடக்கே சென்றால் இத்தலத்தை அடையலாம்.

இலிங்கமொன்றும் இருந்தனவென்று இப்புராணத்தால் தெரியவருகின்றது. வில்வவிருட்சத்தினடியில் சிவலிங்கப்பெருமானைப் பூசிக்கும் தோற்றத்தோடு உள்ள பிரமதேவரது உருவம் ஒரு சிலையில் அமைக்கப்பட்டுள்ளது. சிவபிரான் கட்டளைப்படி வைரவக்கடவுள் பூசித்துப் பேறுபெற்று இத்தலத்தைப் பாதுகாத்து வருகின்றதாக இப்புராணம் கூறும். அம்மூர்த்தியின் திருக்கோயில் அம்பிகையின் திருக்கோயிலுக்கு எதிரே உள்ளது.

இத்தலத்தில் உள்ள தீர்த்தங்கள் வைரவதீர்த்தம், மண்ணிநதி, பிரமகூபம், இந்திரதீர்த்தம், அக்கினி தீர்த்தம், யமதீர்த்தம், நிருதி தீர்த்தம், வருணதீர்த்தம், வாயுதீர்த்தம், சோமதீர்த்தம், ஈசானதீர்த்தம் என்பன. இவற்றுள் வைரவதீர்த்தமென்பது கொள்ளிடத்தில் உள்ள ஒரு துறையாகும். பிரமகூபமென்பது பிரமதேவரால் அமைக்கப்பட்டது. இது ஸ்வாமி திருக்கோயிலுக்கும் அம்பிகை திருக்கோயிலுக்கும் இடையே உள்ளது.

அக்கினி, அகத்தியமுனிவர், அகலிகை, இந்திரன், ஈசானன், சந்திரன், நிருதி, பிரமதேவர், யமன், வருணன், வாயு, வேணுகோபாலர், வைரவக்கடவுள் என்பார் இத்தலத்திற் பூசித்துப் பேறுபெற்றோராவர்.

பண்டைக்காலத்தில் தைமாதத்தில் திருத்தேர் விழாவும், ஆவணி மாதத்தில் திருக்கல்யாண உத்ஸவமும் இங்கே நடந்துவந்தனவென்பதும் ரதோத்ஸவத்தின் மறுநாள் இந்திர தீர்த்தத்தில் தீர்த்தங் கொடுக்கப்பட்டதென்பதும் இப்புராணத்தால் புலப்படுகின்றன. இப்போது வைசாக சுத்த பௌர்ணமியில் உத்ஸவம் நடைபெறுகிறதென்றும் அக்காலத்தில் கொள்ளிடத்திலுள்ள வைரவதீர்த்தத்தில் தீர்த்தம் கொடுக்கப்படுகிறதென்றும் தெரியவருகின்றது.

இந்தத் தலத்திற்குரிய வடமொழிப் புராணம் இப்பொழுது கிடைக்கவில்லை. இதற்கருகிலுள்ள * திருச்சிற்றம்பல மென்னும்

* கோசிகமுனிவர் மரபில் தோன்றியவரும் நாடோறும் சிதம்பர நடன தரிசனம்செய்யும் நியமமுடையவருமாகிய ஞானசிந்து என்பவர் ஒருநாள் பெருமழையால் சிதம்பரம்போவது தடையுற்று அத்தலத்தில் தங்கி, நடனதரிசனம் செய்யாததுபற்றி வருந்தி மறுநாட்காலையில் அக்கினிப்பிரவேசம் செய்யத்தொடங்குகையில் சிவபிரான் எழுந்தருளி

தலத்திற்குரிய வடமொழிப்புராணத்தில் இத்தலத்தைப்பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. சந்திரன் தனக்குவந்த க்ஷயரோகத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டு விளத்தொட்டிக்கு வந்தபொழுது தனது ஆத்மார்த்த இலிங்கத்தைத் திருச்சிற்றம்பலத்தில் வைத்து வந்தானென்பதும் விளத்தொட்டியிற் பூசைபுரிந்து சாபத்துயர் நீங்கி மீட்டும் திருச்சிற்றம்பலம் சென்று அவ்விலிங்கத்தை எடுக்க, அது பெயராமல் இருப்பது கண்டு வருந்தினனென்பதும் பிறகு சிவபெருமானால் வேறு இலிங்கமொன்று பெற்றுச் சென்றனனென்பதும் சந்திரனால் வைக்கப்பட்ட காரணத்தால் சந்திரேசுவரரென்பது அம்மூர்த்தியின் திருநாமமாயிற்றென்பதும் அப்புராணத்தால் அறியப்படுகின்றன.

விளத்தொட்டிப் புராணம் பிள்ளையவர்களால் பாடப்பெற்ற காலம் ரௌத்திரி (1860) வருஷமாகும். இதனை இயற்றி அரங்கேற்றுவதற்கு வேண்டிய உதவிகளைப் புரிந்தவர் அக்காலத்தில் கோயில் தருமகர்த்தாவாக இருந்தவரும் தஞ்சை மன்னர்களுக்கு முடிசூட்டும் உரிமையையுடைய அணைக்குடியென்னும் ஊரிலிருந்த வேளாளச் செல்வர்களுக்கு உறவினருமாகிய ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையென்பவர்.

இந்தநூல் எளிய நடையில் சுருக்கமாக இயற்றப்பட்டுள்ளது. இதில் கடவுள்வாழ்த்தும், நூல் இயற்றுவதற்குக் காரண முதலியனவும், திருநாட்டுச்சிறப்பும், நகரச்சிறப்பும், நைமிசப்படலம் முதலிய பதினைந்து படலங்களும் உள்ளன. இந்நூற் செய்யுட்டொகை 353; இவற்றுள் அரங்கேற்றிய காலத்தில் இருந்த ஒருவரால் இயற்றப்பெற்ற சிறப்புப்பாயிரமும் ஒன்று.

இந்நூலாசிரியருடைய கவித்திறமும் புராண அமைப்பும் இங்கே எழுதி அடங்குவனவல்ல. தனியே வெளியிடப்பெற்றுள்ள அவர்களுடைய சரித்திரத்தின் இரண்டு பாகங்களாலும் அவை விளங்கும். ஆயினும், இப்புராணத்தி லுள்ளவற்றிற் சில செய்திகள் மட்டும் இங்கே சுருக்கமாக எடுத்துக் காட்டப்படுகின்றன :

நடனதரிசனம் அளித்தருளினார். தில்லைத்திருச்சிற்றம்பலத்தில் தரிசித்தற்குரிய நடனத்தை ஞானசிந்து தரிசித்தமையின் அது திருச்சிற்றம்பலமென்று தமிழில் வழங்கலாயிற்று. வடமொழித் திருநாமம் நடனபுரி என்பது. நடனபுரீசுவரர் என்பது சிவபிரானுக்குரிய திருநாமம்,

தலச்செய்திகள் அங்கங்கே அமைவுற எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அன்றியும் பிற தலங்களைப்பற்றிய செய்திகளும் ஏற்ற இடங்களில் அமைந்துள்ளன. பிரமன் பூசைப்படலத்தில் பிரமதேவர் விளத்தொட்டியை நோக்கி வரும்பொழுது இடையே உள்ள பல சிவஸ்தலங்களைத் தரிசித்துப் போற்றினரென்றுகூறும் பகுதியில் சிதம்பரம் முதலிய இருபத்தைந்து தலங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றின் சிறப்புக்கள் சுருக்கமாகக் காணப்படுகின்றன ; "அருமணந் தழையு முல்லை வாயில்", "கற்பமெத் தனையோ கண்ட காழி", "பொற்பமண் ணிட்டு நோயைப் போக்குவார் பதி", "வேத, குலமலி பூசை யாற்றிக் குலவிய மறைக்காடு", "புற்றிடங் கொண்ட பெம்மான், வலமலி யாரூர்", "கரியுரி மேனி போர்த்த கண்ணுதல் வழுவூர்", "படர் திருவரசின்கீழம், பரியுரி யவர்வாழ் தெய்வ வாவடு துறை", "சண்பக வனஞ்சூழ் நாகீச்சரம்" என்பவற்றால் இதனை உணரலாகும்.

அம்பிகையை ஆசிரியர், "அருமைசான்ற கரும்பு" (௨ : ௧௫), "காக்குஞானக் கரும்பு" (௧௪ : ௯), "உருகுமுள் ளகலா ஞான வொரு கரும் பிரதக் கொம்பு" (௧௯ : ௪) என்றும், பாலசுப்பிரமணியக் கடவுளை, "பாலசுப்பிரமணியச் செம்பொற்கட்டி" (௯ : ௨௨) என்றும், நடராசப்பெருமானை, "ஆட்டுவா ரின்றி யாடும் அண்ணல்" (கடவுள்.௪) என்றும் கூறுவர். சிவபெருமானை, "புத்திரனுகாத்தந்தை" (௩:௧௧), "சேவித்தல் சுமக்குநாயகன்" (௪ : ௧௦) என்று கூறுமுகத்தால் அவருடைய அநாதித்தன்மையையும், அவர் யாவராலும் வணங்கற்குரியவரென்பதையும் சுவைபடக்குறிப்பிக்கின்றனர். அன்றியும் வயிரவ பூசைப்படலத்தில் வேதம், பிரணவம் என்பவற்றின் கூற்றுக்களாக உள்ள பகுதிகளில் சிவபிரானுடைய பரத்துவம் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. வயிரவர் (௪ : ௨௮ - ௯), திருமால் (௫ : ௫-௭, ௭ : ௫-௭), பிரமதேவர் (௯ : ௨, ௧௯-௭) என்பவர்கள் செய்தனவாக உள்ள துதிகள் எளியநடையில் அமைந்து சிவபிரானது கருணைத் திறத்தையும், தலைமையையும் புலப்படுத்திக்கொண்டு படிப்பார் நெஞ்சத்தை உருக்கும் வண்ணம் விளங்குகின்றன.

வேளாளர் சிறப்பைக் கூறும்பொழுது, "பூதிசாதனம் போற்றிப் பொலிபவர்" (௨ : ௧௦) என்றும், நைமிசாரணிய முனிவரை, "பலர்புகழ் தெய்வ நீற்றுச் சாதனப் படிமம் வாய்ந்தார்", 'புண்ணிய

முனிவ ராய பூதிசா தனத்தர்" (ந : கூ,அ) என்றும், வயிரவர் பூசித்ததைக் கூறும்பொழுது, "கருவட முளைத்த தெய்வக் கண்மணி நீறணிந்து" (ச : உகூ) என்றும், பிரமதேவர் பூசித்ததைச் சொல்லும்பொழுது, "வெள்ளிய நீறு பூசி விளங்குகண் மணியும் பூண்டு" (கூ : கச) என்றும் இவ்வாசிரியர் எடுத்துக்கூறுதலின் இவருக்குத் திருநீற்றிலும் கண்மணியிலும் உள்ள பேரன்பு விளங்கும். "ஆதிநாயக னஞ்செழுத் துன்னுவார்" (உ : க0), "தெள்ளிய வஞ்செழுத்துஞ் சிந்தையிற் கணித்தெழுந்து" (கூ : கச) என்பவற்றிற் பஞ்சாட்சரத்தைப்பற்றிக் கூறுகிறார். தாம் ஆதீனவித்துவானாக அமர்ந்திருந்த திருவாவடுதுறையை, "பூரிய ரொன்றுஞ் சாராப் புகழ்மிகு துறைசை", "தெய்வவாவடுதுறை" என்று சிறப்பிப்பர். அவ்வாதீனத்தின் ஸ்தாபகராகிய ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகரையும் தம்முடைய ஞானாசிரியராகிய ஸ்ரீ அம்பலவாண தேசிகரையும் ஒவ்வொரு செய்யுளால் துதித்துள்ளார். இந்நூலாசிரியர் அகத்திய முனிவர்பால் அன்புமிக்கவர். அவருடைய துதியாக ஒருசெய்யுள் கடவுள்வாழ்த்திற் காணப்படுகின்றது. அவரை, "தமிழ் முனி" (கடவுள். கஎ) என்று அத்துதியிலும், "புண்ணியவண் டமிழ்மணக்குஞ் செய்யவாய்க் குறுமுனிவன்" (ந : கஅ), "செந்தமிழ் முனிவன்" (ச : ககூ) என்று பிற இடங்களிலும் வழங்குவர்.

திருவாசகம், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களிலுள்ள சொல்லும் பொருளும் இதனுள் அங்கங்கே காணப்படும். திருநாட்டுச் சிறப்பிலுள்ள பல செய்யுட்கள் பெரிய புராணச்செய்யுளமைப்பைத் தழுவியன.

தட்சிணாமூர்த்தி துதியில், "கற்றகல் வியினாற் பந்தங் கடந்திடலரிதே" (கடவுள். கூ) என்றும், வைரவமூர்த்தி துதியில், "இருட்பெரு நிரய மேவற் கேதுவாஞ் செருக்கு மேவின்" (கடவுள். எ) என்றும், சோமதீர்த்தப் படலத்தில், "கடவுளா யிருந்தா னேனுங் கலைபல கற்றா னேனும், மடைமையோ னாகி னென்னாம்" (க), "யாரே யூழ்வலி யொழிக்க வல்லார்" (உ) என்றும் நீதிகள் சில கூறப்பட்டுள்ளன. பிறவியை ஓரிடத்தில், "எந்திர னேர்பிறவி" (க0:நரு) என்று கூறுகிறார். ஓயாது வருவது பிறவி என்னும் கருத்தை அவ்வுவமை புலப்படுத்துகின்றது. அக்கினி தம்முடைய உணவையும் உட்கொண்டானென்று தேவர்கள் சிவபிரானிடம் விண்ணப்பம் செய்வதாக

உள்ள பகுதியில் வரும், "எங்கடம் பங்குஞ் சேர்த்தே யெழுநாவுடையோ னுண்டான்" (கக : எ) என்னும் செய்யுளடியில் அக்கினியை எழுநாவுடையோன் என்று கூறியிருத்தல் நயம்பெற விளங்குகின்றது. பிறர் பங்கையும் உண்ணுதற்கு ஏற்பப் பலநாவை உடையவனென்னும் குறிப்பு அதனாற் புலப்படுகின்றது.

"நந்தன வனங்க ளெங்கும் நகுந்தன வனங்க ளெங்கும், சுந்தர மடங்க ளெங்குந் தொகுங்கொடை மடங்க ளெங்கும், மந்திர யாக மெங்கும் வளமலி தியாக மெங்கும், இந்திர திருவ ரெங்கு மியற்றுகந் திருவ ரெங்கும்" (க:ந), "காமாரி விடையுகைத்தான் கவுமாரி மணங்குறித்தே", "நந்திரவி யெனப்பொலிந்தா னந்திரவி யம்போல்வான்" (எ : சக - உ) என்பன முதலியவற்றில் மடக்கு வகைகள் அமைத்திருக்கின்றன.

பழமொழிகள், உலகவழக்கச் சொற்கள் முதலியன உரிய இடங்களில் அமைந்து இன்புறுத்துகின்றன. நூல்களில் அருகிவழங்கும் அஞ்சிக்கும், அந்தை, உரிது முதலிய சில அரும்பதங்களை இதனுட் காணலாம். பழைய நூல்களிற் பயிலும் முட்காற்கோழி முரசுபடு கடைத்தலையான் என்பனபோன்ற பல இனிய அரிய சொற்றொடர்கள் பல இடங்களில் அமைந்து செய்யுட்களை அழகுபடுத்துகின்றன.

இந்த நூலை வெளியிட வேண்டுமென்று முயன்றவரும் விளத்தொட்டி ஸ்தல சம்பந்தமான பல செய்திகளைத் தெரிவித்தவரும் திருச்சிற்றம்பலம் ஸ்ரீ நடனபுரீசுவரர் கோயில் தருமகர்த்தாவும் ஆகிய தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ சி. பொன்னுசாமி பிள்ளையவர்களுடைய பேரன்பும், இதனை வெளியிடும் விஷயத்தில் பொருளுதவி செய்தவராகிய விளத்தொட்டிப் பிரமபுரீசுவரர் கோயில் தருமகர்த்தா ம-ா-ா-ஸ்ரீ . இராமலிங்கம்பிள்ளையவர்களுடைய பேரன்பும் மறக்கற்பாலனவல்ல.

இதனை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்து உதவி செய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும் 'கலைமகள்' துணையாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவார்கள்.

ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களுடைய சரித்திரத்தின் இரண்டாம் பாகத்து முகவுரையில் அக்கவிஞர் பெருமானுடைய நூல்களில் வெளிவாராதனவற்றையும் கிடைத்தற் கரியவற்றையும் தமிழ்மக்கள் வெளிவரச் செய்தல் வேண்டுமென்ற எனது வேணவாவைப் புலப்படுத்தியுள்ளேன். அதனை எழுதிய சில மாதங்களுக்குள் அப்புலவர்பிரானுடைய நூல்களில் வெளியிடப் படாதவற்றுள் ஒன்றாகிய இதனை வெளியிடும்படி செய்வித்த ஸ்ரீ பிரமபுரீசர் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

தியாகராஜ விலாஸம்
திருவேட்டீசுவரன் பேட்டை
சென்னை,
2—5—34.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

உ
கணபதி துணை.

விளத்தொட்டிப் புராணம்.

கடவுள் வாழ்த்து.

ஆபத்துக்காத்த விநாயகர்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

பூமேவு முத்தொழில்செய் மூவருக்கு மொருமூல புருடன் றானென்
றாமேவு நிலமுணர விருசெவிக ளொருதுதிக்கை யகத்தே யன்னார்
தாமேவு பொலிவின்வரும் படியுதவி யருள்சுரந்து தழையு மூர்த்தி
நாமேவு மாவத்துக் காத்தபிரான் றிருவடிக ணயந்து வாழ்வாம். (க)

பிரமபுரீசர்.

சீர்பூத்த விச்சாஞா னக்கிரியை நீங்காமை தெரித்தா லென்னப்
பார்பூத்த மூவிலைவில் வாரணியத் தினிதமர்ந்து பரவிப் போற்றும்
தார்பூத்த புயத்தயன்மா லாதியருக் கருள்சுரந்து தழையா நிற்குங்
கார்பூத்த மணிமிடற்றுப் பிரமபுரீ சரைநாளுங் கருதி வாழ்வாம். (உ)

கரும்பிரதநாயகி.

வயங்குமிரு கரத்துவிரல் பத்தினும்பத் துருவாய்மால் வந்து
தோன்ற, உயங்குமம ரர்கணிமிர வொருங்கசுரர் தலைசாய வுறுபோ
ராற்றி, இயங்குமுயி ரஃதிலுயி ரெல்லாநன் களித்தருளு மிறைவி
யுள்ளம், மயங்குமெமை யும்புரக்குங் கரும்பிரத நாயகிதாள் வணக்
கஞ் செய்வாம். (ங)

(குறிப்புரை.)

க. ஆம் மேவும் - கடல்சூழ்ந்த; ஆம் - நீர்; ஆ மேவு - ஆகல் மேவிய வெனினும் ஆம். விநாயகர் தம் துதிக்கையிலிருந்தும் செவிகளிலிருந்தும் மும்மூர்த்திகளைச் சிருட்டித்தாரென்பது புராண வரலாறு.

உ. வில்வம் : இத்தலவிருட்சம்.

ங. உமாதேவியார் தம்முடைய பத்து விரல்களிலிருந்தும் திருமாலினுடைய பத்து அவதாரங்களைப் படைத்தனரென்பது புராண வரலாறு. இயங்கும் உயிர் - சரம். அஃதில் உயிர் - அசரம்.

நடராசப் பெருமான்.

(வேறு.)

பூட்டுவார் சிலையு மம்பும் பொருப்புமா லாகக் கொண்டு
மூட்டுவார் சமழ்ப்ப நக்கு முப்புரம் பொடித்த வள்ளல்
காட்டுவா ரின்றி யெல்லாங் காண்பதற் கியைய மன்றுள்
ஆட்டுவா ரின்றி யாடு மண்ணலுக் கன்பு செய்வாம். (௪)

சிவகாமியம்மை.

வெருளினால் வகையாம் யோனி விரவுபு தோன்றித் தோன்றி
இருளினா லுயிர்க ளெல்லா மிளைத்திடா இன்ப மெய்தத்
தெருளினான் மிக்கோர் வாழுஞ் சிதம்பர மன்று ளென்றும்
அருளினா னடனங் காணு மம்மைதா ளகத்துட் கொள்வாம். (௫)

தக்ஷிணாமூர்த்தி.

கற்றகல் வியினாற் பந்தங் கடந்திட லரிதே யென்று
சொற்றது விளக்கி யாங்குச் சுருதியா கமமுன் னாய
முற்றவு முணர்ந்த நான்கு முனிவரர்க் கருளிச் செய்து
கொற்றமா ராலின் கீழ்வாழ் குரவனுக் கன்பு செய்வாம். (௬)

வைரவமூர்த்தி.

இருட்பெரு நிரய மேவற் கேதுவாஞ் செருக்கு மேவின்
வெருட்பெருந் தண்ட மேவு மிகவுமென் றுணர்த்தி யாங்கு
மருட்பெருஞ் செயலி னீங்கா மாலுடம் புரித்துப் போர்த்த
அருட்பெரு வடுகன் செம்பொ னம்புயப் பாதம் போற்றி. (௭)

ஆபத்துக்காத்த விநாயகர்.

(கலிவிருத்தம்.)

சோத்த நாயக னேயென்று தொல்புவி
பூத்த நாயகன் பொன்மகள் பூமகட்

௪. சிலை - வில்; சிலையைப் பொருப்பாகவும் அம்பை மாலாகவும் கொண்டு; நிரனிறை. மூட்டுவார் - போரை மூட்டுபவர்கள். சமழ்ப்ப - நாண. ஆட்டுவாரின்றி யாடும் அண்ணல்; "நட்டுவனாரை யறிகிலம்" (பழமலையந்தாதி) என்றார் சிவப்பிரகாசர்.

௫. வெருளின் நால்வகை; வெருளின் - அச்சத்தையுடைய.

௭. நிரயம் மேவற்கு - நரகத்தை யடைதற்கு. தண்டம்-தண்டனை.

௮. சோத்தம் - இழிந்தோர்செய்யும் அஞ்சலி; "சோத்துன்னடிய மென்றோரை" (திருச்சிற். 173) என்பதும், 'சோத்தம் - இழிந்தார்

காத்த நாயக னஞ்சிக்கு மாவத்துக்
காத்த நாயகன் கான்மலர் போற்றுவாம். (௮)

சுப்பிரமணியக் கடவுள்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

சிரமணிமுச் சியுநுதலிற் பட்டமுஞ்சுட் டியும்பொட்டுந் திரு
வெண் ணீறும், உரமணியு மைம்படையு மணிக்குழையு மரைஞாணு
மொளிவிட் டோங்கக், கரமணியும் வளையிருகாற் சிலம்பொலிக்கத்
தொட்டில்வளர் கதிர்வெற் பீன்ற, வரமணிகண் மணிநிகர்சுப் பிர
மணிய விளங்குழவி மலர்த்தாள் போற்றி. (௯)

திருநந்திதேவர்.

(கலிவிருத்தம்.)

முந்தி வானவ ரேத்து முதல்வரை
அந்தின் மேய வபர சிவனெனும்
நந்தி நாயக னாண்மலர்ப் பாதமுட்
சிந்தி யாவினை சிந்தியுய் வாமரோ. (௧௦)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

மருங்கலை யுடுத்த காழி வாவியொண் கரைமே னின்று
பெருங்கலை சிறிதுந் தேறாப் பித்தனை யழுத மைத்தாங்

செய்யும் அஞ்சலி; அது சோத்தெனக் கடைக்குறைந்து நின்றது' என்ற அதன் உரையும் இங்கே அறியற்பாலன. ஆத்தநாயகன் - ஆப்தநாயகன்; ஆப்தம் - உண்மை. அஞ்சிக்கும்-பூசிக்கும்; "அஞ்சித்தல் சொற்ற பூசனை யடைவுமாம்" காஞ்சிப். திருவேகம்ப 36.

௯. உரம் - மார்பு. ஐம்படை - திருமாலின் பஞ்சாயுத வடிவங்களாகச் செய்து குழந்தைகளுக்குக் காப்பாக அணியும் ஓர் அணி; இஃது ஐம்படைத்தாலி, தாலியைம்படை யெனவும் வழங்கும்; "ஐம்படை மார்பிற் காணேன்" (திருவிளை. மாமனாக. 25.) வளையும் சிலம்பும் ஒலிக்க. வெற்பீன்ற வரமணி - உமாதேவியார். தொட்டில் வளர் குழவியென்க. முருகக் கடவுள் தொட்டிலில் வளர்ந்த வரலாறு இப்புராணத்திலுள்ள விளத்தொட்டிப்படலத்தால் உணரலாகும்.

௧௦. முதல் - சிவபிரானுடைய. வரை அந்தில் - மலையினிடத்தில். அபர சிவன் - இரண்டாம் சிவன்; "பதிமரபிற் பரவிரண்டாஞ் சிவனெனயா வரும்புகலப் பட்டும்" (திருநாகைக்காரோணப்.) சிந்தியா - சிந்தித்து.

௧௧. மருங்கு அலை உடுத்த - பக்கத்தே கடலை உடுத்த;

கருங்கலே யனைத்தும் பெற்ற வாண்டகை யடியேம்நெஞ்சக்
கருங்கலே யுருக்கி யாட்கொள் கவுணியன் மலர்த்தாள்போற்றி. (கக)

திருநாவுக்கரசு நாயனுர்.

மணிவடஞ் சிருக்கு நேமி வரிவளே மலர்க்கை தாங்கிப்
பணிதரு மதனுற் பந்தப் படுபிணி யொழியார் நாண
அணியுழ வாரந் தாங்கி யையனைப் பணிந்து பந்தப்
பிணியொழித் துயர்ந்த ஞானப் பெருந்தகைப் பிரானை யுள்வாம்.(கஉ)

சுந்தரமூர்த்தி நாயனுர்.

காலத்தே துறந்து மெல்லாங் கைவிடுத் தொழிய நீத்தும்
பாலத்தே விழியா னுண்மை பற்றிடார் வருந்தி நிற்க
ஏலத்தேங் குழன்மின் ஞரோ ரிருவரோ டிருந்து முண்மைச்
சீலத்தே நின்ற நாவற் செம்மலேச் சிந்தித் துய்வாம். (கங)

திருவாதவூரடிகள்.

கண்சுமந் தருளு நெற்றிக் கடவுளென் றருளு மென்றே
எண்சுமந் தளவில் பாடு படுபவ ரேங்க வன்னுன்
மண்சுமந் தடியும் பட்டு வடுப்படாத் திருமே னிக்கட்
புண்சுமந் திடவும் வாளாப் பொலிந்திருந் தவரை யுள்வாம். (கச)

சண்டேச நாயனுர்.

(கலிவிருத்தம்.)

எந்தை யேயென் றழுத விராகவன்
சிந்தை யாகுலந் தீர்ந்து சமழ்ப்புற
முந்தை யாய முழுப்பவத் தாளறத்
தந்தை தாடிந் தார்புகழ் சாற்றுவாம். (கரு)

அலே: ஆகுபெயர்; "ஆழி சூழ்காழி" என்பர். கருங்கல்லே உருக்கி.

கஉ. மணிவடத்தையும் சிருக்கையும் உடையவர் பிரமதேவர்; சிருக்கு - ஓமத்தில் நெய்வார்க்கும் அகப்பை. நேமியையும் வளையையும் உடையவர் திருமால்.

கங. பாலம் - நெற்றி. ஏலம் - மயிர்ச்சாந்து.

கச. இச்செய்யுள், "பண்சுமந்த பாடற் பரிசு" (திருவா.) என்னும் செய்யுளைத் தழுவி அமைந்துள்ளது. பாடு - வருத்தம்.

கரு. "எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையே" (கம்ப. அயோத்தி. கிளைகண்டு. 60) என்று இராமன் புலம்பியது காண்க. பவத்தாள்-பிறவியின் அடி; "தந்தைதா ளொடுபிறவித் தாளெறிந்து" திருவிளை.

மற்றை நாயன்மார்.

மூவ ரோது முதலடி யன்புக்கொண்
மூவ ரோதய மூர்த்தியர் முப்பத்து
மூவர் போற்று முதன்மை யறுபத்து
மூவர் தாளு முடிக்கணி யாக்குவாம். (கசு)

அகத்திய முனிவர்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

நெடிய முனிவர் தவச்சூழ்ந்து நிற்பார் பலரும் நாணெய்தக்
கொடிய மதின்மூன் றெரித்தபிரான் குறிய முனியே நமக்கொப்பென்
றடிய மெனுமா லயனுதி யமர ரறிய வுரைத்தருளும்
படியனெனுமோர் தமிழ்முனிபொற் பாதம் பணிந்து பரவுவாம்.(கஎ)

பஞ்சாக்கர தேசிகர்.

(வேறு.)

கூரிய ரடியா ருண்மை குறித்தினி துபதே சித்தல்
சீரிய தன்பே ராகத் திருவுருக் கொண்ட மூர்த்தி
பூரிய ரென்றுஞ் சாராப் புகழ்மிகு துறைசை யெங்கள்
ஆரிய னமச்சி வாய னடிமலர் சென்னி சேர்ப்பாம். (கஅ)

அம்பலவாண தேசிகர்.

மாவடு வகிர்க்கண் ணுரை வாஞ்சித்து நனிமா ழாந்து
நாவடு வுறத்து திக்கும் நலமிலா வெம்மைபு மாட்கொண்
டாவடு துறைக்கண் வாழு மம்பல வாண தேவன்
பூவடு கழற்கெப் போதும் புந்தியைச் செலுத்தி யுய்வாம். (ககூ)

நூல் இயற்றுதற்குக் காரண முதலியன.

பழுதறு பத்தி வாய்ந்து பரம்பரைச் சைவ ராய
உழுதொழில் வேளாண் மாக்க ளொருங்குள முவந்து கூற

கசு. முதல் - சிவபிரான். அன்புக் கொண்மூ - அன்பையுடைய மேகங்கள்.

கஅ. தன்பேர் 'நமச்சிவாய' என்பது. துறைசை - திருவாவடு [துறை.

நூலியற்றுதற்குக் காரணம் முதலியன.

க. தொழுத்தையேன் - அடியேன்.

முழுதுல கேத்துஞ் சீர்த்தி முதல்வில்வா ரணிய மேன்மை
தொழுதகு கல்வி சாலாத் தொழுத்தையேன் பாட லுற்றேன். (க)

அவையடக்கம்.

(தாவுகோச்சகக் கலிப்பா.)

பிரமன்முத லியாறியா மையைமாற்றிப் பெரிதுவந்த
பரமனவிர் பிரமபுரிப் பண்ணவனென் புன்கவியிற்
றிரமன்வழுக் களைமாற்றிப் பெரிதுவக்கு மெனத்தெளிந்தே
வரமனடை யேனணையான் மான்மியம்பா டிடத்துணிந்தேன். (உ)

சிறப்புப்பாயிரம்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

தண்ணியவா னவர்புகழும் பெருமானார் விளத்தொட்டித் தலபு ராணம், நண்ணியவான் புகழ்மிகுமந் நகர்ச்சைவ வேளாளர் நயந்து கேட்பக், கண்ணியவான் றமிழாற்செய் தான்றிரிசி ராமலை யிற் களித்து வாழும், புண்ணியவான் மீனாட்சி சுந்தரநா வலவணியற் புலவ ரேறே. (ங)

ஆகத் திருவிருத்தம் உஉ.

க. திருநாட்டுச் சிறப்பு.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

சிவபிரா னடனஞ் செய்யுஞ் சிதம்பர தலமுன் னாகத்
தவலருங் கீர்த்தி சான்ற தலம்பல தன்னுட் கொண்டு
பவவினை யெவர்க்கு மாய்த்துப் பரகதி யெளிதி னுய்த்துப்
புவனமுற் றேத்த வோங்கிப் பொலிவது சோழ நாடு. (க)

புண்ணிய மூர்த்தி யெங்கும் புண்ணிய தான மெங்கும்
புண்ணிய தீர்த்த மெங்கும் புண்ணிய சாலை யெங்கும்
புண்ணிய மறைக ளெங்கும் புண்ணிய விருப்ப ரெங்கும்
புண்ணிய போக மெங்கும் பொலிவது சோழ நாடு. (உ)

உ. திரம் மன்-திரமாக மன்னிய. வரம் அல்நடையேன்-மேன்மை யல்லாத நடையையுடையேன்; இழிந்த ஒழுக்கத்தை உடையேன்.

க. திருநாட்டுச் சிறப்பு.

உ. தானம் - இடம். புண்ணியசாலை - அறச்சாலைகள்.

நந்தன வனங்க ளெங்கு நகுந்தன வனங்க ளெங்கும்
சுந்தர மடங்க ளெங்குந் தொகுங்கொடை மடங்க ளெங்கும்
மந்திர யாக மெங்கும் வளமலி தியாக மெங்கும்
இந்திர திருவ ரெங்கு மியற்றுகந் திருவ ரெங்கும். (ங)

கங்கையிற் சிறந்த தூய காவிரி மடந்தை யன்ன
மங்கைமுன் னீன்ற சான்ற கொள்ளிட மகண்மற் றன்னாள்
தங்கையென் றுரைக்கு மண்ணித் தையல்கைத் தாய ரொத்துக்
கொங்கையிற் றீம்பால் மானுங் குளிர்புன லருத்து நாடு. (ச)

குளமெலாங் கமலக் காடு குழியெலாங் குளிர்சே தாம்பல்
களமெலாங் கதிர்ச்செஞ் சாலி காலெலாம் வெடிபோம் வாளை
தளமெலாஞ் சிறகர் வண்டு சாலெலாந் தரளக் குப்பை
வளமெலாம் பொலிய வோங்கும் வண்புனற் சென்னி நாடு. (ரு)

நீரெலாஞ் சங்க மூரு நெறியெலாங் கமலஞ் சாயும்
போரெலா மேகந் தூங்கும் பொழிலெலாங் கவிக டாவும்
ஊரெலா மளகை போலு முணவெலா மலிந்து தோன்றிப்
பாரெலாம் புகழ மேவும் படர்புகழ்ச் சோழ நாடு. (சு)

தள்ளரும் புனல்பா யோதை சலஞ்சலம் புலம்பு மோதை
விள்ளருங் கமலக் காடு விளரிவண் டிசைக்கு மோதை
எள்ளருங் கயவாய் மேதி யீர்ம்புனல் படியு மோதை
மள்ளரும் வெருவப் பொங்கி வானள வோங்கு மாலோ. (எ)

அளவில்பைங் கதலி யெங்கு மளவில்பைங் கமுக மெங்கும்
அளவில்செங் கழைக ளெங்கு மளவில்வெண் டாழை யெங்கும்
அளவினெற் கதிர்க ளெங்கு மளவினெற் போர்க ளெங்கும்
அளவின்மாந் தருக்க ளெங்கு மாய்ப்பொலி வதுசோ ணாடு. (அ)

ங. தனத்தை உடைய அன்னங்கள் - மகளிர். கொடைமடம் - வரையாது கொடுத்தல். கந்திருவர் - இசைப்பாட்டை உடையவர்கள்.

ச. "கங்கையிற் புனித மாய காவிரி" (திருமாலை.) காவிரி, கொள்ளிடம், மண்ணி என்னும் மூன்றுக்கும் கைத்தாயருவமை; "சரயு வென்பது தாய்முலை யன்னது" கம்ப. ஆற்றுப்படலம்.

ரு. சேதாம்பல் - செவ்வாம்பல். கால் - வாய்க்கால். தளம் - பூவிதழ். சால் - படைச்சால்.

சு. போர் - நெற்போர். கவிகள் - குரங்குகள்.

எ. விளரி - ஒருபண். கயவாய் - ஆழ்ந்த வாயையுடைய.

அ. கழைகள் - கரும்புகள்.

அறப்பெருஞ் செல்வ ராய வணிகிளர் வேளாண் மாந்தர்
மறப்பெருஞ் செய்கை நீத்து வருவிருந் தெதிர்கொண் டோம்பி
நிறப்பெருஞ் செல்வத் தாழ நிரப்பினர்க் குவந்து நல்கி
உறப்பெரும் போகந் துய்க்க வுறுவளந் தருமந் நாடு. (௯)

ஓவியத் திருவன் னார்த மூடலை யுணர்த்து வாரும்
காவியத் தினிது வாய்ந்த பொருள்பல கருது வாரும்
மாவியப் பெய்த வேட்ட மாதரை மணஞ்செய் வாரும்
பாவியற் புலவர் வேண்டும் பலவுநன் குதவு வாரும். (௧௦)

சீலந்தப் பாது வேதச் செல்வர்கள் பொலித லானும்
கோலந்தப் பாது மன்னர் கோன்முறை நடத்த லானும்
காலந்தப் பாது நன்னீர்க் காவிரி சுரத்த லானும்
பாலந்தப் பாது கண்கொள் பரனடிப் பத்தி யானும். (௧௧)

அன்னநா யகன்பொற் கோயி லாற்றுறுப் பொருமூன் றனும்
அன்னமென் னடையார் கற்பி னணிவழா தமைத லானும்
அன்னமுண் டிடுமென் றார்க்கு மகமகிழ்ந் தளித்த லானும்
அன்னகா வளநீர் நாட்டுக் கடுத்திடு குறையொன் றின்றே. (௧௨)

விரும்புநெற் கதிரைச் சூழு மேதகு கருப்பங் காடக்
கரும்பினைக் கதலி சூழுங் கதலியைக் கமுகு சூழும்
அரும்பிய கமுகைச் சூழு மந்தளிர்த் தேமா வன்ன
பெரும்பெயர்த் தருவைச் சூழும் பெரிதிலாங் கலிகண் மாதோ. (௧௩)

வாவியின் மேதி பாய வாளைமே லெழுந்து துள்ளித்
தாவிவா னூற்றுப் பாய்ந்து சலமொரீஇ மகிழ்ச்சி கூரும்
மேவிய சோழ நாட்டு விரும்பிய வாழ்க்கை யோர்கள்
தேவியன் மேலை நாட்டுச் சிவனுதல் தெரித்தா லென்ன. (௧௪)

௯. நிரப்பினர்க்கு - வறுமையையுடையவர்க்கு.

௧௦. வேட்ட - விரும்பிய.

௧௧. காலந்தப்பாது காவிரி சுரத்தல்: "வான் பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி" (பட்டினப்.) பாலம்-நெற்றி.

௧௨. உறுப்பு மூன்று - நித்தியம், நைமித்திகம், காமியம்; "இனைகரத்து, நாராரும் மூன்றுறுப்புங் குறையாது நடத்துவான்" (திருவிழாப். ௧௨) என்பர் பின். அன்னம் உண்டிடும் - சோற்றை உண்ணுங்கள். காவள நாட்டுக்கு - சோலை வளங்களையுடைய நாட்டினுக்கு.

௧௩. இலாங்கலிகள் - தென்னைகள்.

௧௪. சலம் - கோபம்.

மன்னிய வளமை சான்ற வளவர்கோ னாட்டு மேன்மை
பன்னிய முற்றுங் கொல்லோ பஃறலை யனந்த னாலும்
மின்னிய மணிமா டஞ்சூழ் விளத்தொட்டி நகரின் மேன்மை
துன்னிய பலவுட் சற்றே சொற்றிட லுற்ற மாதோ. (௧௫)

ஆகத் திருவிருத்தம் - ௩௭.

உ. திருநகரச் சிறப்பு.

(கலிவிருத்தம்.)

திங்கண் மேவித் திகழுஞ் சடாடவி
எங்க ளாதன் றிருவரு ளெய்துவான்
கங்க ணான்கினன் காதல் செயுந்தலம்
துங்க மார்விளத் தொட்டித் திருநகர். (௧)

வீழ்ந்து நான்முகன் போற்றும் வியனகர்ச்
சூழ்ந்து மேவுதல் தொல்வழக் கென்றுபார்
போழ்ந்து வாழ்கடல் போந்து வளைந்தெனத்
தாழ்ந்து சோலை வளைந்து தழையுமால். (௨)

வாவி யெங்கு மருவி மகளிர்தம்
ஆவி யன்ன கொழுநரோ டாடுவார்
காவி மேனிய னுங்கோ கநகையும்
மேவி யாழியி னூடல் விழைந்தென. (௩)

வாடு நுண்ணிடை மாமுலை மங்கையர்
ஊடு வார்பொற் சிலம்பி னொலியெழக்
கூடு வார்மணி மேகலைக் கூக்குரல்
நீடு மாறு நிரம்பு மனைதொறும். (௪)

திருந்து வேற்கட் சிலைநுதன் மங்கைமார்
விருந்து நோக்கி மிகமகிழ் வெய்தலும்

௧௫. பன்னிய - சொல்லுதற்கு. அனந்தனாலும் முற்றுங் கொல்லோ.

உ. திருநகரச் சிறப்பு.

௧. கங்கள் நான்கினன் - பிரமன்; கம் - தலை.

௩. காவி மேனியன் - திருமால். கோகநகை - திருமகள்.

அருந்து மாறினி தட்டுப் படைத்தலும்
பொருந்து வார்மனை தோறும் பொலிந்தரோ. (௫)

பொன்செய் மாளிகை மேற்பொலி மங்கையர்
மின்செ யந்திரு மேனி விளக்கமே
கொன்செய் பேரிருள் கூட்டுண் டொளிரவும்
என்செய் வானுதிப் பான்கதி ரோனென்பான். (௬)

புலந்த மாதர் களைந்தெறி பூண்களும்
கலந்த மாதர் களைமலர் மாலையும்
நிலந்த வாத நெருக்குதிர் பூக்களும்
நலந்த வாத நகுதெருக் குப்பையே. (௭)

அந்தணர் முதலியோர்.

வேத வேள்வியர் மேவு மிருக்கையும்
ஓத ஞாலம் புரப்பா ருறையுளும்
போத நாய்கர் பொருந்து கிருகமும்
காதன் மேவ நெருங்கிக் கஞலுமால். (௮)

வேளாளர்.

இனைய மூவரைத் தாங்கு மியல்பினர்
புனைய மேவு முழுதொழில் போற்றுவார்
நினைய வாம்பெருஞ் செல்வ நிறைவினர்
அனையர் வாழு மனைக ளளவில. (௯)

ஓதி நூன்முற் றுணர்ந்த தெளிவினர்
நீதி சால்வழி நிற்குந் திறத்தினர்
ஆதி நாயக னஞ்செழுத் துன்னுவார்
பூதி சாதனம் போற்றிப் பொலிபவர். (௧௦)

துலங்கு கண்மணி பூண்டுநஞ் சோதியுற்
றிலங்கு கோச மினிதருச் சிப்பவர்
மலங்கு தீர்ந்த மனத்துவே ளாளரால்
இலங்கு மந்நக ரெற்றைக்கு மோங்கியே. (௧௧)

௬. "மணிவிளக் கல்லன மகளிர் மேனியே" (கம்ப.) கூட்டுண்டு-கொள்ளைகொண்டு.

௯. அனையர் - வேளாளர்.

௧௦. சாதனம் - உருத்திராக்கம்.

௧௧. கோசம் - சிவலிங்கப்பெருமானை. மலங்கு - கலங்குதல்.

தண்ணீர்ப்பந்தர் முதலியன.

பிரிய நீர்நிறை பந்தரும் பேணுதற்
குரிய வாய சுவைய வுணுக்களும்
அரிய யாவு மடாறச் சாலையும்
புரிய மேவுமப் பொன்னக ரெங்கணும். (௧௨)

பன்னு மேன்மைப் பரம்பரை யார்நலம்
முன்னும் வாய்மை மொழிதவ ருதவர்
மன்னு சீரினை யான்குடி மாறனார்
என்னு மாறியல் பாக விளங்குவார். (௧௩)

நகரம்.

திரும கட்குத் திருவு மனையவள்
மரும கட்குயர் கல்வியும் வாகையே
தரும கட்கிக ளுந்தரு மம்புவி
ஒரும கட்கணி யாயவவ் வூரரோ. (௧௪)

திருக்கோயில்.

ஒருமை சான்றவவ் வூர்நடுக் கோயிலுள்
இருமை சான்றவ ரெய்திட வாழுமால்
அருமை சான்ற கரும்பொ டளாவியே
பெருமை சான்ற பிரம புரீசனே. (௧௫)

ஆகத் திருவிருத்தம் - ௫௨.

௩. நைமிசப் படலம்.

வரலாற்றுச் சுருக்கம்.

[கங்கைக்கரையிலுள்ள நைமிசவனத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த சவுநகர் முதலிய முனிவர்கள் ஒருங்குசேர்ந்து பன்னிரண்டு வருடத்தில் நிறைவேற்றக்கூடிய யாகமொன்றைச் செய்வாராயினர். அப்பொழுது சூதமுனிவர் அங்கே வரவே, முனிவர்கள் அவரை

௧௪. மருமகளென்றது கலைமகளை. வாகையே தருமகள் - துர்க்கை; வாகை - வெற்றி.

௧௫. சான்றவர் இருமை எய்திட; இருமை - இம்மை மறுமைப் பயன்கள். கரும்பு - கரும்பிரதநாயகி.

வணங்கி, "அடியேங்கள் செய்த சிவபூசையின் பயனாக இப்பொழுது எழுந்தருளினீர்; இல்லையாயின் உம்முடைய நல்வரவு எமக்குக் கிடைத்தற்கு அரியது. முன்பு பல தலங்களின் பெருமையை அருளிச்செய்தீர்; இன்னும் அற்புதமான ஒரு தலத்தைச் சொல்லவேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்கள். "அங்ஙனமே சொல்லுவேன்" என்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

"வியாச முனிவர் இயற்றிய புராணங்கள் பதினெட்டனுள் சிவபுராணங்கள் பத்து. அவற்றுள் ஒன்றாகிய சைவ புராணத்தில் வில்வாரணியத்தின் மேன்மை கூறப்பட்டிருக்கின்றது. அதனை அவ்வியாசர் கூற நான் அறிந்தேன்.

"சோழநாட்டில் திருவானைக்காவிற்கு வடகிழக்கில் நான்கு யோசனை அளவிலும், மண்ணிநதி, கொள்ளிடமென்னும் இரண்டாறுகளுக்கும் இடையிலும், கீழ்கடலுக்கு மேற்கே மூன்று யோசனைத் தூரத்திலும் அத்தலம் இருக்கின்றது. மூர்த்தி தலம் தீர்த்தமென்னும் மூன்றும் அங்கே அமைந்துள்ளன. அதற்கு விளத்தொட்டி, பிரமபுரி என்னும் பெயர்களும் உண்டு. அகத்தியமுனிவர் அத்தலத்திற்கு உலோபாமுத்திரையோடு சென்று பிரமகற்பத்திற் பாதியளவு இருந்து தவஞ்செய்து ஒரு சிவலிங்கப் பெருமானைத் தாபித்து அருள்பெற்றார். நினைத்தவையெல்லாம் பெறவேண்டின் அத்தலத்தை அடையவேண்டும்.

"வைரவக்கடவுள் அங்கே சென்று பூசித்தனர். அதனைக்கூறுவேன்" என்றார்.]

நைமிசாரணியச் சிறப்பு.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

மருவள மலிநீர்க் கங்கை மாநதிக் கரையின் பாங்கர்
உருவள மொருங்கு கொண்ட வும்பர்தம் பொழிலு நாண
அருவளத் தருக்கண் மல்கி யணிபெறத் தளிர்த்துப் பூத்து
நறுவளம் பொழியுந் தூய நைமிசா ரணிய மோங்கும். (க)

குருந்துமந் தாரங் கோங்கு கூவிளம் பலாசு நாவல்
செருந்துசெங் கடம்பு வெட்சி செண்பகம் புளிமா தேமா
பொருந்துமின் சுளைய பாகல் புளிவிளா களாவி ருப்பை
திருந்துமுந் திரிகை யாத்தி தேக்ககி லதவு சந்து. (உ)

ங. நைமிசப் படலம்.

க. நறு வளம் - தேனின் மிகுதி.

உ. செருந்து - செருந்தி. பாகல் - பலா. அதவு - அத்தி.

வழைமகிழ் மருது புன்னை மாதவி கடுக்கை யோமை
விழைதரு பாரி சாதம் வெட்பாலை நரந்த நொச்சி
கழைகடு வதரி தெங்கு கண்டில்சம் பீரந் தாலம்
தழைமடற் கமுகு நெல்லி முதற்பல தருக்கண் மல்கும். (ங)

தோய்தரா விடத்துந் தோயுஞ் சூரியன் கதிர்க டுய்மை
மாய்தரா முனிவர் மேனி வருடுத றகுங்கொ லோவென்
றாய்தரா வவைசா ராம லகற்றிடத் தழைந்து துன்றி
ஏய்தரா நிற்கு மென்று மிசைத்தவக் கான மம்மா. (ச)

அல்லியம் புண்ட ரீக மான்றகோ கநகம் வாசம்
புல்லிய குளிர்சே தாம்பல் பொலியுமுற் பலமுன் னான
பல்லியன் மலரும் பூத்துப் படிந்தவர் பாவம் போக்க
வல்லிய லமைந்த தீர்த்த மெண்ணில வயங்கு மாங்கண். (ரு)

முனிவர் சிறப்பு.

அலர்மகன் விசேட மாக வமைத்திடப் பட்ட வன்ன
மலர்வனஞ் செறிந்து வாழ்வார் மனத்திடை மாசொன் றில்லார்
பலர்புகழ் தெய்வ நீற்றுச் சாதனப் படிமம் வாய்ந்தார்
உலர்சரு காதி நேர்ந்த துண்டுறப் பொலியு நீரார். (சு)

மறைமுதற் கலைகள் யாவு மயக்கற வுணர்ந்த வல்லார்
கறையறு நெறிவ ழாது கடுந்தவ மியற்று நல்லார்
அறைதரு மயன்மா லாதி யமரரைப் பொருளாக் கொள்ளார்
நிறைசிவ போகந் துய்க்கு நீர்மையே பொருளாக் கொண்டார். (எ)

தண்ணிய குணத்து மேன்மைச் சவுனக முனிமுன் னான
புண்ணிய முனிவ ராய பூதிசா தனத்தர் கூடி
அண்ணிய மகிழ்ச்சி பொங்க வாண்டுபன் னிரண்டிற் செய்யும்
திண்ணிய பலத்தா லோங்குந் திருத்தகு யாகஞ் செய்வார். (அ)

ங. வழை - சுரபுன்னை. மாதவி - குருக்கத்தி. கடுக்கை - கொன்றை. நரந்தம் - நாரத்தை. கழை - மூங்கில். கடு - கடுமரம்; இதன்காய் கடுக்காய். வதரி - இலந்தை. கண்டில்: ஒரு மரம். சம்பீரம் - எலுமிச்சை. தாலம் - பனை.

ச. ஆய்தரா - ஆராய்ந்து. அவை - அக்கிரணங்கள்.

ரு. அல்லி - அகவிதழ். புண்டரீகம் - வெண்டாமரை. கோகநகம் - செந்தாமரை. உற்பலம் - நீலோற்பலம்.

சு. படிமம் - தவவேடம்.

அ. யாகம் - இங்கே தீர்க்கசத்திர யாகம்.

வளர்சிறப் புடைய தாய மகமினி தியற்றும் போது
கிளர்நிக மாக மங்கள் கேடில்சீர்ப் புராண மாதித்
தளர்வற வுணர்ந்த மேலோன் சங்கரற் கன்பு பூண்டோன்
விளர்தபு மறிவின் மிக்கோன் மேலவர் புகழுஞ் சீரோன். (கூ)

துதிமிகு கருணை வாய்ந்த சூதமா முனிவன் றேன்ற
மதிமிகு முனிவ ரெல்லா மகிழ்ந்தெதிர் கொண்டு சென்று
கதிமிகு தயைபி னெய்தக் கண்டன மென்று தாழ்ந்து
விதிமிகு பூசை யாற்றி விழைந்திருத் தினரி ருந்தார். (க0)

வத்திர மலர்ந்தி யாங்கண் மகஞ்செயுந் தருணத் துற்றாய்
புத்திர ஞகாத் தந்தை பொலஞ்சிலம் பொலிக்கும் பாதம்
பத்திர மாதி கொண்டியாம் பூசிக்கும் பலத்தா லன்றோ
சித்திர மனையா யன்றே லரியதுன் சேவை யென்றார். (கக)

பற்பல தலத்தின் மேன்மை பகர்ந்தனை முன்னு மின்னும்
அற்புதம் பயக்கு மேன்மை யொருதல மறைய வேண்டும்
புற்புதப் பவஞ்ச வாழ்க்கைப் பொய்ம்மைமற் றதனை நீங்கிச்
சொற்புகழ் ஞான வாழ்க்கை யுறவெனத் தொழுதி ரந்தார். (கஉ)

முனிவரர் விருப்பிற் கேட்க முகமுட னகம லர்ந்து
கனிதரு மன்பு பொங்கக் கலையெலா முணர்ந்தீ ரென்னைத்
தனிதர வினைய வாறென் பால்வைத்த தயையா லன்றோ
இனியது புகல்வே னென்று சூதனன் கியம்ப லுற்றான். (கங)

வெள்ளியங் கயிலை மேய விமலனா ரருள்பெற் றோங்கும்
வள்ளிய நந்திப் புத்தேண் மலரடி வழுத்திப் பாசந்
தள்ளிய சனற்கு மாரன் றாமரைப் பதங்க ளுளும்
உள்ளிய வியாச மேலோ னுறுபெருங் கருணை யாலே. (கச)

பண்ணிய புராண மீரோன் பானவற் றுட்சி றந்த
தண்ணிய புராணம் பத்தே சங்கரன் மகிமை கூறும்

கூ. நிகமம் - வேதம். விளர் - அறியாமை.

கக. வத்திரம் - முகம். புத்திரஞகாத் தந்தை - சிவபெருமான்; "யாவர்க்கும், தந்தைதாய் தம்பிரான் தனக்கஃதிலான்" (திருவா. திருச்சதகம், 47.) பத்திரம் - இலை. பலத்தால் உற்றாய்.

கஉ. புற்புதம் - நீர்க்குமிழி. உற அறையவேண்டும்.

கங. இனி அதனைப் புகல்வேன்.

எண்ணிய வவற்றுட் சைவத் தியல்வில்வா ரணிய மேன்மை
நண்ணிய தனையான் கூற நானினி துணர்ந்த துண்டால். (கரு)

(ஷை வேறு.)

தாணிபுகழ் சோணாட்டிற் றிருவானைக் காவினுக்கீ சான திக்கில், முரணியலா நான்குயோ சனையளவின் மண்ணிநதி முகந்து முத்தோ, டிரணியமொண் டெறியலைநீர்க் கொள்ளிடமிவ் விரண்டாற் றுக் கிடையே கீழ்பால், அரணியல்வா ரிதிமேல்பான் மூன்றுயோ சனையளவி னமைந்து தோன்றும். (கசு)

அத்தலமே மூர்த்திதலந் தீர்த்தமென வொருமூன்று மமைந்து தோன்றும், எத்தலமு மதையொவ்வா வெண்ணினுங்கேட் கினு நினைத்த வெல்லா முற்றும், முத்தலமும் விரும்பும்விளத் தொட்டி யெனு மொருபெயரு மொழியு நாளும், கைத்லதநெல் லியின்விளங்கு மதைப்பிரம புரியெனவுங் கரைவர் யாரும். (கஎ)

புண்ணியவண் டமிழ்மணக்குஞ் செய்யவாய்க் குறுமுனிவன் பொற்பார் கற்பு, நண்ணியசீ ருலோபாமுத் திரையொடுமப் பெருந் தலத்தை நண்ணி யுள்ளத், தெண்ணியவொன் றினிதடைவான் பிரமகற்பத் தொருபாதி யிருந்து நோற்றான், அண்ணியவோ ரிலிங்கமமைத் தரனருள வானந்த மடைந்து வாழ்ந்தான். (கஅ)

முந்தைவினை யறவேண்டி னிந்திரனு தியர்போக முயங்க வேண்டின், நிந்தையறு மெய்ஞ்ஞானம் பெறவேண்டி னிரப்புநோய் நீங்க வேண்டிற், கந்தையடு கபோலமதக் களிற்றரசா கிடவேண்டிற் கவலா தின்றும், சிந்தைநினைத் தவையெல்லா முறவேண்டி னத் தலமே சேர வேண்டும். (ககூ)

அன்னதலப் பெருமையெவ ரறையவலர் வயிரவனு ரங்கு மேவி, உன்னவினி தாகியபுண் ணியதீர்த்தம் படிந்தரனு ருவக்கும்

கரு. அனையான் - வியாசமுனிவர்.

கசு. இரணியம் - பொன். அரண் - பாதுகாப்பு.

கஎ. முத்தலம் - மூன்றுலகங்கள். பெயரும்: உம்மை இறந்தது தழீஇயது.

ககூ. நிரப்புநோய் - வறுமைத் துன்பம். கந்தை - கட்டுத்தறியை. களிற்றரசு ஆகிட - யானையையுடைய அரசன்ஆக.

உ0. வாதராயணன் - வியாசமுனிவர்.

பூசை, முன்னரியுற் றினரதனை வாதரா யணமுனிவன் முனியா
தன்று, சொன்னபடி நுமக்குரைப்பேன் கேண்மினென மேலுரைப்
பான் சூத மேலோன். (௨0)

ஆகத் திருவிருத்தம் - எ௨.

ச. வயிரவபூசைப் படலம்.

கதைச் சுருக்கம்

[ஒரு காலத்தில் தேவர்கள் யாவரும் கூடியிருந்தபொழுது, 'இந்த அண்டம் யாரை முதலாக உடையது' என்று ஒரு கேள்வி எழுந்தது. பிரமதேவர் தாமே முதல்வரென்றார். திருமால் தாமே முதல்வரென்றார். இங்ஙனம் ஒருவரோடொருவர் பிணங்கிநிற்கையில் வேதம் அவர்கள் முன்தோன்றிப் பல நியாயங்களைக் கூறிச் சிவபிரானே யாவருக்கும் முதல்வரென அறிவுறுத்தியது. பின்னும் அவர்கள் தருக்கு ஒழியாமல் நிற்க, பிரணவம் வந்து சிவபெருமானுடைய முழுமுதற்றன்மையை எடுத்துக் கூறியது. பின்னரும் அவர்கள் அடங்காராகி இருந்தனர்.

அப்பொழுது சிவபெருமான் ஒரு சோதிவடிவமாகத் தோன்றினர். திருமால் அஞ்சி அகன்றார்; பிரமதேவர் அஞ்சாராகி நின்றார். அந்தச் சோதியின் கூற்றிலிருந்து வயிரவக்கடவுள் தோன்றி, தருக்குற்ற பிரமதேவருடைய ஐந்து தலைகளுள் ஒன்றைத் தம் நகத்தாற்கிள்ளிஎறிய அவர் கீழே விழுந்தனர். பின்பு சிவபெருமான் திருவருளால் உயிர் பெற்றெழுந்து தாம் அறியாமற் செய்ததற்கு இரங்கி அச் செயலுக்கு ஒரு பிராயச்சித்தத்தை வேண்டினின்றார். அப்பொழுது சிவபிரான், "மேருமலையில் முன்பு நீ பூசித்த சிவலிங்கத்தைக் கொண்டு சென்று வில்வாரணியத்தில் அகத்தியலிங்கத்திற்குத் தென்பால் பிரதிஷ்டை செய்து பூசித்து அங்கே இயல்பாக உள்ள சுயம்புலிங்கத்தையும் வழிபடுவாயாக. அப்பொழுது நீ நல்லருள் பெறுவாய்" என அருளிச்செய்யக்கேட்ட பிரமதேவர் மேருவை நோக்கிப் புறப்பட்டார்.

அப்பால் சிவபிரான் தம் அருகில் நின்ற வயிரவக்கடவுளை நோக்கி, "நீ, தருக்குற்ற தேவர்களுடைய இரத்தத்தை உன் கையிலுள்ள கபாலத்திற் கொள்வாயாக. பின் வில்வாரணியம் சென்று நம்மைப் பூசித்து அத்தலத்தைக் காத்து வருக" என்று பணித்து மறைந்தருளினர். வயிரவக்கடவுள் அவர் கட்டளைப்படியே தேவர்களுடைய தருக்கை அடக்கிப் பின்பு வில்வாரணியம் சென்று கொள்ளிடநதியில் நீராடி

வில்வமூலலிங்கத்தைப் பூசித்து வழிபட்டார். வில்வவனேசர் அவர் முன்தோன்றி, "நீ இந்தத்தலத்தில் நம் கோயிலுள் இருந்து காவல் புரிந்து வருக" என அருளி மறைந்தார். அங்ஙனமே வயிரவக்கடவுள் அங்கே எழுந்தருளியிருந்து க்ஷேத்திரக் காவல் பூண்டு தம்மை வழிபட்டோர்க்கு வரங்கள் வழங்கி வரலானார்.

அவ்வயிரவக்கடவுள் நீராடிய கொள்ளிடத்துறையில் ஸ்நானம் செய்வார், இம்மைமறுமைப் பயன்களை எய்துவார்கள். அத்துறை வயிரவத்துறையென வழங்கும்.]

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

முன்னமோர் கற்பந் தன்னின் மொய்த்துவண் டிரைக்குந் தண்டார்
மின்னகு மோலி வானோர் விண்முழு தாளி வேதன்
இன்னகைத் திருவாழ் மார்ப னியாவரு மொருங்கு தொக்கார்
அன்னபோ தமர ரண்டம் யார்முதற் றெனவி னுவ. (க)

நறவுவட் டெடுத்துப் பாயு நறுவிரைக் கமல மேய
அறவனெப் புவனத் திற்கு மதிபனு னென்றெ ழுந்தான்
மறமலி திகிரிச் செங்கை மாயவன் முதல்வ னீயோ
உறமலி யெவைக்கு நானே யொருமுத லென்றெ ழுந்தான். (௨)

ஆரண முழுதுஞ் சொற்றே னனைத்தையும் படைத்து நிற்பேன்
நாரண வுனையு நானே படைத்தனன் ஞாலங் காணப்
பூரண முதல்யா னன்றி யாருளர் புவனத் தென்று
காரண முணரா திவ்வா றுரைத்தனன் கமல யோனி. (௩)

உன்னையான் படைத்தே னெல்லா மொருங்களித் திடுவேன் வேதம்
என்னையே பிரம மென்னு மெச்சத்தின் முதலு நானே
பின்னையா ரருளால் வைய நிலைபெறும் பெரிதோ ரென்று
தன்னையோ ராது மாய னிவ்வகை சாற்றி னானே. (ச)

ச. வயிரவபூசைப் படலம்.

க. அண்டம் யார் முதற்று - உலகம் எந்தத் தேவரை முதலாக உடையது?

௨. நறவு உவட்டெடுத்து - தேன் பெருக்கெடுத்து. அறவன் - பிரமன்; எழுவாய். மாயவன்: எழுவாய்.

௩. கமல யோனி - பிரமன்.

ச. எச்சம் - யாகம். பெரிது ஓர்; ஓர் - ஓர்வாயாக.

௩

ஒருவருக் கொருவ ரிவ்வா றுரைத்தனர் கலாய்த்த காலைப்
பருவரு மமர ரஞ்சி யிரிந்தனர் பரிந்த வேதம்
பொருவரு முருவங் கொண்டு புகர்மலச் சேற்றுண் மூழ்கி
ஒருவரு மிருவர் முன்னும் வந்திஃ துரைக்கு மாலோ. (ரு)

மங்களை கூற்றிற் றோன்றி வருமொரு நீயு மைந்து
கங்களை யுடைய நீயுங் காரணப் பிரம மாகீர்
திங்களை முடியிற் சூடித் திரைக்கட லெழுந்த நஞ்சுண்
டுங்களை யன்று காத்த வொருவனே பிரம மாவான். (சு)

எவனுயிர்க் குயிராய் நிற்போ னெவன்மகத் திறைவ னாவோன்
எவனுமைப் படைத்துக் காப்போ னெவன்பிறப் பிறப்பி லாதோன்
எவன்மல பந்தஞ் சிந்தி யின்பம்யா வருக்கு மீவோன்
அவனொரு சிவனே யோர்மி னனையனே பிரம மாவோன். (எ)

ஒருசிறு துரும்பா லுங்க ளூறுவலி மாய்த்தான் யாவன்
இருவருந் தேட வோங்கி யெழுந்துமுன் னின்றான் யாவன்
வெருவரு விசுவா தீதன் விசுவசே வியன்மற் றியாவன்
அருவுரு வொருமா தேவ னனையனே பிரம மாவோன். (அ)

மங்கையைப் புணர்ந்தா னென்று மக்களை யுயிர்த்தா னென்றும்
உங்களி லொருவ னாக வுன்னுதன் மடமைப் பாற்றென்
றங்கண்மா மறையு ரைத்து மனையரே யாத லோர்ந்து
பொங்குமோ ருருவின் வந்து பிரணவம் புகலு மாதோ. (கூ)

எமக்குநா யகன்பல் லண்ட மெவைக்குநா யகன்மா லுண்ட
உமக்குநா யகனெண் ணில்லா வுயிர்க்குநா யகன்சே வித்தல்

ரு. கலாய்த்த - சண்டையிட்ட. பரிந்த - வருந்திய. ஒருவரும் - நீங்குதல் இல்லாத; ஒருவல் - நீங்குதல். வேதம் உரைக்கும்.

சு. மங்களை - சக்தி. ஐந்துகங்களை உடைய நீ யென்றது பிரமனை ; கம் - தலை.

அ. ஒரு சமயம் தேவர்களுள் ஒவ்வொருவரும் தாம் தாமே தலைவரென்று தருக்குற்றபொழுது சிவபெருமான் ஒரு யக்ஷ வடிவங்கொண்டு தோன்றி ஒரு துரும்பை நட்டு அதனை அசைக்குமாறு கூறத் தேவர்கள் அங்ஙனம் செய்ய இயலாமல் சிவபிரானே முதல்வரென்றுணர்ந்தனர் ; கந்தபுராணம், காமதகனப். 41-ஆவது செய்யுளைப்பார்க்க.

க0. மாலுண்ட - மயக்கங்கொண்ட. ஒரும் - உணருங்கள். சேவித்தல் சுமக்கும் நாயகன் - எல்லாருடைய வணக்கங்களையும் ஏற்றுக்

சுமக்குநா யகன்வெம் பாசந் தொலைக்குநா யகனால் வேதம்
தமக்குநா யகனென் றோருஞ் சங்கரப் பிரபு தன்னை. (க0)

நிருமல னிருவி கார னிராமய னிட்க ளங்கன்
பொருவினிர்க் குணனா லம்பம் பொருந்திடா னிரஞ்ச னன்சீர்
மருவிய சுவேச்சை யாளன் வரவுபோக் கிறந்த முத்தன்
ஒருவருங் கருணை யாள னொருபர சிவனே யோர்மின். (கக)

மற்றவன் மாயை யாலே மயங்கினீர் மயக்க மேன்மேல்
உற்றநீர் பிரம மாகீ ருண்மையா லுண்மை யாலென்
றற்றமில் பிரண வந்தா னறையவு மனைய ரேயாய்
முற்றவும் வெகுளி மூண்டு நிந்தையு மொழிந்தா ரன்றே. (கஉ)

ஆயதோர் பொழுது கோடி யாதித்த ருதித்தா லென்னச்
சேயவான் சோதி யோடு சிவபரஞ் சோதி தோன்ற
மாயன்மேல் விளைவ தோர்ந்து நடுங்கியோட் டெடுத்தான் மாறு ;
மேயவே தாவு மைந்தா வருகென விளித்து நின்றான். (கங)

பொலிதரு சோதி கூற்றிற் பொங்குவெஞ் சூல மாதி
வலிதரு படைகை யேந்தி வயிரவப் புத்தே டோன்றி
ஒலிதரு முழக்கிற் றீய நடுத்தலை யுகிராற் கிள்ள
மெலிதரு திறத்த னாகி விரிஞ்சன்மண் மீது வீழ்ந்தான். (கச)

உம்பர்தம் பெருமான் கோப மொருவிமற் றவனை நோக்க
நம்புயிர் பெற்றெ ழுந்து நான்முக னாகி நின்றான்
அம்பிகா பதிநீ தானே மறைபெரும் பிரம மென்ன
வம்புசான் மலரின் மேலான் மலரடி பற்றி வீழ்ந்து. (கரு)

புன்மையேன் செய்த குற்றம் பொறுத்தருள் செய்தி யெய்யாத்
தன்மையா லொருங்கிவ் வாறு தலைதடு மாறு நின்றேம்

கொள்ளும் தலைவன்; திருநாகைக் காரோணப், நாட்டுப். 27-ஆம் செய்யுளைப் பார்க்க.

கக. ஆலம்பம் - பற்றுக்கோடு.

கஉ. உண்மை உண்மை : அடுக்கு ; ஆல் : அசை. அனையரேயாய் - முன்னுள்ள இயல்பையே உடையவர்களாகி.

கங. சேய - சிவந்த.

கச. சோதி கூற்றில் - சோதியின் அம்சத்தில். உகிர் - நகம்.

கசு. எய்யா - அறியாத.

நன்மையா லுணரேம் பட்டா னன்குணர்ந் திடுவோ மென்று
மென்மைவா சகத்தா லந்த விமலனை யுவப்புச் செய்து. (கசு)

பாவியேன் பிழைக்குச் சென்னி பறித்தது போதா தன்பர்
ஆவியே யனையாய் வேறு மாற்றுமோர் கழுவாய் வேண்டும்
தேவியோர் பாகங் கொண்ட தேவமா தேவ நாயேன்
மேவிநன் காற்றி யுய்ய விளம்புதி யருளி னென்றான். (கஎ)

என்றலுங் கருணை பொங்க வெம்பிரா னருளிச் செய்வான்
நன்றலர்த் தவிசின் மேலோய் நலமலி சுவண மேருக்
குன்றகத் தமைந்து நீமுன் றொழுதநங் குறியைக் கொண்டு
பொன்றலில் வளமை வாய்ந்த பொன்னிநன் னாடு சார்ந்து. (கஅ)

ஆருயிர்க் கின்ப மென்று மருளிநா மமருந் தானம்
சீரிய ஞானம் வேண்டிச் செந்தமிழ் முனிவன் சென்றே
ஓருநம் மிலிங்க பூசை யுண்மையிற் செய்த தானம்
தேருமத் தலம்யா தென்னிற் றிகழ்வில்வா ரணிய மாமால். (ககூ)

அன்னமா தலத்தை மேவி யகத்தியன் பதிட்டை செய்த
என்னவும் வழங்கா நிற்கு மிலிங்கத்தின் றென்பா லாக
உன்னரு மிலிங்கந் தாபித் தோங்குநஞ் சுயம்பு லிங்கம்
தன்னைமுன் பூசை யாற்றிப் பின்பது தனையும் பூசி. (உ0)

சொற்றவிக் குறியி ரண்டுந் தொழுதுபூ சித்து வைகின்
உற்றவெம் பாத கந்தீர்ந் தொழிதரும் போதி யென்று
கொற்றவெள் விடையான் கூறக் குலமலர்த் தவிசின் மேலான்
உற்றபே ருவகை யோடு பணிந்தொரு மேரு வுற்றான். (உக)

தாமரைக் கிழவ னேகத் தன்மருங் கிறைஞ்சி நின்ற
நாமவெஞ் சூலச் செங்கை வடுகனை நயந்து நோக்கிக்
காமரு மைந்தா நீயக் கபாலங்கைக் கொண்டு வெய்ய
தீமனத் தருக்கர் மேனி செறிந்தநெய்த் தோர்க வர்ந்து. (உஉ)

கஎ. ஆற்றும் ஓர் கழுவாய் - செய்யப்படும் ஒரு பிராயச்சித்தம்.

கஅ. அலர்த்தவிசு - தாமரைமலராகிய ஆதனம். சுவணம் - தங்கம். குறி - சிவலிங்கப் பெருமான்.

ககூ. செந்தமிழ் முனிவன் - அகத்தியர்.

உ0. என்னவும் - எவற்றையும். செய்த இலிங்கத்தின்.

உக. ஒழிதரும் : முற்று.

உஉ. வடுகன் - வயிரவர். நெய்த்தோர் - இரத்தம்.

கஞ்சனுக் குரைத்த வில்வக் கானத்தை நாடிச் சென்று
நெஞ்சநெக் கங்கு நம்மை நிரம்புறப் பூசை யாற்றி
எஞ்சலி லனைய தானம் பரித்தினி திருத்தி யென்று
வஞ்சமில் லடியா ருள்ள மறைந்தன னிறைந்த சோதி. (உங)

காரியு மவணின் றேகிக் காகுத்தன் முதலா யுள்ளோர்
பேரியன் மேனி நெய்த்தோர் பெருக்கற வடித்து வாங்கிச்
சீரிய வருளுஞ் செய்து செருக்குளா ரில்லை யென்று
பூரிய ரணுக வொண்ணாப் பொன்னிநன் னாடு சேர்ந்தான். (உச)

வடதிருக் காவி ரிக்கு மண்ணிக்கு மிடையே வில்வ
அடவியை யெதிரே கண்டா னனந்த மேன்மேற் பொங்க
இடவிய வதனுட் புக்கா னிமையவர் பிரானை மன்றுள்
நடநவில் வானைக் கண்டு நன்றடி பணிந்து வீழ்ந்தான். (உரு)

வருவட திருக்கா வேரி மாநதி நறுநீ ராடிக்
கருவட முளைத்த தெய்வக் கண்மணி நீற ணிந்து
பெருவட முலையாள் பாகப் பிரானைநான் முனிவர்க் காக
ஒருவட மமர்ந்த கோவைப் பூசிப்பா னொருப்பட் டானே. (உசு)

மஞ்சனஞ் சாந்தம் வில்வ மலர்தளிர் தூபந் தீபம்
எஞ்சலில் கனிகா யாதி யிவ்வுப கரணங் கொண்டு
மஞ்சிவர் வில்வக் கான மன்னிய மணியை வாய்மை
துஞ்சிய வாக மங்கள் சொற்றவா றருச்சித் தானே. (உஎ)

சங்கரா போற்றி போற்றி சம்புவே போற்றி போற்றி
பொங்கரா வணிந்தாய் போற்றி புண்ணியப் பொருளே போற்றி
வெங்கரா சலத்தின் வன்றோன் மேனிமேற் போர்த்தாய் போற்றி
துங்கரா னவர்சூழ் வில்வ கானத்துச் சுடரே போற்றி. (உஅ)

காலனைக் கடிந்தாய் போற்றி காமனைப் பொடித்தாய் போற்றி
சீலமெய்த் தவத்தார் நெஞ்சந் தீர்தராச் சுடரே போற்றி
கோலமெய்ப் பொருளே போற்றி கோதையோர் பாகா போற்றி
ஞாலமொத் திறைஞ்சும் வில்வ கானத்து நம்பா போற்றி. (உகூ)

உங. பரித்து - பாதுகாத்து.

உச. காரி - வயிரவர். காகுத்தன் - திருமால். பூரியர் - கீழோர்.

உரு. வடதிருக்காவிரி - கொள்ளிடம். இடவிய - விசாலமுடைய.

உசு. கரு அட - பிறவியைத் தொலைக்க. பெருவடம் - பெரியமாலை. ஒரு வடம் - ஆலமரம்.

எனத்துதி புரிந்து முந்நா ளிங்ஙனம் பூசை யாற்றிக்
கனத்தினுங் கரிய கண்டன் காரிமுன் ருேன்றி வில்வ
வனத்தினந் தளியு ளென்றும் வைகிமா ருத காப்பும்
உனத்தினம் புரிதி யென்ரு ஞேங்கொளி யிலிங்கம் புக்கான். (௩0)

தளர்வறு கருணை மேன்மைத் தம்பிரா னுரைத்த வாறே
கிளரொளி வடுகப் புத்தேள் கேத்திரக் காவல் செய்து
வளருமன் புடையார் வேட்ட வரமெலா மினிது நல்கி
உளரும்வண் டினஞ்சூ ழன்ன கானத்தே யுறையு நாளும். (௩௧)

அருள்பொலி வடுகப் புத்தே ளாடிய துறைநீர் தோய்வார்
மருள்பொலி மனத்த ரேனும் வயங்குஞா னம்பெற் றுய்வார்
பொருள்பொலி செல்வத் தாழ்வார் புத்திரர்ப் பெறுவா ரீற்றின்
இருள்பொலி கண்டத் தெங்கோ னிணையடி நீழல் வாழ்வார். (௩௨)

ஆகத் திருவிருத்தம் - ௧0௪.

---

௫. வேணுகோபாலபூசைப் படலம்.

கதைச் சுருக்கம்.

[தாமே முதல்வரெனத் தருக்கிப் பின்பு வயிரவக் கடவுளால் அடங்கிய திருமால் தாம் செய்த பிழையை உணர்ந்து இரங்கிக் கைலையை அடைந்து சிவபரஞ்சுடரை வணங்கித் தாம் செய்த பாதகத்திற்கு ஒரு பிராயச் சித்தத்தை வேண்டி இரந்தார். அப்பொழுது சிவபிரான், "நீ பிருகுமுனிவர் இட்ட சாபத்தால் இடையர்களிடையே தங்கி அவர்களோடு பழகிப் பலரை மணந்து மக்களைப் பெற்றுச், சராசந்தன் முதலியவர்களால் துன்புறுவாய். அப்பொழுது நாம் கோயில்கொண்டிருக்கும் வில்வாரணியத்திற்குச் சென்று நம்மைப் பூசித்து வேய்ங்குழல் வாசித்து வேணுகோபாலனாக அங்கே இருப்பாயாக. அன்றியும், மேரு மலையின் மேல்பாலுள்ள கரும்பு வனத்தில் கரும்பிரதநாயகி என்னும் பெயருடன் உமாதேவி நம்மை மணந்துகொள்ளவேண்டுமென்னும் நோக்கத்தோடு தவஞ்செய்கின்ருள். அவளை அழைத்து வந்து அத்

௩0. கனத்தினும் - மேகத்தைக்காட்டிலும். காப்பும் - காத்தலையும். உன்ன - நினைக்கும்படி.

௩௧. உறையும் - உறைவான்.

தலத்தில் மணம் புரிவித்து நம் திருவருளைப் பெறுவாயாக" என அருளிச்செய்து விடைகொடுத்தனர்.

அப்பால் திருமால் கண்ணபிரானாக அவதரித்து மனைவி மக்களை அடைந்து சராசந்தன் முதலிய பகைவரால் துன்புற்ருர். பிறகு வில் வாரணியமடைந்து வயிரவ தீர்த்தத்தில் ஆடி வில்வநாதரைப் பூசித்துப் பாபவிமோசனமும் பகைவரை வெல்லும் வன்மையும் பெற்றுப் பகைவர்களை வென்ருர். அக்காலமுதல் பிரமபுரீசரிடம் அன்புடையவராகி வேய்ங்குழற்கானம் செய்து அவருடைய திருவருள் பெற்று மனமகிழ்ந்தார்.]

(கலிநிலைத்துறை.)

வரிய ளிக்குல முழக்கிடுந் துழாய்முடி மாயோன்
கரிய மேனியிற் செய்யநீர் செருக்கொடு கழியத்
துரிய மேலெழுந் தொளிவிடு சிவபரஞ் சுடரே
பிரியம் யாவருஞ் செயப்படு மொருபரப் பிரமம். (௧)

மின்செய் மேகலைக் கலைமக டவனொடு விரவி
மன்செய் தீவினைக் கேதுவாங் கொடுமல வலியாற்
கொன்செய் வான்பரப் பிரமம்யா மேயெனக் குறித்தாம்
என்செய் வாகமைப் போலினி யாருளா ரேழை. (௨)

என்று தன்னுளத் தெண்ணினு னிருக்கைவிட் டெழுந்தான்
குன்று வார்சிலை கோட்டிவெங் கோளராப் பூட்டி
அன்று மாமதி லகத்தழன் மூட்டிநன் றமர்சீர்
துன்று வெள்ளியங் கயிலையை யடைந்தனன் றுணிந்து. (௩)

நந்தி நாயகன் பதம்பணிந் தேத்தியு ணண்ணி
அந்தி வான்மதி யவிர்தரு செஞ்சடை யணிந்து
தந்தி யீருரி போர்த்தவர் திருமுனந் தாழ்ந்து
புந்தி யார்வமோ டெழுந்தன னின்றிது புகல்வான். (௪)

மங்கை பங்குடை மணிமிடற் றிறையவ சரணம்
கங்கை தங்கிய சடாடவிக் கண்ணுதல் சரணம்
செங்கை மான்மழு வேந்திய சிவபிரான் சரணம்
கொங்கை யேந்திய கொன்றையங் குழகநின் சரணம். (௫)

௧. செய்ய நீர் - இரத்தம்.

௨. கலைமகள் தவன் - சரஸ்வதியின் நாயகனாகிய பிரமன்.

௫. கொங்கை - நறுமணத்தை.

அடியர் குற்றமுங் குணமெனக் கொண்டரு ளமலா
கொடியர் மும்மதி லொருங்கெரித் தருளிய குழகா
படியர் வானவர் பரவுதோ றருள்செயும் பரமா
கடிய வல்விட முண்டருள் கண்டநின் சரணம். (௬)

அரும றைச்சிரத் தொளிருமஞ் சோதியே சரணம்
ஒருமை யன்பின ருள்ளுறை யின்பமே சரணம்
பொருவி னிட்கள சகளமெய்ப் புராதன சரணம்
திருவி ளங்கொளிக் கயிலைவாழ் தேவநின் சரணம். (௭)

என்று கண்கணீர் வார்தரக் குடந்தமுற் றெதிரே
நின்று தோத்திர மினையன!புரிநெடி யோனைக்
குன்று வாங்கிய குழகனேக் கினனருள் கூர்ந்து
நன்று வேண்டுவ தெவனது நவிற்றுதி யென்றான். (௮)

ஐய னேயுனை யவமதித் தொழுகிய வடியேன்
வெய்ய பாதகக் குழிசியா யினன்வினை வீட்டச்
செய்ய லாவதொன் றறிகிலேன் றிருவுள மிரங்கி
உய்ய வாங்கழு வாயுரைத் தருடியென் றுரைத்தான். (௯)

இரந்து வேண்டிடு மாயனுக் கிரங்கியா ரருளே
சுரந்து நஞ்சமு தாக்கிய பிரானிது சொல்லும்
பரந்து வந்துமூ டுவதலா னமையிகழ் பாவம்
கரந்து போகுமோ வாயினு மொன்றுகேள் கரியோய். (௧௦)

முற்று நம்மையே யுணர்ந்திடு பிருகுமா முனிவன்
பற்று கோபவெஞ் சாபத்தா லிடையர்கள் பலரும்
சுற்று மாறவர் குலங்கலந் தான்பல தொடர்நாள்
இற்று றுமனை வியர்புதல் வர்கள்பல ரெய்தி. (௧௧)

பந்த மேவுவை சராசந்தன் முதலிய பகைவர்
முந்த வேயடர்த் திடத்துய ருழப்பைபொன் முகந்து

௬. படியர் - பூமியில் உள்ளவர்.

௮. குடந்தமுற்று - வணங்கி; "குடந்தங்கை கூப்பி மெய்யைக் கோட்டொடு கோட்டி நிற்றல்" (சூடாமணி நிகண்டு); "குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி" திருமுருகாற்றுப்படை.

௯. குழிசி - பானை.

சிந்த வீசுதண் காவிரி நாடுசெய் தவந்தாற்
சந்த மேவுநங் கூவிளக் கானத்தைச் சார்ந்து. (௧௨)

அங்கு நம்மைநீ யருச்சனை யாற்றிமிக் கன்பு
தங்கு மாறிசை வேணுகா னம்புரி தவாது
பொங்கு மாறுயா மகிழுவ மத்தலம் பொலிய
எங்கு மேத்தநீ வேணுகோ பாலனு விருப்பாய். (௧௩)

இன்னுஞ் சொல்லுவ துண்டுகேள் வைகுந்த விறைவா
மன்னு மால்வரை மேருமேல் பாலிக்கு வனத்தின்
மின்னு பூணுமை நமைமணந் தெய்திடு விருப்பாற்
பன்னு மாகரும் பிரதநா யகிப்பெயர் பரித்து. (௧௪)

மாத வம்புரிந் துறைவளம் மடந்தையைக் கொணர்ந்து
காதன் மேவெமக் கினிமைசால் கடிமணம் புணர்த்திச்
சீத ராதிரு வருணனி பெறுகெனச் செப்பிப்
போத நாயகன் விடைகொடுத் தனன்மகிழ் பூத்தே. (௧௫)

பரமன் வாய்மொழி கேட்டலு மாயவன் பணிந்து
வரம னாயினே னின்றெனப் பெரிதுள மகிழ்ந்து
விரவு நாயகன் பாற்புற விடைகொண்டு விரைந்து
புரவு சாலுமா யவனமர் வைகுந்தம் புகுந்தான். (௧௬)

கரிய மாயவ னுரைத்தவா றிடையரிற் கலந்து
பிரிய மாமனை வியர்சுதர் பலருறப் பெற்றுப்
பரிய போர்ச்சரா சந்தனு தியரொடும் பகைத்துப்
புரிய வாற்றலி லாமையான் மனமிகப் புழுங்கி. (௧௭)

அருளி னேங்குவில் வாரணி யத்திடை யடைந்து
பொருளி னேங்குநம் வயிரவப் பிரான்றுறை புகுந்து
மருளி னேங்குத லொழிதர வண்புன லாடி
இருளி னேங்குமே னியன்சுயஞ் சோதிமு னெய்தி. (௧௮)

தேவ தேவனை விதிப்படி யருச்சனை செய்து
பாவ நாசமும் பகையடு வன்மையும் படைத்து

௧௩. வேணுகானம் - வேய்ங்குழலிசை.

௧௪. மேருமேல்பால் - மேருவின் மேல்பக்கத்தில். இக்கு வனம் - கரும்பங்காடு.

௧௬. வரமன் - விசேடமுடையவன். புரவு - காத்தல்.

மேவ முன்பொரு தாரெலாம் வீதர வீட்டி
ஓவ நேரெழிற் றிருமகண் மணாளனுள் ளுவந்தான். (௧௯)

அன்று தொட்டுநம் பிரமபு ரீசருங் கன்பாய்
நின்று தொட்டினி தாயவேய்ங் குழலிசை நிரப்பித்
தொன்று தொட்டுமே வியபெருந் திருவருள் சுரப்பக்
கன்று தொட்டுவண் கனியுகுத் தவனுளங் களித்தான். (௨௦)

ஆகத்திருவிருத்தம் - ௧௨௪.

---

௬. பிரமன்பூசைப் படலம்.

கதைச் சுருக்கம்.

[சிவபெருமான் கட்டளையிட்டவாறே பிரமதேவர் மேருமலைக்குச் சென்று அங்கே தாம் பூசித்த சிவலிங்கப் பெருமானைத் தொழுது கைக்கொண்டு வில்வாரணியத்தை நோக்கிப் புறப்பட்டனர். இடையிற் பல மலைகள், காடுகள், ஆறுகள், மருதநிலங்கள், பாலை வனங்களென்பவற்றைக் கடந்து சோழநாட்டை அடைந்து சிதம்பரம் முதலிய பல தலங்களுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டு வில்வாரணியம் வந்துசேர்ந்தார். அங்கே வில்வமூலநாதனைத் தரிசித்து மகிழ்ந்து வயிரவக் கடவுளையும் தொழுது, அங்கிருந்த அகத்திய முனிவரைக் கண்டு பேசி வேணுகோபாலரையும் வணங்கிக் கொள்ளிடஞ் சென்று வயிரவதீர்த்தத்தில் நீராடி வில்வவனேசரைப் பூசித்துத் துதித்தார். அவர் பூசைக்கு மகிழ்ந்த இறைவர் இடப வாகனரூடராய் எழுந்தருளி, "வேண்டிய வரத்தைக் கேட்பாயாக" என்று திருவாய்மலர்ந்தனர். பிரமதேவர், "அடியேன் பேரால் தேவரீருக்கும் இவ்வூருக்கும் நாமங்கள் உண்டாகவேண்டும். அடியேன் பிரதிஷ்டை செய்யும் இலிங்கத்திலும் தேவரீர் ஸாந்நித்தியமாகி விளங்கவேண்டும்" என்று வேண்டச் சிவபெருமான் அங்ஙனமே அருளிச்செய்து மறைந்தனர். அக்காலமுதல் சிவபிரானுக்குப் பிரமபுரீசரென்னும் திருநாமமும் அத்தலத்திற்குப் பிரமபுரி என்னும் திருநாமமும் வழங்கலாயின.

அப்பால் பிரமதேவர் அத்தலத்தில் அகத்தியமுனிவராற் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலிங்கத்திற்குத் தென்பால் தாம் மேருவினின்றும் கொணர்ந்திருந்த இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்ததன்றி, அதன் வடதிசையில் பிரமகூபம் என்னும் பேரால் ஒரு தீர்த்தமும்

அமைத்து அதில் ஸ்நானம் செய்து தாம் பிரதிஷ்டை செய்த மூர்த்தியை முறைப்படி பூசித்து அத்தலத்தில் இருக்கலாயினர்.

பிரமகூபத்தில் நீராடிப் பிரமபுரீசரைத் தொழுது பிரமலிங்கத்தை வழிபட்டால் செல்வமும் ஞானமும் உண்டாகும்.]

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

கறைமலி கண்டத் தெண்டோட் கண்ணுத லுரைத்த வாறே
நறைமலி கமல மேய நான்முகப் புத்தேண் மிக்க
பொறைமலி செம்பொன் மேருப் பொருப்பிடைத் தான்பூ சிக்கும்
முறைமலி யருளி லிங்க முன்புபோய்த் தொழுது வேண்டும். (௧)

ஐயனே யடியே னெஞ்ச மாதரிக் கினிது மேய
செய்யனே மழுமா னேந்துஞ் செங்கையாய் மங்கை பாக
மெய்யனே திருமா லாய விடையனே யுடைய நாதா
துய்யனே யென்று வேண்டித்தொழுதுகைக் கொண்டெழுந்தான். (௨)

மழைதவழ் சாரற் குன்றும் வண்டளா வரும்பு கானும்
குழைதவழ் தருக்கள் சாய்த்துக் கொடுசெலு நீத்த யாறும்
கழைதவழ் கருப்பஞ் சாறு கால்படு மருத வைப்பும்
உழைதவழ் வெய்ய செந்தீப் பாலையு மொருங்கு நீத்து. (௩)

புழல்படு திரள்கா லாம்பற் பூக்களைக் கறித்து மென்று
சுழல்படு காலூ டேகித் தொகுவளச் செறுவுட் புக்காங்
குழல்படு கயல்க ளோட வுழக்கிநெற் பயிர்கு தட்டி
நிழல்படு மாக்கீழ் மேதி நிரைதுயி னீர்நா டுற்றான். (௪)

பிறையொடு புனலு மாடப் பிறங்குற விசித்த புற்றோல்
நிறைதிரு வரையில் யாத்த நெட்டராக் கச்சை யாட
அறைகழல் சிலம்போ டாட வண்டங்க ளனைத்து மாடத்
தறைபுகழ் மன்று ளாடுந் தம்பிரான் பாதம் போற்றி. (௫)

பெருமண நல்லூர் போற்றி மயேந்திரப் பள்ளிப் பெம்மான்
கருமணங் கமழும் பாதங் கலந்துபே ரன்பிற் போற்றி

---

௬. பிரமன் பூசைப் படலம்.

௩. தளவு - முல்லை. உழை - மான்.

௪. புழல் - உட்டுளை. காலூடு - வாய்க்காலினூடே. செறு - வயல். மாக்கீழ் - மாமரத்தின் கீழே. ௫. புற்றோல் - புலித்தோல்.

அரும்மணந் தழையு முல்லை வாயிலு மணைந்து தாழ்ந்து
திருமணந் தவன்கை கூப்புந் தென்குரு காவூர் சூழ்ந்து. (௬)

கற்பமெத் தனையோ கண்ட காழிமா நகருந் தாழ்ந்து
பொற்பமண் ணிட்டு நோயைப் போக்குவார் பதியைச் சூழ்ந்து
சிற்பரஞ் சுடர்நீங் காத திருவெண்கா டணைந்து போற்றி
வெற்பமர் சிலையார் நாளு மேவிய கடவூர் தாழ்ந்து. (௭)

நலமலி யறவர் சூழு நாகைக்கா ரோணம் வேத
குலமலி பூசை யாற்றிக் குலவிய மறைக்கா டன்பர்
புலமலி திருநள் ளாறு புற்றிடங் கொண்ட பெம்மான்
வலமலி யாரூ ரம்பர் மாகாளம் வணங்கிப் போற்றி. (௮)

கரியுரி மேனி போர்த்த கண்ணுதல் வழுவூர் வேதப்
பரியுரி யவர்மா யூரம் படர்திரு வரசின் கீழம்
பரியுரி யவர்வாழ் தெய்வ வாவடு துறைகை யேந்தும்
எரியுரி யமலர் மேய விடைமரு திவையும் போற்றி. (௯)

சண்பக வனஞ்சூழ் நாகீச் சரந்திருக் கலய நல்லூர்
நண்பக மருக்கு டந்தை நகுவலஞ் சுழியை யாறு
விண்பக மாட மோங்கு மிளிர்திருப் பனந்தா ளின்சொல்
பண்பக மொழிவார் சூழும் பந்தணை நல்லூர் போற்றி. (௧0)

மயர்வறு மனத்தோர் நாளும் வந்துவந் திறைஞ்ச வன்னார்க்
கயர்வற வனைத்து நல்கி யமரரும் விரும்பிச் சூழ்ந்து
பெயர்வறு மிருக்கை மேவப் பெயர்வரும் வளங்க ணல்கி
உயர்வில்வா ரணிய முற்று னுலகெலாம் படைத்த தோன்றல். (௧௧)

---

௭. கற்பமெத்தனையோகண்ட காழி : "எண்கரக் கோவை யெத்தனையோ கண்ட சீரிற் கமழ்பிரம புரம்" (சீகாழிக் கோவை) என்பர். மண்ணிட்டு நோயைப் போக்குவார் பதி - புள்ளிருக்குவேளூர்; "விரிந்தபுகழ் புள்ளிருக்கு வேளூர் வயித்தியனார், பரிந்துவினை தீர்க்க வல்ல பண்டிதர்கா ணம்மானை, பரிந்துவினை தீர்க்கவல்ல பண்டிதரே யாமாயின், மருந்துவிலை கைக்கூலி வாங்காரோ வம்மானை, வாயிலே மண்போட்டு வாங்குவர்கா ணம்மானை" என்பது இங்கே அறிதற் குரியது.

௮. மறைக்காடு - வேதாரணியம்.

௯. பரிக்கு உரியவர். அம்பு அரி உரியவர் - அம்பாகத் திருமாலை உடையவர். [ருண்டு.

௧0. திருநாகேச்சுரத்திற்குச் சண்பகாரணியமென்று ஒரு பெய

மலிதரு வறியன் செம்பொன் வைப்பெதிர் கண்டாற் போலப்
பொலிதரு வில்வ மூலப் புண்ணிய விலிங்கங் கண்டு
மெலிதரு வருத்த நீங்கி மிகவுள மகிழ்ந்து தாழ்ந்து
கலிதரு மறைகள் பாடிக் கைகுவித் தரிது நீங்கி. (௧௨)

மற்றொரு பாங்கர் வைகும் வயிரவப் பிரானைத் தாழ்ந்து
கற்றவர் புகழுங் கும்ப யோனியைக் கண்டு பேசிக்
கொற்றமுற் றிருந்த வேணு கோபாலன் றனைக்கை கூப்பிப்
பொற்றகொள் ளிடம்போய்க் காரி புகழ்த்துறை நன்னீ ராடி. (௧௩)

வெள்ளிய நீறு பூசி விளங்குகண் மணியும் பூண்டு
தெள்ளிய வைந்தெ ழுத்துஞ் சிந்தையிற் கணித்தெ ழுந்து
வள்ளிய தூப தீப மஞ்சன மாதி கொண்டு
நள்ளிய வில்வ மூல நாதனைப் பூசை செய்வான். (௧௪)

மறைவிதி வழாது முக்கண் வள்ளலைப் பூசை யாற்றி
நிறைவலி வடுகப் புத்தே ணிகரில்பொற் பாதம் போற்றிக்
குறையற முக்காற் சூழ்ந்து கும்பிட்டுக் குடந்தம் பட்டுத்
துறைமலி யன்பு பொங்கத் தோத்திரஞ் செய்ய லுற்றான். (௧௫)

பெருகுபே ரொளியே போற்றி பிரணவப் பொருளே போற்றி
உருகுமெய் யடியா ருள்ளத் தூற்றெழு மமுதே போற்றி
கருகுமும் மலமுந் தீரக் கடைக்கணித் தருள்வாய் போற்றி
திருகுதீர் வில்வக் கானச் சிவபரஞ் சுடரே போற்றி. (௧௬)

பூதநா யகனே போற்றி போதநா யகனே போற்றி
வேதநா யகனே போற்றி விளைதரு பேரா னந்த
ஓதநா யகனே போற்றி யொப்பிலா முதலே போற்றி
மேதநா யகனே போற்றி வில்வநா யகனே போற்றி. (௧௭)

என்றுகண் ணருவி பாய வுள்ளநெக் குருக வின்ன
நன்றுநேர் துதித்து நிற்கு நான்முகற் கெதிரே வெள்ளிக்
குன்றுநேர் விடைமேற் காட்சி கொடுத்தனன் குழகன் கண்ட
தொன்றுமா மறையோன் றாழ்ந்து வீழ்ந்துசூழ்ந் தருகு நின்றான். ()

---

௧௩. கும்ப யோனி - அகத்தியர். பொற்ற - பொலிவு பெற்ற.

௧௬. திருகு - மாறுபாடு.

௧௭. ஓதம் - கடல். மேதம் - யாகம்.

௧௮. தொன்று - பழமை.

வேண்டிய வரங்கே ளென்ன விமலனே யடியேன் போரால்
ஈண்டிய நினக்கு மிவ்வூர் தனக்கும்பே ரெய்தல் வேண்டும்
பூண்டவிவ் விலிங்கத் தேயெப் போதுநீ விளங்க வேண்டும்
ஆண்டநிற் பூசிப் பாருக் கனைத்துமுண் டாக வேண்டும். (௧௯)

இன்றுயான் பதிட்டை செய்பு மிலிங்கமும் விளங்க வேண்டும்
நன்றுநீ யருள்வா யென்ன நான்முகன் கேட்ட வாறே
குன்றுவார் சிலையா னெல்லாங் கொடுத்தனன் மறைந்து போனான்
அன்றுதொட் டமல நாதன் பிரமபு ரீச னானான். (௨௦)

(தரவுகொச்சகக் கலிப்பா.)

அங்ஙகரம் பிரமபுரி யென்றாய தன்றுமுதல்
எங்ஙகரங் களுந்துதிக்கு மங்ஙகரி லிரும்பிரமன்
பன்னரிய வகத்தியனார் பதிட்டையிலிங் கத்தென்பாற்
றன்னரிய விலிங்கத்தைத் தாபித்தான் மிக்குவந்து. (௨௧)

ஆயவதன் வடதிசையி லவிர்பிரம கூபமெனத்
தூயதன்பே ராலொருதீர்த் தந்துலங்க வமைத்தருளிப்
பாயவதன் புனலாடிப் பறித்துவில்வம் பல்சூட்டி
மேயதிரு வமுதூட்டி விருப்புறுதூ பமுங்காட்டி. (௨௨)

இவ்வாறு மாபூசை யினிதுபல நாள்புரிந்து
வெவ்வாய்மை நான்பிரம மென்றுரைத்த வினைதீர்ந்து
கவ்வாய விதிமகிழ்ந்து கலசமுனி யொடும்வலியின்
ஒவ்வாத வேணுகோ பாலனொடு முற்றிருந்தான். (௨௩)

பிரமகூ பம்படிந்து பிரமபுரீ சரைத்தொழுது
பிரமனா ரினிதமைத்த பிரமலிங்கந் தனைப்போற்றிற்
கிரமமா யவரவர்க்குக் கேடில்பெருஞ் செல்வமும்விக்
கிரமவா கையும்புகழுங் கிளர்சிவஞா னமும்பெருகும். (௨௪)

பலதினம்போற் றிடவேண்டு முடியாதேற் பத்தியொடு
சிலதினமா வதுபோற்ற வேண்டுமது வுந்திருந்தல்
இலதெனினோர் நாளேனும் போற்றுகவி தும்மரிதேல்
நிலவுறவெண் ணிடவேண்டு நெடுநிலத்தோர் முதல்யாரும். (௨௫)

ஆகத் திருவிருத்தம் - ௧௪௯.

---

௨௩. க - பிரமன்.
௨௪. விக்கிரமம் - பராக்கிரமம்.

எ. திருமணப் படலம்.

கதைச் சுருக்கம்.

[வில்வவனத்தில் இருந்த வேணுகோபாலர் சிவபெருமான் பணித்தபடி திருமணம்செய்விக்கும் நாள் வந்ததை அறிந்து திருக்கைலாயம் சென்று அவரை வணங்கிப் போற்றி, "முன் ஒருநாள் தேவரீர் அடியேன்பாற் கட்டளையிட்டருளியவாறு திருமணங்கொண்டருள வில்வவனத்திற்கு எழுந்தருள வேண்டும். அடியேன் அதன் முன்பே கரும்பு வனம் சென்று கரும்பிரத நாயகியாரை அழைத்துக் கொண்டு செல்வேன்" என்று விண்ணப்பித்தார். கேட்ட கைலை நாயகர், "ஆவணி மாதம் வெள்ளிக்கிழமையன்று மணம் செய்துகொள்ள வருவேம்; நீர் உமாதேவியாருடன் செல்க" என்று விடை கொடுத்தருளவே திருமால் மேருமலையை அடைந்தார்.

அம் மலையின் மேல் புறத்திலே உள்ள அழகிய கருப்பங் காட்டினிடையில் ஒரு தவச்சாலையில் அனிந்திதை முதலிய தோழியர் பணிவிடை செய்ய, கரும்பிரத நாயகியார் உலகியலை நிலைநிறுத்துவதற்காகச் சிவபிரானை மணந்துகொள்ளும் பொருட்டுத் தவவேடந்தாங்கி இருந்தனர். திருமால் அங்கே சென்று அக்கரும்பிரத நாயகியாரை வணங்கி, "சோழநாட்டிலுள்ள வில்வாரணியத்தில் சிவபிரான் திருமணம் செய்து கொள்ளத் திருவுளங்கொண்டருளினர். அதற்காக அங்கே எழுந்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்தனர்.

உடனே உமாதேவியார் தோழியர் முதலிய பரிவாரங்கள் சூழ விமானமொன்றில் ஏறி மலை முதலியவற்றைக்கடந்து வில்வாரணியம் அடைந்து பிரமபுரீசரை வணங்கி வீற்றிருந்தனர். திருமால் பலருக்குத் திருமணவோலையோடு தூதுவரை அனுப்பிவிட்டு மயனை அழைத்து ஓர் அழகிய கலியாணமண்டபமும், வருபவர்கள் தங்குதற்குரிய இடங்களும் அமைப்பித்துப் பலவகை அலங்காரங்களைச் செய்வித்துச் சிவபெருமான் வரவை எதிர்நோக்கி யிருந்தார்.

சிவபெருமான், தாம்திருமணம் செய்தற்குரிய திருநாள் வந்ததை உணர்ந்து மணக்கோலம் பூண்டு நந்திகணத்தார் முதலியோர் புடைசூழத் தருமரிஷபத்தை ஊர்ந்து, சிதம்பர தலத்தின் வழியே வந்து கொள்ளிடத்தைக்கடந்து மண்ணிநதிக்கரையை அடைந்து வில்வவனத்தை எய்தினர். திருமால் முதலியோர் அவரை எதிர்கொண்டு பணிய அவர்களுக்கு அருள் சுரந்து எம்பெருமான் திருமணமண்டபம் புகுந்தார்; தேவர்கள் திருமணத்திற்குரியன செய்யப் பிரமதேவர்

அகத்தியர் முதலியோர் வேதமந்திரங் கூறி ஓமம் செய்யத் திருமால் தாரை வார்க்க இறைவர் கரும்பிரதநாயகியாரை மணம் புரிந்தருளினர்.]

(கலிவிருத்தம்.)

பைந்துழாய் வேணுகோ பால மாயவன்
கந்தநாண் மலர்மிசைக் கடவு ளோடளாய்
முந்தைநா ளுயகன் மொழிந்த வாறினி
திந்தநா ளியன்மண மியற்று நாளெனு. (௧)

எண்ணின னெழுந்தன னிலங்கு வெள்ளியம்
புண்ணிய வரையிடைப் பொலிந்து மேவினன்
நண்ணிய திருவரு ணந்தி நாயகன்
தண்ணிய மலர்ப்பதம் தாழ்ந்துள் புக்கனன். (௨)

தருமவெள் விடையுடைத் தம்பி ரானைமற்
றருமறை யளவிடற் கரிய சோதியைப்
பொருவரும் புண்ணிய புராண னைப்பெருங்
கருணையங் கடலைக்கண் களிப்பக் கண்டனன். (௩)

தண்டென நிலமிசைத் தாழ்ந்தெ ழுந்தனன்
கொண்டபே ருவகையிற் குடந்தம் பட்டனன்
ஒண்டவர் மதிக்குமன் புருவ மாயினன்
கண்டகண் பெரும்புனல் கவிழ்த்துக் காட்டவே. (௪)

அடியனே னுனெனு மகந்தை யானுறு
கொடியமா பாதகம் போக்கிக் கூடலர்
முடியவா ளமரிடை முருக்கி வெற்றிகொள்
நெடியவாற் றலுந்தரு நிமல போற்றியே. (௫)

விழிமலர்ப் பூசனை யுவந்து வேண்டிய
கொழிசுடர்ச் சக்கரங் கொடுத்த பண்ணவ
பழிதபு மேஎரியோர் பக்க வாழ்க்கைமற்
றிழிதரு மெனக்கரு ளிறைவ போற்றியே. (௬)

மன்னிய பிரமனை மைந்த னுப்பெற
உன்னிய படியெனக் குதவும் வள்ளலே

எ. திருமணப் படலம்.

௧. மலர்மிசைக்கடவுள் - பிரமதேவர். அளாய் - கலந்து.

முன்னிய படியெலா முடிக்கு மூர்த்தியே
துன்னிய நின்னடித் துணைகள் போற்றியே. (௭)

என்றுபற் பலதுதி யினிதி சைத்துநீ
அன்றுநா யேனைப்பார்த் தருளிச் செய்தவா
றென்றுசீர் மணத்திரு வுருவங் கொண்டுயர்
நன்றுவில் வாரணி யத்தை நண்ணுதி. (௮)

கனகமா மேருவிற் கருப்பங் காட்டுவாழ்
அனகமா தேவியை யழைத்துக் கொண்டியான்
முனகர்சா ரருமவண் முந்தி மேவுவன்
பனகபூ டணவெனப் பணிந்து வேண்டினன். (௯)

திண்ணிய வலிமிகு சிங்க மாமதி
நண்ணிய பிருகுநா ணலங்கொ ளோரையின்
அண்ணிய மணஞ்செயற் கங்கு மேவுதும்
எண்ணிய வுமையுட னெய்து நீயென. (௧௦)

அருண்மிகு விடைகொடுத் தருளி னன்பரன்
தெருண்மிகு மாயவ னுவகை தேக்கியே
பொருண்மிகு மடிகளை யின்னும் போற்றினன்
வெருண்மிகு மிருடபு மேரு வுற்றனன். (௧௧)

மேருவின் மேல்புறம் விளங்கி நாடொறும்
காருல வுறநிமிர் கருப்பங் காடொன்று
யாருமொண் கமுகங்கா டென்ன வேவளம்
சாருமத் தகையது தவாத சீரது. (௧௨)

ஐயவென் புகலுகேன் றேகை யாதிய
செய்யபொன் னிறங்கொடு திகழு நீரது
வெய்யவ ரணுகுறு மேன்மை சான்றது
வையமும் வானமுந் துதிக்கு மாண்பது. (௧௩)

அத்தகு பெருவனத் தழகு நோக்கியே
உத்தம நாயகி யுவந்தி ருக்குமென்
றித்தல முதலெலா மியம்பு மென்றிருஞ்
சத்துவ குணத்தினர் சாற்று வாரென்றும். (௧௪)

---

௯. முனகர் - நீசர்; "முனகர் துன்னு மின்னுக்கடறு" திருச்சிற். 217.

௧௦. சிங்கமதி - ஆவணிமாதம். பிருகுநாள் - வெள்ளிக்கிழமை.

அனையநல் வனத்திடை யன்பு மேயவர்
வனைதரு முள்ளமோ மறையி னந்தமோ
இனையதென் றெவர்சொல்வா ரென்ன மேவிடும்
தனைநிகர் பெருந்தவச் சாலை யொன்றரோ. (௧௫)

அத்தகு சாலையி லனிந்தி தைப்பெயர்
உத்தம மடந்தைமு னுலப்பி றோழியர்
பத்திமைப் பணிவிடைப் பண்பி னாற்றுற
வித்தக நாயகி மேவு மென்பவே. (௧௬)

உலகிய னிறுத்துவா னுரைத்த நூல்வழி
அலகின்மான் மியமுடை யடிகட் சேருவான்
பலர்புகழ் பெருந்தவப் படிமந் தாங்கியே
மலர்தலை யுலகமீன் றெடுத்த மாதுறும். (௧௭)

அளிமிக வுலகமுற் றளித்த தாயினை
நளிமிக வொருங்கரு ணல்குஞ் செல்வியை
ஒளிமிக விளங்குமோ ரொளியை நேர்செலாக்
களிமிக நோக்கினன் கமலை நாயகன். (௧௮)

எதிர்பணிந் தெழுந்துகை யிரண்டுங் கூப்பியே
அதிர்பொலங் கழற்றிற லன்ன மாயவன்
முதிர்பெருங் கருணையாய் முன்னர் நின்றுதீ
துதிர்தர விண்ணப்ப முவந்து செய்வனால். (௧௯)

மிக்கசோ ணாட்டுயர் வில்வக் கானத்துத்
தக்கதோர் திருமண மாற்றுந் தன்மையால்
முக்கணு யகனருண் முடிமி சைக்கொடு
புக்கன னடியனேன் போதல் வேண்டுமால். (௨0)

அம்மையின் னேயெழுந் தருள வேண்டுமொண்
செம்மைசா னுலகெலாஞ் செழிக்கு மாறென
வெம்மைகூர் திகிரியான் விளம்பு வார்த்தைகேட்
டெம்மையா ளுடையதா யெழுதன் மேயினாள். (௨௧)

௧௬. மூன் - முதலாகிய.
௧௮. செலா - சென்று.
௧௯. கருணையாய் முன் - கருணையுடைய தாயின் முன்பு.

அந்தர துந்துமி முகிலி னார்த்தன
இந்திர னாதிய ரிரைத்து மொய்த்தனர்
கொந்தலர் மலர்மழை குலவப் போர்த்தன
சுந்தர முனிவர்மங் கையர்கள் சூழ்ந்தனர். (௨௨)

இளங்கதி ருதயமே யென்னத் தக்கதோர்
வளங்கெழு விமானநேர் வந்து தோன்றிடக்
களங்கமி லதன்மிசைக் கருணை நாயகி
உளங்கெழு முவகையி னுற்று மேவினாள். (௨௩)

அனிந்திதை கமலினி யாதி யாய்தொடி
புனைந்தகை யெழின்மிகு பூவை மார்பலர்
துனைந்தவவ் விமானமேற் சூழ்ந்து மொய்த்தனர்
நினைந்தமா தவர்மடந் தையர்நெ ருங்கினார். (௨௪)

யாவரு மிருக்கென விருந்து நாயகி
தேவரு முனிவரு முவகை தேக்கிட
மேவரும் வந்தியர் விருது பாடிட
மூவரும் விமானத்தை முறைந டத்தினாள். (௨௫)

பாரிடத் தலைவர்கள் பற்ப லாயிரர்
போரிடற் கெதிரிலாக் குறைவு பூண்டவர்
தாரிடத் தகுதடந் தோளர் தாங்குழீஇ
ஓரிடத் தாரல ருடன்றொ டார்ந்தனர். (௨௬)

கற்பகத் திறைமதக் களிற்ன்ற யூரவும்
அற்புறு மலர்மக னன்ன மூரவும்
சொற்பெறு முவணமா றுணவி னூரவும்
வெற்பென வெழுந்துமேல் விமானஞ் சென்றதே. (௨௭)

பற்பல வரைகளும் பயோத ரம்படு
பற்பல கானமும் பாரைக் கீண்டுசெல்
பற்பல நதிகளும் பண்ணை நண்ணிய
பற்பல மருதமும் பரவ நீந்தியே. (௨௮)

௨௫. வந்தியர் - புகழ்ந்து பாடுவோர். மூவரும் - அழிதலில்லாத.
௨௬. பாரிடம் - பூதகணம். குழீஇ - கூடி.
௨௮. பயோதரம் - மேகம். பண்ணை - வயல்.

வடக்கிருந் திளங்கதிர் வருவ தென்னையென்
றடக்கருங் கடலுல கதிச யித்திட
விடக்கருங் கண்டனார் விழைந்து மேயபல்
இடக்கன வளவர்நாட் டெல்லை யெய்திற்றே. (௨௯)

நிலவுசூ விளவன நேரி றங்கிடக்
குலவுசீர் விமானநின் றிழிந்து கோமளை
உலவுசீ ரவ்வனத் துட்பு குந்தனள்
கலவுமா தர்களொடுங் களிப்பு நீடியே. (௩0)

(தரவு கொச்சகக் கலிப்பா.)

கூடுவளம் பலசெறிந்த கூவிளமா வனம்புகுந்து
பீடுமலி கரும்புமையாள் பிரமபுரீ சரைத்தொழுது
நாடுபல தோழியரு நன்முனிவர் பன்னியரும்
நீடுமர மாதர்களு நெருங்கவீற் றிருந்தனளால். (௩௧)

மாயவனும் பிரமபுரீ சரைவணங்கி விடைகொண்டு
தூயதிரு மணமுடங்க லொடுபலர்க்குந் தூதனுப்பி
ஆயபுகழ் விண்ணுலகத் தமருமயன் றனைக்கூவி
ஏயபுகழ்க் கலியாண மண்டபமொன் றியற்றுவித்து. (௩௨)

அண்டர்பெருந் திருமுனிவ ரளவில்பா ரிடர்மற்றைத்
தொண்டர்மகிழ்ந் துறையிடமுந் தொலையாதே சமைப்பித்துத்
தண்டரளக் கோவைகளுந் தழைதருபொன் மாலைகளும்
வண்டரவா வுறுநறும்பூ மாலைகளுந் தூக்குவித்து. (௩௩)

இனியமாம் பழக்குலையு மியல்வாழைப் பழக்குலையும்
கனியகமு கங்குலையுங் காறூறுங் கட்டுவித்தும்
மனியவிதா னமுந்தயங்க வண்பந்த ரியைவித்தும்
மினியவிரை நிலமெழுகிக் கம்பலமும் விரிப்பித்து. (௩௪)

நிறைகுடம்பா லிகைதீப நிரம்புமா றமைப்பித்தே
உறைதருமா றினும்வேண்டு முபகரணஞ் சேர்ப்பித்து

௩0. நேர் இறங்கிட. கலவு - கலந்த.
௩௩. வண்டர் - வண்டு.
௩௪. கனிய - கனியை உடைய, மனிய - மன்னிய. விதானம் - மேற்கட்டி. மினிய விரை - மின்னிய வாசனைப்பொருள்.
௩௫. இனும் வேண்டும் - இன்னும் வேண்டும்.

மறையவரா தியர்க்கமுது வகைவகையட் டடுவித்துக்
குறையறுத்தம் மானருளே குறித்துவழி பார்த்திருந்தான். (௩௫)

வேணுகோ பாலனுளக் குறிப்புணர்ந்து வெள்ளிமலைத்
தாணுநீள் வில்வவனந் தனைச்சார்ந்து மணமியற்றப்
பூணுமா தரவினொடு நந்திமுதற் பொலிகணத்தை
மாணுமா றுறநோக்கி வாய்மலர்ந்தீ துரைக்குமால். (௩௬)

கரும்புவனத் தினிதமர்ந்த காரிகையை மணஞ்செய்வான்
விரும்புபுகழ் நீர்நாட்டு வில்வக் கானம்புகுத
அரும்புசிறப் புறுபிருகு வாரமுமின் றதனாலே
வரும்படிநீ ரெல்லீரும் வருகயா மும்வருவோம். (௩௭)

என்றுதிரு வாய்மலர்ந்தாங் கினியவே றிடம்புகுந்து
நன்றுதிரு மணக்கோல நலம்பொலியக் கொண்டருளித்
துன்றுபெருங் கணநாதர் சுரர்முனிவர் பலர்சூழ
வென்றுவரு விறற்றரும விடையிலெழுந் தருளினார். (௩௮)

எழுந்தனவெண் குடைகள்பல வெழுந்தனசா மரைகள்பல
எழுந்தனவெண் கொடிகள்பல வெழுந்தனமற் றொலியல்பல
எழுந்தனதோ ரணங்கள்பல வெழுந்தனமா விருதுபல
எழுந்தனபூஞ் சிவிறிபல வெழுந்தனதூ ரியங்கள்பல. (௩௯)

சங்கமுழங் குவவொருபான் மாகதர்கள் சாற்றுபிர
சங்கமுழங் குவவொருபாற் றரித்தவிற லாளர்கழற்
சங்கமுழங் குவவொருபாற் றுவாநல் லியலுணர்ந்த
சங்கமுழங் குவவொருபா லிவ்வாறு தலைசிறப்ப. (௪0)

பூமாரி பொழிவாரும் பொன்மாரி பொழிவாரும்
பாமாரி பொழிவாரும் பரமவா கரவென்று
நாமாரி பொழிவாரு மாய்ப்பலரு நண்ணிவரக்
காமாரி விடையுகைத்தான் கவுமாரி மணங்குறித்தே. (௪௧)

இந்திரனை முதலாய வெண்டிசைப்பா லருந்தெய்வக்
கந்திருவர் வித்தியா தரரியக்கர் கருடர்களும்

௩௯. ஒலியல் - ஈயோட்டி.
௪0. மாகதர் - இருந்தேத்துவார். பிரசங்கம் - உபந்யாஸம். கழற்சங்கம் - கழலையுடைய கணைக்கால். சங்கம் - புலவர் கூட்டம்.
௪௧. கவுமாரி - உமாதேவியார்.

மந்திரமா முனிவர்களு மற்றையரு முடன்போத
நந்திரவி யெனப்பொலிந்தா னந்திரவி யம்போல்வான். (௪௨)

நீர்நாடு புகுந்துபொது நிறைந்தசிதம் பரவழியே
கூர்நாடு கண்ணியர்சேர் கொள்ளிடமா நதிகடந்து
சீர்நாடு மொருமண்ணித் திருநதியின் கரையடைந்து
பார்நாடு வில்வவனப் பதியடைந்தான் பரம்பரனே. (௪௩)

ஏற்றவய னரிமுதலோ ரெல்லோரு மெதிர்கொண்டு
போற்றவவர்க் கருள்சுரந்து பொருவிடைநின் றிழிந்தருளி
மாற்றலருண் ணடுங்குமழு மானேந்து கரதலத்தான்
சாற்றரிய கலியாண மண்டபத்தைச் சார்ந்திருந்தான். (௪௪)

மன்னுமணத் தவிசேறி வயங்காட லொடுபாடல்
பன்னுபல வும்பொலியப் பரமனினி தமர்பொழுது
நன்னுதலை நீராட்டி நலமலிபட் டுடைபுனைந்து
மின்னுகலம் பலபூட்டி விளக்கமெனக் கொடுவந்தார். (௪௫)

வந்தமயி லியலுமையாண் மணவாள னினிதிருக்கும்
அந்தமணத் தவிசேறி யழகுபெற வீற்றிருந்தாள்
கந்தமலர் பலவிறைத்துக் கடவுளரு முனிவர்களும்
இந்தவுல கத்தவரு மெல்லோரு மகிழ்வுற்றார். (௪௬)

அல்லிமலர்க் குழலுமையை யாரணமு மறிவரிய
மெல்லியலைக் கோடியென வேணுகோ பாலனெழீஇப்
பல்லியமும் பரந்தார்ப்பப் பற்பலமங் கலமுழங்கப்
புல்லியபொற் கரகநீர் புண்ணியன்கைத் தலம்வார்த்தான். (௪௭)

அரும்புவிதிப் படிகுண்டத் தழலெழுந்து வலங்கொள்ளப்
பெரும்புவனங் கொண்டாடப் பிரமனகத் தியன்முதலோர்
விரும்புநறு நெய்வாக்கி மேதகுமந் திரங்கூறக்
கரும்பிரத நாயகியைக் கண்ணுதலோன் கைப்பிடித்தான். (௪௮)

வளம்பொலிநல் லோரையுற மங்கலப்பொன் னாண்புனைந்து
தளம்பொலிபூங் குழலோடுந் தழலைவலங் கொண்டருளி

௪௨. நந்து இரவி - பெருகிய சூரியன். நம் திரவியம்.
௪௪. மாற்றலர் உள் நடுங்கும்.
௪௭. எழீஇ - எழுந்து.
௪௯. ஓரை - முகூர்த்தம். விளம்பு ஒலிய - சொல்லப்படும் ஒலியை உடைய.

உளம்பொலிய மனம்பொலிந்தாங் குறுமம்மி மிதிப்பித்து
விளம்பொலிய புகழ்மிக்கு மேவுமருந் ததிகாட்டி. (௪௯)

மற்றுமியற் றுவவனைத்தும் வழுவாத வகையியற்றிச்
சுற்றுசடை யுடையபிரான் சுந்தரநா யகியோடும்
பற்றுநறு மணம்வீசு பள்ளியறை போய்ப்புகுந்தான்
கற்றுவல முனிவர்முதற் கண்டவர்யா வருந்துதித்தார். (௫௦)

துதிசெய்த கடவுளர்முற் சூழுமருந் தவர்பலரும்
கொதிசெய்த சக்கரக்கைக் கொண்டலும்பண் டலருதித்த
மதிசெய்த நான்முகனு மற்றவனு மகிழ்ச்சியுற
நிதிசெய்த கடுக்கையணி நெடுந்தகைபே ரருள்புரிந்தான். (௫௧)

எல்லார்க்கும் விடையருளி யெம்மறைக்கு மெட்டாத
அல்லார்க்குங் குழலுமையோ டகிலநா யகனிருந்தான்
ஒல்லார்க்கு மாறுவிளைத் தொழியாத வின்புறுவார்
பல்லார்க்கு மினிதிந்தப் பழங்கதைகற் போர்படிப்போர். (௫௨)

ஆகத் திருவிருத்தம் - ௨௦௧.

அ. திருவிழாப் படலம்.

கதைச் சுருக்கம்.

[பிரமதேவர் வில்வவனநாயகருக்குத் திருக்கோயில் அமைக்கும் கருத்துடையவராகி அதனை வேணுகோபாலரிடம் கூறினார். அவர் அதனைக் கேட்டு மிக மகிழ்ந்து மயனை அழைத்து ஆலய மொன்று அமைத்திடும்படி கட்டளையிட்டார். அவன் அங்ஙனமே முதலில் விநாயக்கடவுளைப் பூசித்து நல்ல நாளில் தொடங்கிக் கருப்பக்கிருகம், அர்த்தமண்டபம் முதலிய மண்டபங்களையும், யாகசாலையையும், மதில், கோபுரம்,மடைப்பள்ளி முதலியவற்றையும்,விநாயகர் முதலியோர்க்குரிய ஆலயங்களையும், பல விமானங்களையும், பலிபீடம், துவசஸ்தம்பம், வாகனங்கள், சோமாஸ்கந்தர் திருவுருவம் முதலியவற்றையும் அமைத்தான்; பின்பு பல பாத்திரம், ஆபரணம், குடை முதலிய விருதுகள், பலவகையான பரிவட்டங்கள் முதலியவற்றையும் இயற்றி அதனைத்

௫௧. மற்றவன் - உருத்திர மூர்த்தி.
௫௨. ஒல்லார்க்கு - பகைவர்களுக்கு.

திருமாலிடம் அறிவிக்க, அவர் பிரமதேவருடன் சென்று ஆலயம் முதலிய வற்றைக்கண்டு மகிழ்ந்தார்.

பிறகு திருமால் ஆதிசைவர்களை வருவித்து நல்ல நாள் தெரிந்து கும்பாபிஷேகம் செய்வித்து நித்திய நைமித்திகம் முதலியவற்றை நடத்துவிக்கத் தொடங்கினர். தை மாதம் பூர்வ பட்சத்தில் ஷஷ்டி திதியில் துவஜாரோகணம் செய்து அன்று முதல் திருவிழாச் செய்யத் தொடங்கிச் சோமாஸ்கந்தர் முதலிய பஞ்ச மூர்த்திகளையும் காலையில் தங்கப் பல்லக்குகளிலும் மாலையில் ரிஷபம் முதலிய வாகனங்களிலும் எழுந்தருளச் செய்வித்தார். அப்பால் சதுர்த்தசியன்று திருத்தேர் விழா நடத்தி மறுநாள் இந்திர தீர்த்தத்தில் அஸ்திர தேவருக்கு அபிஷேகம் செய்வித்து அன்றிரவு கொடி இறக்கித் திருவிழாவை நிறைவேற்றிப் பணித்தார்.

பிறகு அக்கோயிலின் வடபால் தமக்கு ஓரிடத்தைக் கைக்கொண்டு தம்தேவியருடன் எழுந்தருளி யிருப்பாராயினர். அகத்தியரும் பிரமதேவரும் சிவபெருமானைப் பூசித்து வழிபாடு செய்துகொண்டிருந்தனர் மற்றவர்கள் சிவபிரானைப் பணிந்து விடை பெற்றுத் தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.]

(தரவு கொச்சகக் கலிப்பா.)

மண்முழுதும் படைத்தமுது மறைக்கிழவன் மனமகிழ்ந்து
பண்முழுதுஞ் சமழ்க்குமொழி பாகனு ரினிதமரும்
விண்முழுது முவந்தேத்தும் வில்வவனத் திடையுல்கர்
கண்முழுதுங் கவர்கோயில் கண்டுவணங் கிடநினைந்து. (௧)

காபால னருளடைந்து கரிசறுத்தங் கமர்வேணு
கோபால னிடத்துரைத்தான் குலவுமவன் மிகமகிழ்ந்து
சாபாலன் றனியமைக்கத் தக்கவரை யுணர்ந்தனைய
பூபால னுய்ந்துமயன் றனைக்கூவி யிதுபுகலும். (௨)

மருவுபெரும் புகழ்க்காண்டா வனமெரித்த வஞ்ஞான்று
வெருவுகிளை யாதரித்து விடாது காத்தனமால்
இருவுமதற் கெதிர்நன்றி யெனப்பெருமான் றனக்கினிய
பொருவுதளி ராலயமொன் றமைத்திபொருந் திடவென்றான். ()

புத்தியென வடிவணங்கிப் புறம்போந்து மனமகிழ்ந்து
பத்தியொடு மத்திமுகப் பண்ணவனைப் பூசித்து
நித்தியநிட் களநிமல நிரஞ்சனநிர்க் குணநெடிய
முத்திமுதற் கினியதளி நன்னுளின் முயன்றமைப்பான். (௪)

கார்தவழும் படியுயர்ந்த கருப்பகிரு கமுமளவாச்
சீர்தவழு மர்த்தமண்ட பமுந்திகழ்மா மண்டபமும்
ஏர்தவழு நிருத்தமண்ட பமும்யாக சாலையுநற்
பேர்தவழு மணிமதிலும் பிறங்கியபொற் கோபுரமும். (௫)

வாகனமண் டபமுநல மருவுமடைப் பள்ளியுமின்
பாகனமென் மொழியுமையாள் பரிந்தமரு மாலயமும்
மீகனநண் பொடுபடியும் வேழமுக னலயமும்
போகனநா ணடையிருவர் புணர்குமா னலயமும். (௬)

மற்றுமம ராவரண வானவர்க ளாலயமும்
பற்றுமணி யொளிவீசு பற்பல்விமா னங்களுமேல்
உற்றுவயங் கிடுநூறு காலுடைய மண்டபமும்
சுற்றுமொளி விட்டெறிபொற் சுடரடுக்கு மண்டபமும். (௭)

போற்றுபலி பீடமுமேற் போகியொளிர் கொடிமரமும்
சாற்றுவிடை முதலாகத் தக்கபல்வா கனமும்வினை
காற்றுமருட் பெருஞ்சோமாக் கந்தருரு முதற்பலவும்
ஏற்றுபல பாத்திரமு மிலகுமணிப் பொற்கலமும். (௮)

முன்னுகுடை யாலவட்ட முதலாய விருதுகளும்
பன்னுபல நிறம்வாய்ந்த பலபரிவட் டமும்பரவ
இன்னுமெடுத் துரையாத யாவுமொருங் கினிதமைத்துக்
கொன்னுமொலி மலிவேணு கோபால னிடத்தடைந்து. (௯)

---

௧. சமழ்க்கும் - நாணும். கண்டு - இயற்றி.

௨. காபாலன் - காபாலமென்னும் கூத்தையுடைய சிவபெருமான். சாபாலன் - ஜாபால உபநிஷத்திற் கூறப்பட்ட சிவபிரான். தளி - கோயில்.

௪. புத்தி : உடன்பாட்டுக்குறிப்பு ; வழக்கு.

௬. பாகு அன்ன மென்மொழி. மீ - மேலே. கனம் - மேகங்கள். போகின்ற அன்னம் நாணும் நடையையுடைய இருவர் - தேவயானை, வள்ளி யம்மை.

௭. ஆவரணம் - பிராகாரம்; ஆவரண வானவர் - பரிவார தேவர்கள்.

௮. மேற்போகி - உயர்ந்து. கொடிமரம் - துவசஸ்தம்பம். காற்றும் - நீக்குகின்ற. உரு - விக்கிரகம்.

௯. கொன்னும் - பெருமை உறுகின்ற.

ஐயவா லயமாதி யாவுமமைத் தனனென்னப்
பையரா வணைப்பெருமான் பங்கயனோ டுடனெழுந்து
செய்யமா மணிபொளிகால் சினகரமா தியநோக்கி
வையம்வாழ் வுடையதென நவின்றுமயன் றனைமகிழ்ந்து. (க0)

தண்ணியநற் குணத்தாதி சைவர்களை வரவழைத்துக்
கண்ணியநன் ஞெடெரிந்து கடலுலக மகிழ்தூங்க
எண்ணியமா மறைமுழங்க விலகியபொற் குடத்தமைத்த
புண்ணியநீ ராட்டுவித்துப் பொங்குமுவ கையிற்பணிந்தான். ()

போரும் வளஞ்சிறந்த பிரமபுரிப் பெருமானைக்
காராரு நறுங்கூந்தற் கரும்பிரத நாயகியும்
சீராரும் பெருங்கருணை சிறந்தோங்கச் சினகரத்து
நாராரு மூன்றுறுப்புங் குறையாது நடத்துவான். (கஉ)

தேயமெலாங் கொண்டாடுந் திருவிழாச் செயநினைந்து
பாயபுகழ் மகரமதி பற்றிவரு வளர்பக்கத்
தேயபெருஞ் சட்டியிலேற் றிருங்கொடியா ரோகணஞ்செய்
தாயதின மன்றுமுத லணிநகரங் களிதூங்க. (கங)

பந்தர்புனைந் திடுவாரும் பாலிகைக ளமைப்பாரும்
சந்தநறும் பனிநீராற் றரைமெழுகி வழிப்பாரும்
கந்தமலர் தொடுப்பாருங் கனகமிகக் கொடுப்பாரும்
முந்தநறும் பதஞ்சமைத்து முகந்துமுகந் திடுவாரும். (கச)

மறையவர்க்கு வேண்டுவன மாறுது கொடுப்பாரும்
குறையகல யாவரையுங் கொண்டாடிக் கொள்வாரும்
பொறையமைமா தர்கண்மைந்தர் புதியனவே யுடுப்பாரும்
கறையகல்பன் மணியிழைத்த கலன்கள்பல புனைவாரும். (கரு)

கொடிகள்பல நடுவாருங் குலைக்கதலி யொடுகமுகு
நெடியசுவைக் கரும்பிளநீர் நிறைதரக்கட் டிடுவாரும்
படியமைய நறுமலர்கள் பரப்பிவணங் கிடுவாரும்
அடியர்வர வெதிர்நோக்கி யன்பினுப சரிப்பாரும். (கசா)

கக. நன்னாள் தெரிந்து.
கங. மகரமதி - தைமாதம். வளர் பக்கம் - பூர்வபட்சம். சட்டி - ஷஷ்டிதிதி. ஆரோகணம் செய்து - ஏற்றி.
கச. பதம் - சோறு.
கரு. கலன்கள் - ஆபரணங்கள்.
கசா. படி - பூமியில்.

இந்தவகை மாநகரத் தியாருமகிழ் தரச்சோமாக்
கந்தர்முத லவர்களுங் காலையிற்பொற் சிவிகையினும்
முந்தவரு மாலையிற்சே முதலியபல் லூர்தியினும்
மந்தமணி நகர்வீதி வலங்கொள்ளும் படிபுரிந்து. (கஎ)

மேவுபெருஞ் சதுர்த்தசியின் மேன்மேற்பல் லியமுழங்க
வாவுபரித் தேரேறி மணிவீதி வரப்புரிந்து
பூவுலக மகிழ்தூங்கப் போற்றுமறு நாட்கொடைசால்
ஆவுடையிந் திரன்றீர்த்தத் தத்திரதே வரையாட்டி. (கஅ)

அன்றிரவு கொடியிறக்கி யாற்றுவயா வையுமாற்றிக்
குன்றுநிகர் புயவேணு கோபாலன் பணிந்தெழுந்து
நன்றுதனக் கிருக்கையுமந் நாதர்கோ யிலின்வடபால்
ஒன்றுவிதம் புரிவித்துத் தேவியரோ டுவந்திருந்தான். (ககூ)

சொற்றதவக் குறுமுனியுந் தூயதவப் பார்ப்பானும்
உற்றபர சிவலிங்க முவந்துபூ சித்திருந்தார்
பெற்றமினி துகைத்தருளும் பிரமபுரீ சரைத்தொழுது
மற்றவர்தம் மிடம்புகுந்து மகிழ்ச்சியுற வாழ்ந்திருந்தார். (உ0)

ஆகத் திருவிருத்தம் - உஉக.

கூ. விளத்தொட்டிப் படலம்.

கதைச் சுருக்கம்.

[வில்வவனேசருடன் எழுந்தருளியிருந்தபொழுது கரும்பிரத நாயகியார் ஒரு குழந்தையைப் பெறும் விருப்பம் கொண்டனர். பின் அங்ஙனமே ஒரு குழந்தையை ஈன்றருளி அக்குழந்தையைச் சீராட்டுதல் முதலியன புரிந்தனர். அக்குழந்தை செங்கீரைப்பருவம் முதலிய பத்துப் பருவங்களையும் முறையே அடைந்தபொழுது அவ்வக் காலத்துக்கு ஏற்றவண்ணம் உமாதேவியார் அம் மதலையைப் போற்றி அதன் விளையாடல்களைக் கண்டு மகிழ்ந்தனர். இங்ஙனம் விளையாடி மணித்தொட்டியில் அமர்ந்த குழந்தையைக் கண்டு கண்ணும் மனமுங் குளிர்ந்தனர்.

கஎ. சே - இடபம். ஊர்தி - வாகனம். மந்த - மெல்ல.
கஅ. கொடைசால் ஆ - கொடுத்தல் மிக்கபசு; காமதேனு.
உ0. பார்ப்பான் - பிரமதேவன்.

அக்குழந்தையின் பலவகைச் செயல்களையுங் கண்டு உவக்கும் கரும்பிரத நாயகியார் எப்பொழுதும் அத்தகைய இன்பத்தைப் பெறத் திருவுள்ளங்கொண்டு சிவபிரானிடம் சென்று, "தேவரீர் இக்குழந்தை இங்ஙனமே என்றும் இருக்கும் வண்ணம் அருளவேண்டும். இது பெரிதானால் குழந்தைப்பருவ விளையாட்டைக் கண்டு களிக்கும் இன்பத்தை அடையோம். சரவணப் பொய்கையில் வளர்ந்த குழந்தையைத் தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கித் தாரகன் முதலியவரை அழித்தற்காகப் பெரியதாக்கி விடுத்தோம். அங்ஙனமின்றி இக்குழந்தை எப்பொழுதும் இப்படியே இருக்கவேண்டும். அன்றியும் 'தொட்டி' என்னும் பெயரோடு இந்நகருக்குப் பெயர் அமையவேண்டும். இத்தலத்தைத் தரிசிப்பார்க்கு நினைத்தனவெல்லாம் நிறைவேறவேண்டும். இத்தனை நல்வரமும் இனிதளிக்க வேண்டும்" என்று வேண்டினார். சிவபிரான், "அங்ஙனமேயாகுக!" என அருள் புரிந்தார். அப்போது கரும்பிரதநாயகியார் சிவபிரானைத் தொழுது உவகையுடன் வீற்றிருந்தார்.

அன்றுமுதல் வில்வாரணியத்தலம் கூவிளமென்பதன் முதலெழுத்து நீங்கப் பின்பு தொட்டியென்பது அடுப்ப விளத்தொட்டி என்னும் திருநாமத்துடன் விளங்குவதாயிற்று. அத்தலத்திலுள்ள மாணிக்கத் தொட்டியில் (தொட்டிலில்) எப்பொழுதும் முருகக்கடவுள் இனிதமர்ந்து பாலசுப்பிரமணியரானார்.

முருகக்கடவுள் தொட்டியில் வளரும் காரணம்பற்றி அத்தலத்தில் வாழ்பவர்கள் தம் வீடுகளில் இன்றும் தம் குழந்தைகளுக்குத் தொட்டில் இடுவதில்லை; தூளி முதலியவற்றைக்கட்டி வளர்ப்பார்.]

(தாவுகோச்சகக் கலிப்பா.)

எண்ணில்பல பெரும்புவனத் தெவ்வுயிரு மின்பமுற
மண்ணில்வளம் பொலிவில்வ வனத்துமண மாற்றியபின்
தண்ணிலவு புனைசடிலச் சாமிபுயந் தழீஇயுவப்பாள்
கண்ணிலவு பெருங்கருணைக் கரும்பிரத நாயகியே. (க)

இரவியுமற் றதன்சுடரு மிந்துவுமற் றதன்கலையும்
வரமணியு மதனொளியு மாமலரு மதன்மணமும்
விரவியம ரியனீத்து வேறுவே றுருவமெடுத்
துரவினியை தருகாட்சி யொத்ததிவர் தங்கலப்பே. (உ)

கூ. விளத்தொட்டிப் படலம்.

க. நாயகி உவப்பாள்.

உ. உரவின் - வன்மையோடு.

அம்மையுமப் பனுமிவ்வா றகிலவுல கமுமகிழச்
செம்மைபுரி யொருலீலை செய்துமகிழ்ந் தருளினாற்
கொம்மைவரு முலையுமையாள் குழவியினி தொன்றுபெறு
வெம்மைதிரு வுளங்கொண்டாள் விண்ணவரா தியருவப்ப. (ங)

எண்ணியவா றிளங்குழவி யெல்லாமு னினிதீன்ற
புண்ணியமென் றிருவுதரம் பொருந்தியதொள் ளிளம்பிறை
றண்ணியவின் சுவைப்பமுது முதலியன தகக்கொணர்ந்தே[போற்
அண்ணியமங் கையருத்த வம்மனையு மவாவுவளால். (ச)

இருநகிலும் பச்சைநரம் பெழுந்தோட மெய்விளர்ப்பக்
கருமுதிர்ந்து பெருந்திருப்பாற் கடலுயிர்த்த முழுமதிபோற்
பொருவில்சலஞ் சலமுயிர்த்த முத்தேபோற் பொற்புமலி
திருமகவை யினிதுயிர்த்தாள் சேணுலகெ லாமுயிர்த்தாள். (ரு)

மறைமுழுது முணர்வரிய மழமகவை யெதிர்நோக்கி
நிறைமகிழ்வு தலைசிறப்ப நெய்விழா வினிதுவந்து
சிறையளிக ளூழக்குகுழற் செம்மகளும் வெண்மகளும்
முறைமுனிவர் பன்னியரு மொய்ப்பமத லையையெடுத்து. (சு)

நீராட்டி மெய்துடைத்து நிகழ்நீற்றுக் காப்பணிந்து
பேராட்டி பரஞானம் பிறங்குதிரு முலையூட்டித்
தாராட்டி வயங்கவொளிர் சூழியமுந் தகமுடித்துச்
சீராட்டிப் பாராட்டச் செங்கீரை யாடிற்றே. (எ)

மன்னியகூ விளவனமுண் மகிழவரும் பெருமாட்டி
முன்னியபன் னிரண்டாநாள் முயன்றமரர் மயனமைத்த
மின்னியபன் மணியிழைத்த மேதகுசெம் பொற்றொட்டி
தன்னிடைமே வுறக்கிடத்தித் தாலோதா லெனவுவந்து. (அ)

ங. வெம்மை - விருப்பம்.

ச. அண்ணிய - நெருங்கிய. அம்மனை - தாயாகிய கரும்பிரத நாயகி. அவாவுவள் - விரும்புவாள்.

ரு. கரு - கருப்பம். சலஞ்சலம் - ஒருவகைச் சங்கு.

சு. நெய்விழா - எண்ணெய் தேய்த்துக் குளித்தலாகிய விழா. செம்மகள் - திருமகள். வெண்மகள் - கலைமகள். பன்னியர் - தேவிமார்.

எ. பேராட்டி - அம்பிகை; எழுவாய். சூழியம் - உச்சிக்கொண்டை. இது முதற் பருவவிளையாட்டுக்கள் கூறப்படும்.

அ. தொட்டி - தொட்டில்.

வண்ணநறுஞ் செம்பவள வாய்குதட்டி யெதிரிருந்து
தண்ணமலர்க் கரமுகிழ்த்துச் சப்பாணி கொட்டியே
எண்ணமிக விரல்சுவைத்திட் டின்னமுதார்ந் திடலொருவி
அண்ணலிரு முதுகுரவ ரவாவவாய் முத்தளித்து. (கூ)

வருகசுரர் குலக்கொழுந்தே வருகமறைப் பெருந்திருவே
வருகமழ விளங்களிறே வருகவருட் பசுங்குருந்தே
வருகசுடர் மணிவிளக்கே வருகநறுஞ் சுவையமுதே
வருகவிரு கண்மணியே வருகவரு கெனவந்தும். (க0)

கூவுமுன மெதிர்வந்து கும்பிட்டு நின்றிடவே
ஓவுமதி தனையாட வருதியென வுவந்தழைத்தும்
மேவுமறு கடைந்துதிரு மேனிமிசைப் புழுதியுறப்
பாவுமட வாரியற்று சிறுவீடு பதத்தழித்தும். (கக)

மண்ணுலக நடுநடுங்க வானுலகஞ் செவிடுபட
நண்ணுசிறு பறையெறிந்து நகுசிறுதே ருருட்டியும்வந்
தெண்ணுமணித் தொட்டிமிசை யிவர்ந்தமரு மதுகண்டு
கண்ணுமன முங்குளிர்வாள் கரும்பிரத நாயகியே. (கஉ)

சூழியமுச் சியின்முடித்துஞ் சுடர்நுதலிற் பொட்டணிந்தும்
வாழியகண் மையிட்டும் வாளிகுதம் பைகளணிந்தும்
பாழிமணித் தண்டையுமைம் படையுமதா ணியும்புனைந்தும்
கேழியலு மரைமணிகட் டியுமுவக்குங் கிரிமகளே. (கங)

பற்பலகான் முத்துவந்தும் பற்பலகா னடைகண்டும்
பற்பலகான் முலைகொடுத்தும் பற்பலகா லெடுத்தணைத்தும்
பற்பலகால் வெவ்வேறு கலம்பூட்டி யெழில்பார்த்தும்
பற்பலகா லுச்சிமோந் துங்களிக்கும் பார்ப்பதியே. (கச)

இவ்வாறே மழமகவி னின்பமுவந் தருள்விமலை
இவ்வாறே யென்ஞான்று மின்பமடை வான்கருதி
இவ்வாறே நடமினென வியன்மறைசொற் றவன்முன்போய்
இவ்வாறே மகவென்று மிருக்கவருள் புரியென்பாள். (கரு)

கங. வாளி - ஒருவகைக் காதணி. மதாணி - பதக்கம்.

கச. பலகால் - பலமுறை. முத்து - முத்தம்.

கரு. நடமினெனச் சொற்றவன் முன் - சிவபெருமானுக்கு முன்னே.

இளமகவி னலடையு மின்பமே யின்பமிந்த
வளமகவு பெரிதாயின் வருமின்ப மிதுபோலோ
குளமகவு முனமகவைக் கொடியதா ரகன்முதலோர்
களமகவு வலிதொலைப்பான் கடவுளர்வேண் டுதல்பற்றி. (கசு)

பெரிதாக விடுத்தனமக் கடவுளர்தம் பெருஞ்சேனைக்
குரிதாக வதிபதிப்பட் டமுமமைத்தா ருவமையிலாய்
கரிதாக மிடறுவிட முண்டகரு ணைக்கடலே
விரிதாக மெனக்குளதம் மேதகுதொட் டியினமைத்தே. (கஎ)

எப்போதும் பார்த்திருக்க வேண்டுமிது வன்றியினன்
ஒப்போது தொட்டியுட னிந்நகர்ப்பே ருறல்வேண்டும்
முப்போது மமரர்தொழு முதல்வாவிந் நகர்காணும்
அப்போது நினைத்தபடி யாவருக்கு முறவேண்டும். (கஅ)

இத்தனைநல் வரமுமெனக் கினிதளிக்க வேண்டுமென
அத்தனைநல் வரமுமுனக் களித்தனமென் றிறையுரைத்தான்
முத்தனைய வெண்முறுவன் முகமதியக் கரும்பிரதம்
நித்தனையங் கடிதொழுது நிரம்புமுவ கையினமர்ந்தாள். (ககூ)

அன்றுமுதற் றொட்டிகடை யடுத்தேகூ விளமுதறீர்ந்
தென்றும்விளத் தொட்டியென வெய்தியதந் நகர்நாமம்
நன்றுமணித் தொட்டியின்மே னடோறு மினிதமர்ந்து
தோன்றுமுரு கன்பால சுப்பிரம ணியனுனன். (உ0)

இன்னபடி திருவுருவத் தியைந்தவிரு வருமகவும்
முன்னரிய பலகற்ப முறைமுறையே போயொழிந்த
பின்னரிக றபுமருளாற் பேணியா வருங்காணும்
பன்னரிய திருவுருவப் பாங்கினம ருவர்மாதோ. (உக)

ககூ. குளமகவு - சரவணப் பொய்கையில் எழுந்தருளி வளர்ந்த முருகக்கடவுள். களம் அகவு - போர்க்களத்தில் அழைத்த.

கஎ. உரிதாக - உரித்தாக. அதிபதிப்பட்டம் - சேனுபதிப்பட்டம். விரி தாகம் - விரிந்த ஆசை.

கஅ. இனன் - சூரியனை.

ககூ. என - என்று அம்பிகை கேட்ப. கரும்பிரதம் - கரும்பிரத நாயகி.

உ0. தொட்டி கடை அடுத்து - தொட்டி என்பது தன் பெயரின் ஈற்றில் அமையப்பெற்று; கூவிள முதல் தீர்ந்து - கூவிளம் என்பதில், 'கூ' என்னும் முதலெழுத்துப் போய்.

தொட்டியமர்ந் தொருபால சுப்பிரம ணியச்செம்பொற்
கட்டியினி தென்றுமுறுங் காரணத்தா லனையவிளத்
தொட்டிநகர் வாழ்வார்தஞ் சூழ்மனையின் மழத்தொட்டி
கட்டியறி யார்வேறு கட்டிவளர்த் தோங்குவார். (உஉ)

இத்தகைய காதையைநன் கெழுதுவோர் வாசிப்போர்
பத்திநெறி வழுவாது கேட்பவர்யா வரும்பார்மேல்
உத்தமநன் மனைமகவோ டுவந்துபல நாள்வாழ்ந்து
வித்தகமெய்ச் சிவலோக மேவிவீற் றிருப்பரால். (உங)

ஆகத் திருவிருத்தம் - உசச.

கo. இந்திரதீர்த்தப் படலம்.

கதைச் சுருக்கம்.

[வில்வவனத்தில் இந்திரனால் அமைக்கப்பட்ட தீர்த்தம் ஒன்றுண்டு. அது மிக்க மேன்மையையுடையது. அதில் ஸ்நானம் செய்பவர்கள் இம்மைமறுமைப் பயன்களை அடைவார்கள். தை மாதம் பௌர்ணமியன்று அதில் மூழ்குவோர் முத்தியை அடைவர். மலடி அதில் மூழ்கிப் பிரமபுரீசரைப் பணிந்து வந்தால் புத்திரப் பேற்றை அடைவாள். அத்தகைய தீர்த்த வரலாற்றைச் சொல்வேன்; கேட்பீராக:

கௌதமமுனிவருடைய பத்தினியாகிய அகலிகையின்பால் விருப்புற்ற இந்திரன் கோதாவரிக் கரையில் அம்முனிவர் ஆச்சிரமத்தையடைந்து கோழிபோலக் கூவினான். முனிவர் விடிந்ததென்றெண்ணி நதிக்குப் புறப்பட்டுச் சென்றனர். அச்சமயத்தில் இந்திரன் அகலிகைபாற் சென்று பேசி, கோதமமுனிவர் விரைவில் மீளாவண்ணம் மேகங்கள் எல்லாவற்றையும் அழைத்து மழைபெய்யச்செய்து விட்டு அவளுடன் அளவளாவியிருந்தான்.

நதிக்குச்சென்ற முனிவர் சூரியோதயத்துக்கு முன்பு கோழி கூவியதும் அகாரணமாக மழைபெய்வதும் பற்றி எண்ணித் தம் யோகப் பார்வையால் உண்மையை உணர்ந்து கோபத்துடன் தம் ஆச்சிரமத்திற்கு மீண்டனர். அவர் வரவறிந்த இந்திரனும் அகலிகையும் அஞ்சி நடுநடுங்கி நின்றனர். முனிவர் இந்திரனையும் அகலிகையையும் சபித்தனர்.

உஉ. மழத்தொட்டி - குழந்தைகளைத் தாலாட்டும் தொட்டில். வேறு என்றது தூளி (ஏணை) முதலியவற்றை.

அவ்விருவரும் அம்முனிவருடைய திருவடியில் வீழ்ந்து அழுது அரற்ற, முனிவர் இரக்கங்கொண்டு இந்திரனை நோக்கி, "நீ விளத்தொட்டி என்னும் தலத்தை அடைந்து பிரமபுரீசரையும் கரும்பிரதநாயகியையும் பூசித்து வழிபடுவாயாக. வழிபட்டால் உனது சாபத்துயர் நீங்கும்; முத்தியும் பெறுவாய்" என்றுகூறி அனுப்பிவிட்டு அகலிகையை நோக்கி, "நீயும் அத்தலத்திற்குச் சென்று இறைவரைத் தரிசித்துச் சாபத்துயர் நீங்கி என்னை அடைவாயாக" என்றனர்.

முனிவர் பணித்தபடி இந்திரன் விளத்தொட்டியை அடைந்து கீழ்த்திசையில் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி அத்தீர்த்தத்தால் பிரமபுரீசருக்கும் கரும்பிரத நாயகிக்கும் அபிஷேகம் செய்து பூசித்துப் பலநாள் வழிபாடுசெய்து தான் முனிவர் சாபத்தால் இழந்த எல்லாவற்றையும் பெற்று முத்தியையும் அடைந்தான். அகலிகை அத்தலத்திற்கு வந்து வழிபட்டுத் தான் முனிவர் சாபத்தால் இழந்தவற்றை அடைந்து குட்டநோயும் நீங்கப்பெற்று அவரை வந்தடைந்தாள்.]

(கலி விருத்தம்.)

வடிமலர் சீற்ற வச்சிர பாணி
படிமலர் துன்பம் பாற்றிட வெள்ளைப்
பொடிமலர் மேனிப் புண்ணியன் மேவும்
கடிமலர் வில்வக் கான மடைந்து. (க)

ஆற்றிய தீர்த்த மொன்றுள தம்மா
போற்றிய வன்ன புண்ணிய தீர்த்தத்
தேற்றிய மேன்மை யாருரை செய்வர்
மாற்றிய பாச மாமறை யீரே. (உ)

இன்ப மளிக்கு மெண்ணிய நல்கும்
துன்பம றுக்குந் தொல்வினை தீர்க்கும்
வன்பமர் விக்கு மாசுதொ லைக்கும்
அன்பமர் சிந்தையி னாடிடு வோர்க்கே. (ங)

கo. இந்திரதீர்த்தப் படலம்.

க. வடி மலர் - கூர்மை மிக்க; வச்சிரத்திற்கு அடை.
உ. ஆற்றிய - உண்டாக்கிய.
ங. வன்பு - வன்மை.

புண்ணியம் வேண்டிற் போகம் விரும்பிற்
கண்ணிய யாவுங் கைக்கொள வெண்ணின்
எண்ணிய மேலா மின்ப மவாவிற்
றண்ணிய வந்நீர் சார்ந்தனர் தோய்வார். (௪)

மகர மதிக்கட் பூரணை வந்து
நிகரற மேவு நின்மல நாளிற்
புகலரு மன்ன புண்ணிய தீர்த்தம்
இகலற மூழ்கி னெய்துவர் முத்தி. (௫)

அன்ன தினத்தி லாடுதல் செய்து
சொன்னமுன் னாய தூமறை யோர்க்கு
மன்ன வழங்கி மற்று மியற்றும்
என்னவு மங்க ணியற்றிட வேண்டும். (௬)

வந்தி யடைந்து மனத்தை யொருக்கி
நந்திய வந்நீர் நன்குற வாடிப்
புந்தியி னன்பிற் போய்விளத் தொட்டித்
தந்தி யுரித்த தாணுவைப் போற்றி. (௭)

அனைய னிடத்தி லமர்ந்த கரும்பின்
நனைய மலர்த்தா ளடி வணங்கி
இனைய தவத்தை யெட்டுட னைந்து
நினையவந் நாள்க ணீக்குவ ளாயின். (௮)

மைந்தனை யாரு மதித்திட வீனும்
முந்திய குட்ட முதற்பிணி தீரும்
அந்தமந் தாகினி யாடலு மொவ்வா
திந்தநன் னீரிடை யாடலுக் கென்றும். (௯)

அன்ன தடத்தினை யாதுநி கர்க்கும்
முன்னம்வின் னாளி முயன்றினி தாக்க

௪. கண்ணிய - கருதிய.

௫. மகரமதி - தைமாதம்.

௬. சொன்னம் முன்னாய - தங்கம் முதலிய. மன்ன - நிலைபெற.

௭. வந்தி - மலடி.

௮. கரும்பின் - கரும்பிரதநாயகியின்.

௯. ஈனும் - பெறுவாள். குட்டம் - குஷ்டநோய். மந்தாகினி - கங்காநதி.

உன்னருங் காரண மொன்றது கேண்மின்
நன்னய மாதவத் தீர்நவில் வேனான். (௧௦)

(வஞ்சித் துறை.)

கோத மப்பெயர், மாத வத்தினோன்
காத லுற்றிடும், ஆத ரத்தினள். (௧௧)

அகலி கையெனும், இகலில் பொற்பினாள்
நகில்வி ருப்பினால், முகின டத்தியே. (௧௨)

விண்ணி ருந்தவா, றெண்ணி யெண்ணியே
மண்ணில் வந்தனன், கண்ணி யேங்கினான். (௧௩)

விருத்த கங்கைமா, திருத்த வண்கரை
அருத்தி மேவுறப், பொருத்தி வாடுவான். (௧௪)

சொற்ற மாமுனி, அற்ற நோக்குவான்
பெற்றி லாமையால், முற்றும் வாடுவான். (௧௫)

வீழி வாய்மயல், ஆழி மூழ்குவான்
வாழி யிந்திரன், கோழி கூவினான். (௧௬)

முனிவன் மெய்யெனத், தனியெ முந்தனன்
நினையு மாநதி, துனைய வேகினான். (௧௭)

வெருக்கொ ளாதவன், பொருக்கென் றேயெழா
மருக்கொள் வார்குழல், இருக்கை மேவினான். (௧௮)

முலையும் வாணுதற், சிலையும் யாத்தமே
கலையு நோக்கினான், நிலைக லங்கினான். (௧௯)

௧௨. முகில் நடத்தி - மேகத்தை வூர்தியாகக் கொண்டு நடத்தும் இந்திரன்.

௧௩. கண்ணி - கருதி.

௧௪. விருத்த கங்கை - கோதாவரி. திருத்தம் - தீர்த்தம்.

௧௫. அற்றம் - இல்லாத சமயம்.

௧௬. வீழி - வீழிப்பழம். மயல் ஆழி - மயக்கமாகிய கடல். வாழி : அசைநிலை.

௧௭. துனைய - விரைவாக.

௧௮. மருக்கொள்வார் குழல் - அகலிகை.

௧௯. யாத்த - கட்டிய.

பொழில வாவுமா, றெழில்செ யோருரு
மொழிமு னேற்றவள், விழிமு னின்றனன். (உ0)

(தரவு கொச்சகக் கலிப்பா.)

கரும்புவரிச் சிலைகுழைத்துக் கருவண்டு நாண்பூட்டி
அரும்புமலர்க் கணைகடுரந் தநங்கவேள் வலிகாட்ட
இரும்புநிகர் புயவலிதோற் றெதிர்நின்ற விந்திரனைச்
சுரும்புமுரல் கருங்கூந்தற் றோகைவிழி யுறக்கண்டாள். (உக)

கண்டவுடன் மாழாந்து கடுங்காமக் கனன்மூள
விண்டவுரு வுடனடைந்து மேவியவில் வேடானே
வண்டமரு நறுந்தெரியல் வலித்தோட்கந் திருவனே
கொண்டவுரு வரியதெனக் குறித்துநீ யாரென்றாள். (உஉ)

அப்போது வானாட்டுக் கதிபனா னணங்கேநின்
செப்போது முலைதிளைப்பான் சிந்தைகுறித் தணுருழந்தேன்
இப்போது சமயமுணர்ந் தெய்தினே னருள்சுரந்து
துப்போது செங்கனிவாய்ச் சுவையூற றருகென்றான். (உங)

என்செய்கேன் முனிவருமே யென்றுமட மாதுரைப்ப
மின்செய்பூ ணிந்திரனும் வெருவரேன் மென்னகையாய்
மன்செய்மா தவமுனிவன் வாராது தடுப்பலெனக்
கொன்செய்மா முகிலனைத்துங் கூவிமழை பொழிகென்றான். (உச)

கண்மறைய முகிற்படலங் கடல்குடித்துக் கறுத்தெழுந்து
விண்மறைய மேற்பரந்து விடாதுசள சளவென்றே
எண்மறையப் பொழிபொழுதி லெய்திடான் முனியென்று
பண்மறையப் பொருமொழியைப் பாகசா தனன்புணர்வான். (உரு)

முந்தவனைத் திருத்தியிள நகில்வருடி முத்துவந்து
பந்தமிகு வாயூறல் பாகினுமின் புறப்பருகிச்
சந்தவரைக் கலைநெகிழ்த்துத் தடம்பணைத் தோளவள்குழைய
நந்தமிகும் பெரும்போக நன்குதிளைத் தினிதிருந்தான். (உசு)

உ0. பொழில் - பூமி.
உஉ. மாழாந்து - மயங்கி. விண்ட - சொன்ன.
உங. துப்பு - பவழம்.
உச. வரும் - வருவான்.
உசு. பாகினும் - தேன்பாகைக் காட்டிலும்.

கதிருதய மெழுமுனமுட் காற்கோழி கூவியதும்
அதிருமிடி யுதிரமழை யகாரணத்திற் பெய்வதுவும்
முதிருமறி வுடையதிரு முனிவன்யோ கினிலுணர்ந்தான்
பிதிருமழல் கண்சிதறப் பெருங்கோபங் கொடுமீண்டான். (உஎ)

வந்துவிலை மகளனைய மங்கையையுங் கொங்கைதழீஇ
நந்துமகிழ் கொண்டிருந்த ஞானமிலாக் கள்வனையும்
முந்துசினந் தெதிர்நோக்க மொழிகுழறி நடுநடுங்கி
உந்துமுயிர் தள்ளாட வொதுங்கியொரு புடைநின்றான். (உஅ)

கொடியமக பதிகேட்டி குறியொடுவா னுடையும்
நெடியதிரு வமுமிழத்தி நீயென்று சபித்தொழித்து
முடியவடு குட்டமுற்று முலைநிதம்ப மற்றொழியக்
கடியதுய ருறுகென்று காரிகையை யுஞ்சபித்தான். (உகூ)

இருவரும்வந் தடிமிசைவீழ்ந் தின்னலடைந் தழுதாற்றப்
பொருவருமா முனியிரக்கம் பூண்டருளிச் செய்வானிவ்
வொருவருந்தீ வினையொழிய வுயர்சோழ நாட்டுணரார்
மருவருமோர் விளத்தொட்டி மாநகரொன் றுண்டுளதால். (ங0)

அரும்புபுக ழத்தலத்தி லவிர்பிரம புரீசனுமங்
கரும்பிரத நாயகியுங் கண்டுவணங் கிடுவார்க்கு
விரும்புபல வரமளித்து மேன்மேலு மருள்சுரப்பர்
சுரும்புமுரல் கற்பகப்பூந் தொடையாய்நீ யங்கடைந்து. (ஙக)

பத்தியிற்பூ சித்திழந்த யாவையும்பாங் குறப்பெற்று
முத்தியும்பின் னடையென்று மொழிந்தவனைப் போக்கியபின்
புத்தியின்மங் கையைநோக்கி நீயுமவண் போய்ப்போற்றிச்
சித்தியுற விழுந்தவெலா மடைந்தெனைச்சே ருதியென்றான். (ஙஉ)

முனிவனுரைப் படிமகவான் மூவாவத் தலமடைந்து
புனிதமுறத் தன்றிசையி னொருதீர்த்தம் புதிதாக்கிக்
கனிதரவந் நீர்முகந்து கரும்பிரத நாயகியை
இனியபுகழ்ப் பிரமபுரீ சனையாட்டி யினிதேத்தி. (ஙங)

பன்னுணல் வழிபாடு செய்துபரம் பரனருளால்
முன்னுளி விழுந்தவெலா மடைந்தனன்முத் தியுமடைந்தான்

உஎ. முள் கால் கோழி. யோகினில் - யோகப்பார்வையினால்.
ங0. உணரார் - அறியாதவர். மருவரும் - அடைவதற்கு அரிய.
ஙங. மூவா - அழியாத. தன்றிசையென்றது கிழக்குத் திக்கை.

பொன்னாரு மகலிகையும் போற்றியுறுப் பெலாமடைந்து
தன்னாளும் பிணிநீங்கித் தன்பதியைச் சார்ந்துவந்தாள். (௩௪)

இந்திரனார் தீர்த்தவரா விதுவாமிப் பெருந்தீர்த்தம்
மந்திரமா மறையுரைத்த வழிவழுவா தெப்பொழுதும்
தந்திரமா தவத்தினரே சார்ந்தாடக் கிடைப்பதுமற்
றெந்திரநேர் பிறவியொழித் தின்பமே நுகர்ந்திருப்பீர். (௩௫)

ஆகத் திருவிருத்தம் - ௨௭௯.

௧௧. அக்கினிதீர்த்தப் படலம்.

கதைச் சுருக்கம்.

[ஒருகால் அக்கினிதேவன், யாகங்களில் தனக்குக் கொடுக்கும் அவிர்ப்பாகத்தோடு மற்றத் தேவர்களுக்குரிய பாகங்களையும் வஞ்சனையால் உண்டுவந்தான். அதனையறிந்த தேவர்கள் யாவரும் அவன்பாற் சென்று, "எங்கள் பாகங்களையும் நீ உண்ணுதல்தகுமோ?" என்றுகேட்க, அவன், "என்னிடத்திற் கொடுக்கப்படுவன யாவும் என்னுடையனவே" என்றான். அதுகேட்ட தேவர்கள் சினந்து, "நீ உண்ணுகின்ற யாவும் சீரணமாகாமற் போவனவாக" என்று சபித்து விட்டுச் சென்றார்கள்.

அதுமுதல் அக்கினிதேவன் மந்தமுற்று அவிர்ப்பாகத்தைச் சிறிதேனும் உண்ணமாட்டாதவனாகித் துன்பம் அடைந்தான். அவன் அவிர்ப்பாகம் உண்ணுதல் ஒழியவே யாகம் இல்லையாயிற்று. அதனால் தேவர்கள் பசியை அடைந்தார்கள்; அதனால் மேகங்களும் மழை பொழியவில்லை; எங்கும் வறுமைத் துன்பம் மிக்கது.

அதனைத் தேவர்கள் அறிந்து கைலையை அடைந்து சிவபெருமானைப் பணிந்து அக்கினிதேவன் தங்கள் பங்கையும் உண்டதனால் அவனுக்குத் தாம் சாபமிட்டதனையும் அதனால் விளைந்தவற்றையும் கூறி, "இத்துயர் நீங்கத் திருவருள் புரியவேண்டும்" என்று இரந்து நின்றார்கள். அதனைக்கேட்ட இறைவர் அக்கினிதேவனை அழைத்து, "நீ வில்வாரணியம் சென்று நம்மைப் பூசித்தால் நின் நோய் நீங்கி வன்மையையடைவாய். பிறகு முன்போலத் தேவர் பங்கிற்கு ஆசைப்படாமல் வாழ்வாயாக" என்று பணித்து விடுத்தனர். அவன் அவரிட்ட கட்டளைப்படியே வில்வவனத்தை அடைந்து அக்கினிமூலையில் ஒரு தீர்த்தத்தை

௩௪. பதியை - கணவரை.

உண்டாக்கி, அத்தீர்த்தத்தால் இறைவர்க்கும் உமாதேவியார்க்கும் அபிடேகம் செய்து பதினாயிரம் வருஷம் அங்கிருந்து பூசை செய்து நோய் நீங்கி உய்ந்தான்.

அந்த அக்கினிதீர்த்தம் தன்பால் ஸ்நானம் செய்பவர்களுக்குச் செல்வமும், நினைத்த வாழ்வும் தந்து மகாபாதகங்களை ஒழிக்கும்.]

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

உரவுசால் செந்தீச் செல்வ னுத்தம மறையோர் வேள்விப்
பரவுசா றனது பாகம் பரிந்தினி தருந்த லன்றி
இரவுசான் மற்றை வானோர் பாகமு மெளிது கொண்டு
கரவுசா ரொழிவி னுண்டு களித்திருப் பவனே யானான். (௧)

அன்னது தெரிந்த வானோ ரனைவரு மவன்பாற் சென்று
நின்னது பாக மன்றி நெறிவரு மெங்கள் பங்கும்
உன்னது வாகக் கோட லொக்குமோ வென்று கேட்க
என்னது முகத்தி னீவ தென்னதே போமி னென்றான். (௨)

கடவுள ரிரப்பு வார்த்தை கழறவு மெண்ணா னாகி
மடமையி னெழுநா வுள்ளான் மறுத்துரைத் தனனப் போதே
அடருநீ யுண்ணும் யாவு மழிதரா துண்ட வாறே
படருற விருக்க வென்று பண்ணவர் சபித்துப் போனார். (௩)

வானவர் சாபங் கொண்ட வளரெரிக் கடவு ளென்பான்
ஊனமி லவிசற் றேனு முண்ணவல் லானே யாகி
மேனகு துயரம் பூண்டு வெவ்விய பிணிக்கோட் பட்டான்
ஆனதந் நாண்முன் னாக வவியுண வொழிந்த தன்றே. (௪)

அழலுண வொழிந்த ஞான்றே யருமறை மகம்போய் விட்ட
தழலது போய ஞான்றே யும்பர்வெம் பசியை யுற்றார்
கழலவர் பசித்த ஞான்றே கார்வழக் கற்ற தெங்கும்
நிழலது வற்ற ஞான்றே நிரப்புவந் தடைந்த தம்மா. (௫)

௧௧. அக்கினிதீர்த்தப் படலம்.

௧. உரவு - வன்மை. கரவு - கள்ளம்.
௨. என்னது முகத்தின் - என்னிடத்தில்.
௩. இரப்பு - யாசித்தல். அழிதராது - சீர்ணமாகாமல். படர் - [துன்பம்.
௪. வல்லான் - வல்லமையில்லான்.
௫. நிழல் அது - நிழலைச் செய்கின்ற அந்த மேகம்.

விண்ணவ ரதனை யோர்ந்து வெள்ளியங் கிரியைச் சார்ந்து
பண்ணவர் பரவு நந்தி பதமலர் பணிந்து நெற்றிக்
கண்ணவ னடியில் வீழ்ந்து கருணையங் கடலே வந்து
நண்ணவர்க் கினிய வாழ்வே நயமலி சுகுணக் குன்றே. (௬)

எங்கடம் பங்குஞ் சேர்த்தே யெழுநா வுடையோ னுண்டான்
அங்கவன் றன்பாற் சென்றீ தழகிய தன்றே யென்றேம்
வெங்கனன் மறுத்தான் பின்னும் வெகுண்டுநீ யுண்ப வெல்லாம்
சிங்கலில் லாது போக வென்றுயாஞ் செப்பி விட்டோம். (௭)

அத்தகு சாபந் தன்னா லழலுழல் பிணிய னாகி
வித்தக மகமுந் தீர்ந்து மேகத்தின் வழக்கு மாறி
உத்தம வுயிருஞ் சாம்ப வுற்றது பொல்லாங் கைய
சித்தமின் றிரங்கி யெல்லாந் தீர்த்தருள் செய்தி யென்றார். (௮)

புலவர்விண் ணப்பங் கேட்ட புண்ணியன் முறுவல் பூத்துக்
குலவுசெந் தீயை யங்குக் கூவிநீ வில்வக் கானத்
தலமதை யின்று சார்ந்து தகநமைப் பூசிப் பாயேற்
கலவுநின் வயிற்று மந்தங் கழியுநீ வலியோ னாவாய். (௯)

விறன்மலி வானோர் பாக மீட்டுமுன் போல வெஃகேல்
திறன்மலி யழலே சேறி யென்றலுந் தேவ தேவன்
அறன்மலி பாதம் போற்றி யங்குநின் றெழுந்து வல்லே
நிறன்மலி மாட கூட நிறைவிளத் தொட்டி யுற்றான். (௧௦)

உற்றதன் றிசையின் மாடோ ருறுபுனற் றடமுண் டாக்கி
மற்றதின் முகந்து வில்வக் கானத்து வாழ்வை வாமம்
பெற்றவின் கரும்பை யாட்டிப் பிறங்குமோ ரயுத யாண்டு
முற்றவங் கிருந்து பூசை முடித்தனன் பிணிதீர்ந் துய்ந்தான். (

குலவுமத் தீர்த்தஞ் சேர்ந்தார்க் கொல்லிபேர் பூண்டு கொண்டு
நிலவுதன் பால்வந் தாடு நெறியுடை யவர்க்கு நாளும்

௬. நண் அவர்க்கு.
௭. சிங்கல் - குறைதல் ; இங்கே சீர்ணமாதல்.
௯. கலவும் - கலந்திருக்கின்ற.
௧௦. வெஃகேல் - விரும்பாதே. சேறி - செல்வாய்.
௧௧. தன் திசையின்மாடு - அக்கினிதிக்கில். அயுதம் - பதினாயிரம்
௧௨. சேர்ந்தார்க் கொல்லி பேர் - அக்கினி தீர்த்தமென்னும் பெய

கலவுசம் பத்து நல்கும் கருதிய வனைத்து மீயும்
உலவுமா பாத கங்க ளொழித்திடு முணர்வான் மிக்கீர். (௧௨)

ஆகத் திருவிருத்தம் - ௨௯௧.

௧௨. யமதீர்த்தப் படலம்.

கதைச் சுருக்கம்.

[மாண்டவியரென்னும் முனிவரொருவர் வேனிற்காலத்தில் நெருப்பினிடையிலும் பனிக்காலத்தில் நீரிலும் நின்று கடுந்தவம் புரிந்தனர். அவருடைய தவக்கனலின் புகையானது மேலெழும்ப அதனை யறிந்த இந்திரன் தன் பதவி நீங்குமென்றஞ்சி அம்முனிவருடைய தவத்திற்கு இடையூறு செய்ய நினைந்தான். நினைந்து யமனை அழைத்து, "நீ மாண்டவியமுனிவர் செய்யும் தவத்திற்கு இடையூறு புரிக" என்று பணித்தான். யமன் அதற்கு உடன்பட்டுத் தன் தூதருள் இருவரை அழைத்து முனிவர் தவத்தைக் கெடுத்து வருமாறு விடுத்தான்.

அவ்விருவரும் பூவுலகம்சென்று ஓரரசன் அரண்மனையிற் புகுந்து அங்கேயுள்ள பல பொருள்களைக் கவர்ந்து கொண்டுவந்து மாண்டவிய முனிவரது ஆச்சிரமத்தில் அவற்றை வைத்துவிட்டு அவருடைய சீடர்களோடு கலந்து இருந்தனர். அரசனுடைய பொருள்கள் கொள்ளைபோனமை அறிந்த அதிகாரிகள் சிலர் அவற்றைத் தேடுவாராய்ப் பல இடங்களை நாடித் தேடியுங்காணாமல் மாண்டவியமுனிவர் ஆச்சிரமத்திற்கு வந்து தாம் தேடும் பொருள்யாவும் அங்கே இருக்கக்கண்டு கோபம் கொண்டனர். "கள்வன் அகப்பட்டான்" என்று கூறி முனிவரைக் கழுவில் ஏற்றித் துன்புறுத்தி அரசனுடைய பொருள்களை யெல்லாம் கொண்டுபோனார்.

துன்புற்ற முனிவர் இச்செயலைச் செய்தார் யாரென ஆராய்ந்து உண்மை அறிந்து யமனுக்கு முன் சென்று, "நீ பிரமஹத்தி தோஷத்தை அடைவாயாக" என்று சபித்தனர். யமன் மிக வருந்தி இந்திரனிடம் சென்று, "இனி என் செய்வேன்!" என்று புலம்பினான். அப்பொழுது இந்திரன், "நீ அஞ்சாதே, வில்வாரணியம் அடைந்து இறைவனைப் போற்றினால் உன் சாபத்துயர் நீங்கும். அத் தலத்திலேதான் நானும் கோதமமுனிவன் சாபத்தினின்றும் உய்ந்தேன். ஆதலின் அங்கே செல்க" என்று கூற, யமன் அங்ஙனமே விளத்தொட்டிக்கு வந்து தென்

அ

றிசையில் ஒரு தீர்த்தம் அமைத்து அதனுல் சிவபிரானுக்கு அபிஷேகம் செய்து பூசை இயற்றினுன். பின் அம்பிகையையும் வழிபட்டு ஆயிர வருடங்கள் வழிபாடு செய்துகொண்டே அங்கேயிருந்து பிரமஹத்தி தோஷம் நீங்கப் பெற்றுத் தன் இடம் அடைந்தான்.

யமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர் பிரமஹத்தி முதலிய தோஷங்களினின்றும் நீங்கி யமதண்டம் ஒழிந்து சிவகதி பெறுவர்.]

(தாவுகோச்சகக் கலிப்பா.)

மாண்டவிய னென்னுமொரு மாதவத்தோன் வேனிலிடை
மூண்டகொடுந் தழனடுவு மொய்த்தபெரும் பனிக்காலம்
மாண்டமலர்ப் பொய்கையினு மூழ்கிமா தவம்புரிவான்
மூண்டதவக் கனலெழுந்து புகைப்படல மூடியதே. (க)

அக்காலம் விண்ணுலகத் தரசுபுரி யமரர்பிரான்
இக்கால நம்பதவி யிழப்பானெய் தியதென்று
முக்கால முழுதுணரு முனிதவத்திற் கிடையூறு
புக்கால மெனக்கலக்கப் புந்தியினுய்ந் திதுசெய்தான். (உ)

தண்டதரன் றனைக்கூவித் தவநோற்கு மாண்டவியன்
ஒண்டவநோக் கிடினுனே வொருநீயோ பதமிழத்தல்
கொண்டவதற் கிடையூறு கடிதியற்று கெனக்கூற
மண்டமர்வெம் பகடூர்தி மற்றதனுக் குடம்பட்டான். (ங)

வினைவலிய தூதரிரு வரைக்கூவி மிகநோற்கும்
புனைவலிய மாண்டவியன் புகலரிய மாதவத்தைக்
கனைவலிய நீரடைந்து கடிதுதடுத் திடுமென்ன
வினைவலிய தண்டதரன் மாற்றமேற் கொடுநடந்தார். (ச)

இருவருமோ ரரசன்மனை யிற்புகுந்து பொருள்கவர்ந்து
வெருவருமா தவமுனிவன் மேவியுறை யாச்சிரமத்
தொருவருமா றிட்டிருந்தா ருறுபலசீ டரிற்கலந்தே
திருவருமன் னவன்பொருளை வெளிப்படுத்துஞ் சிலரெழுந்து. (ரு)

கஉ. யமதீர்த்தப் படலம்.

ங. தண்டதரன் - யமன். பகடு - எருமைக்கடா.
ச. கனை - மிகுதி.
ரு. சீடரின் - முனிவருடைய மாணக்கர்களைப்போல.

கருதுமிடம் பலதேடிக் காணுது வருந்துவார்
விருதுசெறி மாதவத்தோன் மேவுமாச் சிரமத்தே
வருதுகளில் பொருண்முழுது மருவியுறை தரக்கண்டு
பொருதுவிற லடையுமவர் புழுங்கிமிகச் சிவந்தனரே. (சு)

அரசுநிதி கவர்கள்வ னகப்பட்டா னெனப்பிடித்துப்
பரசுமுனி வனைக்கொடிய கழுமாட்டிப் படர்செய்து
முரசுபடு கடைத்தலையான் முழுப்பொருளுங் கொடுபோனுர்
விரசுமுனி யிதுசெய்தார் யாரென்று மிகத்தேர்ந்து. (எ)

கருகுநிறப் பகடுகைக்குங் கடுங்கால னெதிரடைந்து
திருகுசினத் தவன்மறையோர் கொலைப்பாவஞ் சேர்தியென
உருகுமனத் தவனுகி யுள்வெருவி யொருமகவான்
அருகுபுகுந் திதற்கென்னே வாற்றுவே னெனப்புலம்ப. (அ)

அஞ்சாதி கூற்றுவநீ யையனுமை யோடமரும்
மஞ்சாதி தவழுமணி மாடமலி விளத்தொட்டி
நெஞ்சாதி யொருவழியே நிறீஇயடைந்து போற்றுவையேற்
பஞ்சாதி மறைபவர்க்கொல் பழிச்சார்பு தவிர்ந்துய்வாய். (கூ)

அருந்தவத்துக் கவுதமனுர் வெஞ்சாப மகன்றதுவும்
இருந்தவத்தி னத்தலத்தே யெனக்கதுநீ யுந்தெரிவாய்
பொருந்தவத்து விதர்மருவும் புண்ணியவத் தலஞ்சார்தி
திருந்தவத்து வழிமாற்றுஞ் செங்கோலா யென்றுரைத்தான். (க0)

விண்ணுளி மொழிகேட்டு விறற்றண்ட தரனெற்றிக்
கண்ணுளி விளத்தொட்டி கலந்தொருதன் றிசைநாடி
எண்ணுளி யாகாம வியைதரவோர் தடந்தொட்டுப்
பண்ணுளி வில்வவனப் பரமனையப் புனலாட்டி. (கக)

சு. சிவந்தனர் - கோபித்தனர்.
எ. பரசும் - துதிக்கப்படும். படர் - துன்பம். கடைத்தலையான் - அரசன்.
அ. பகடு உகைக்கும். என - என்று முனிவர் சபிப்ப.
கூ. மஞ்சு ஆதி - மேகம் முதலியவை. பஞ்சாதி - வேதத்தின் உறுப்பு. மறையவர்க் கொல் - பிராமணரைக் கொன்ற.
க0. திருந்து செங்கோல்; அவத்து வழி மாற்றும் செங்கோல்.
கக. எண்ணுளி - ஆலோசனை செய்பவன். தன்திசை யென்றது தென்றிசையை.

நலமருவு கரும்பிரத நாயகிதா ளும்பரவிப்
புலமருவு மிவ்வாறு போற்றியா யிரமாண்டத்
தலமருவு கூற்றுவற்குச் சங்கரன்பே ரருள்செய்ய
வல்மருவு பிரமகொலை மாய்ந்ததுதன் பதியடைந்தான். (கஉ)

தென்றிசையின் மருவியம தீர்த்தத்து மூழ்கியவர்
ஒன்றியநன் மறையவர்வெங் கொலைப்பழியா தியுமொழிந்து
கன்றியவம் மறலிபுரி தண்டமில ராய்க்களித்து
நன்றியமர் கயிலாய நண்ணிவீற் றிருப்பாரால். (கரு)

ஆகத் திருவிருத்தம் — ௩௦௪.

கரு. நிருதிதீர்த்தப் படலம்.

கதைச் சுருக்கம்.

[நிருதி யென்பவன் ஒருமுறை இந்தகரென்னும் ஒருமுனிவர் தவம் செய்யும் வனத்தை அடைந்து அவரை அவமதித்தனன். அதனால் அம்முனிவர் சினந்து, "நின்பதவியை இழந்து மூடனாய்த் துயருறுக" என்று சபித்தனர். சாபம் வந்த அக்கணமே தன் அதிகாரத்தையும் அறிவையும் இழந்த நிருதி கலக்கமுற்று அம்முனிவரை வணங்கித் தன் பிழையைப் பொறுத்தருளி உய்யும்வழி கூறும்படி வேண்டினான். அம்முனிவர், "விளத்தொட்டி என்னும் தலத்தை அடைந்து சிவபிரானைப் பூசித்தால் நீ நலமுறுவாய்" என்றனர். அங்ஙனமே அவன் அத்தலத்திற்குச் சென்று தனக்குரிய தென்மேற்குத் திக்கில் ஒரு தடாகம் அமைத்துச் சிவபிரானைப் பூசித்து லக்ஷம் வருடங்கள் அங்கிருந்து வழிபட்டுத் தன் பதவியையும் அறிவையும் பெற்றனன்.

நிருதிதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிரமபுரீசரையும் கரும்பிரத நாயகியையும் வில்வத்தாற் பூசிப்பவர்கள் எல்லா நலங்களையும் பெற்று வாழ்வார்கள்.]

(கலிவிருத்தம்.)

இகன்மிகு நிருதியென் றியம்பி ராக்கதன்
தகன்மிகு இந்தகன் றவமி யற்றிடும்
நகன்மிகு தவவன நண்ணி யன்னவன்
அகன்மிகு வெறுப்புற வவம தித்தனன். (க)

நிந்தையு முரைத்திடு நிருதி தன்னைப்பார்த்
தந்தையின் முனிவர னழன்று கூறுவான்
முந்தைநின் பதவியு மிழந்து மூடனாய்ச்
சிந்தைவெந் துயரொடு சேர்தி யென்றனன். (உ)

அரியவெஞ் சாபம்வந் தடைந்த காலையே
உரியதன் னிறைமையோ டுணர்வுந் தீர்தரக்
கரியவந் நிருதியுங் கலங்கி மாதவப்
பெரியமா முனிவனைத் தொழுது பேசுவான். (௩)

அடியனேன் மடமையா லவம தித்தனன்
நெடியமா தவத்துநீ பொறுத்த னீதியிக்
கொடியனேன் பிழைமறந் துய்யக் கூறுதி
படியவாங் கருணையா யென்வப் பண்ணவன். (௪)

வையகம் பொலிவிளத் தொட்டி மாநகர்
எய்தியங் கமர்தரு மிறையைப் பூசித்துச்
செய்யநின் பதவியு மறிவுஞ் சேர்தியென்
றையனன் முனிவர னருளிற் கூறினான். (௫)

நெறிமுனி யுரைப்படி நிருதி யென்பவன்
செறிவள மலிவிளத் தொட்டி சேர்ந்தனன்
அறிதருந் தன்றிசைத் தீர்த்த மாக்கினான்
குறிதரு மப்புன லாடிக் கொண்டரோ. (௬)

இசைமலி பிரமபு ரீசனைப்பல
திசைபுக ழருட்கரும் பிரதச் செல்வியை
வசையில்பத் தயுதநல் வருடம் பூசித்தான்
நசைமிகு பதியுட னறிவு நண்ணினான். (௭)

திருவளர் நிருதிநற் றீர்த்த மூழ்கியே
குருவளர் பரமனை யுமையைக் கும்பிட்டுத்

கரு. நிருதிதீர்த்தப் படலம்.

உ. அந்தை இல் - அகந்தை இல்லாத.

௩. இறைமை - அதிகாரம்.

௬. தன்றிசை யென்றது தென்மேற்குத்திசையை.

௭. பத்து அயுத நல்வருடம் - லக்ஷம் ஆண்டுகள்.

தருவளர் வில்வத்தாற் போற்றுந் தக்கவர்
மருவளர் நலமெலா மருவி வாழ்வரே. (௮)

ஆகத் திருவிருத்தம் - ௩௧௨.

௧௪. வருணதீர்த்தப் படலம்.

கதைச் சுருக்கம்.

[வசிட்ட முனிவர் மேல்கடலின் கரையிலிருந்து தவம் செய்த பொழுது வருணன் மீன்களையும் சங்குகளையும் அவர்மேல் எறிந்து இடையூறு செய்தான். அதனை அறிந்த முனிவர் அவன்பாற் சினந்து மானிடப் பிறவியுற்று வாடும்படி சபித்தனர். அதனைக்கேட்ட வருணன் அவரடியில் வீழ்ந்து, "இத்தீங்கினை நீக்கி யருளவேண்டும்" என்று வேண்டினன். அப்பொழுது முனிவர் இரங்கி, "நீ விளத்தொட்டி யென்னும் தலத்திற்குச் சென்று சிவபிரானை அருச்சித்து இப்பாதகத்தைப் போக்கிக்கொண்டு பின்பு சந்தனு வென்னும் அரசனாகப் பிறந்து செங்கோல் செலுத்தி உன் பதவியைப் பெறுவாயாக" என்றனர்.

வருணன் அங்ஙனமே விளத்தொட்டி சென்று மேற்குத் திசையில் ஒரு தீர்த்தம் உண்டாக்கிச் சிவபிரானையும் அம்பிகையையும் வில்வம் முதலியவற்றாற் பூசித்து ஐயாயிரம் ஆண்டுகள் இருந்து வழிபட்டுச் சிவபிரானுடைய திருவருளைப்பெற்றான். அப்பால் சந்தனுவாகப் பிறந்து பிறகு தன் பதவியை அடைந்தனன்.

வருண தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர்கள் துன்பம் நீங்கி அரசபோகத்தை அடைவார்கள்.]

(வஞ்சிவிருத்தம்.)

வையமேத்தும் வசிட்டன்முன்
வெய்யர் நாடரு மேல்கடல்
ஐய வேலை யமர்ந்துயர்
செய்ய மாதவஞ் செய்தனன். (௧)

மதியி லானில் வருணனே
பொதிய மீன்பல போக்கியும்

௧௪. வருணதீர்த்தப் படலம்.
௨. மதியிலானில் - புத்தியில்லாதவனைப்போல. வளை - சங்கம்.

துதிசெய் வால்வளை தூவியும்
அதிக மாவிட ராற்றினன். (௨)

சிறந்த மாமுனி சீறியே
அறந்த வாநிலை யாற்றலை
மறந்த பாவி வருணபோய்ப்
பிறந்து மானிடப் பெற்றியே. (௩)

உற்று வாடி யொழிகென
முற்று சாப முடித்தனன்
பற்று தீமையைப் பாற்றெனச்
சொற்று வீழ்ந்து துதித்தனன். (௪)

காலில் வீழ்ந்து கதறிடு
மாலி லாழ்ந்த வருணனை
நூலி லாழ்ந்துயர் நோன்மையன்
பாலி னோர்ந்திது பன்னுவான். (௫)

துங்க மார்விளத் தொட்டிவாழ்
அங்க ணாதனை யர்ச்சியாப்
பொங்கு பாதகம் போக்கியே
தங்கு சந்தனு வாகுவாய். (௬)

அன்ன மன்னவ னாகியே
நன்னர் நீதி நடத்தியே
பின்னர் நின்பதம் பெறுதிபோ
என்ன வேவின னிருந்தவன். (௭)

மீட்டும் போற்றி விடைகொடு
மூட்டு மன்பு முதிரவே
சூட்டு சீர்விளத் தொட்டியூர்
மாட்டு வந்தனன் வருணனே. (௮)

தேக்கு தன்றிசைத் தீர்த்தமொன்
றாக்கி யப்புன லாட்டியே

௪. பாற்று - நீக்கியருள்.
௭. அன்ன - அந்த.
௮. ஊர்மாட்டு - ஊரினிடத்தில்.
௯. தன்றிசை யென்றது மேற்றிசையை.

தூக்கு ஞானச் சுடரையும்
காக்கு ஞானக் கரும்பையும். (௯)

வில்வ மாதிவி ழைந்திடா
அல்ல றீரவை யாயிர
நல்ல வாண்டுநற் பூசைசெய்
தெல்லை யில்லரு ளெய்தினன். (௧௦)

பின்பு சந்தனு வாய்ப்பிறந்
தன்பு கூர வவாவியே
தன்பு கழ்ப்பதி சார்ந்தனன்
வன்பு மேய வருணனே. (௧௧)

அன்ன நீர்படிந் தாடினோர்
இன்ன றீர்ந்தரு ளெய்துவார்
மன்னர் போக மருவுவார்
பன்ன வாங்கொல் பனவிரே. (௧௨)

ஆகத் திருவிருத்தம் - ௩௨௪.

௧௫. வாயுதீர்த்தப் படலம்.

கதைச் சுருக்கம்.

[சிவபெருமான்பால் பத்திபூண்ட கண்ணுவமுனிவரென்பவர் பலநாள் தவம் செய்வாராகி இருப்ப, அவரைச்சுற்றி ஒரு புற்றெழுந்து அவர் திருமேனியை மறைத்தது. ஒரு சமயம் அங்கேவந்த வாயு தேவன் அந்தப்புற்றைக்கண்டு, உள்ளே முனிவர் இருத்தலை அறியாமல், 'நாம் யாகம் செய்வதற்கு ஏற்றமண் இது' என்று எண்ணி அப்படியே அதனைப் பெயர்த்துத் தூக்கித் தன் இடம் கொணர்ந்து உடைத்தான். அப்பொழுது தவத்தினின்றும் நினைவுவரப்பெற்ற முனிவர் சினந்து, "நீ என்ன காரியம் செய்தாய்? இந்த அபசாரத்தால் உன்னை உலகத்தில் யாரும் பூசியாமல் போகுக!" என்று சபித்தார். கேட்ட வாயுதேவன், "அடியேன் இந்தப் பாவத்தை அறிந்து செய்திலேன்; பொறுத்தருள்க" என்று வேண்ட முனிவர் இரங்கி, "இப்பொழுதே வில்வாரணியம் சென்று பரமசிவனையும் அம்பிகையையும் வணங்கி இச்சாபத்தை நீக்கிக்

௧௨. பனவிரே - முனிவர்களே.

கொள்வாயாக" என்றனர். வாயுதேவன் அங்ஙனமே அத்தலமடைந்து வடமேற்கு மூலையில் ஒரு தீர்த்தமுண்டாக்கி அத்தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து சிவபிரானையும் அம்மையையும் வில்வத்தாற் பூசித்து வணங்கி ஆயிரம் ஆண்டுகள் அங்கிருந்து வழிபட்டுச் சிவபிரான் திருவருள் பெற்றுப் பழைய நிலையை அடைந்தான்.

வாயுதீர்த்தத்தில் நீராடினவர்கள் இஷ்ட சித்திகளையும் தவத்தையும் சிவபோகத்தையும் பெறுவர்.]

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

பொலிதரு கொன்றை வேணிப் புண்ணியற் கன்பு பூண்டு
கலிதரு புகழின் மிக்கான் கண்ணுவ முனிவ னென்பான்
ஒலிதரு தவத்தின் மேவி யுறைந்தனன் பலநா ளங்கு
வலிதரு புற்றெ ழுந்து மறைத்தது மேனி முற்றும். (௧)

ஒள்ளிய தவத்தோ னுள்ளா லுறைவது தெரியா னங்கு
நள்ளிய கந்த வாக னலமலி யாகஞ் செய்ய
வள்ளிய மண்ணி தென்று வளமிக முற்றும் பேர்த்தான்
துள்ளிய மகிழ்ச்சி யோடு துணிந்துகொண் டேகி னானே. (௨)

உறையிடஞ் சார்ந்து புற்றை யுடைத்திட வுணர்ந்தெ ழுந்த
நிறைதவன் வளியை நோக்கி யென்செய்தாய் நீதி யில்லாய்
துறையிலிவ் வபரா தத்தாற் குரைகடல் வைப்பில் யாரும்
பொறையுற நின்னைப் போற்றிப் பூசியா தொழிக வென்றான். (௩)

அறிந்துயான் செய்தே னல்லே னையனே பொறுத்தி யென்று
செறிந்துதாள் பூண்டு வேண்டத் திருமுனி யிரங்கிக் காற்றே
மறிந்திடா தின்னே வில்வ வனம்புகுந் தானை யன்பின்
முறிந்திடா வுமையைப் போற்றி முடித்தியிச் சாபமென்றான். (௪)

வளிவிளத் தொட்டி மேவித் தன்றிசை மாநீ ராக்கி
அளிவள ரந்நீர் மொண்டே யண்ணலை யுமையை யாட்டி

௧௫. வாயுதீர்த்தப் படலம்.

௧. ஒலிதரு - தழைத்த.
௨. உள்ளால் - உள்ளிடத்தே. கந்தவாகன் - வாயுதேவன்.
௩. வளியை - வாயுதேவனை.
௫. தன் திசை யென்றது வடமேற்குத் திக்கை. மா நீர் - பெரிய தீர்த்தத்தை.

நளிவளர் வில்வஞ் சூட்டி நண்ணியா யிரமாண் டேத்தத்
தெளிவளர் கருணை பெற்றுத் தேவனே யாகி வாழ்ந்தான். (௫)

மன்னிய வாயு தீர்த்த மருவிநன் றாடி னோர்கள்
உன்னிய வெல்லா மெய்தி யுறுகிளை சூழ வாழ்ந்து
மின்னிய தவத்த ராகி விளத்தொட்டிப் பெருமான் பாதத்
தன்னிய மின்றிச் சேர்வ ரானந்தப் போகந் துய்த்தே. (௬)

ஆகத் திருவிருத்தம் - ௫௫௦.

௧௬. சோமதீர்த்தப் படலம்.

கதைச் சுருக்கம்.

[சந்திரன் தன்னுடைய குருவின் மனைவியை விழைந்து அக்குருவால் சபிக்கப்பெற்று க்ஷயரோகத்தால் நாளுக்கு நாள் கலைகள் குறையும் தன்மையைப் பெற்றான். பிறகு குருவினுடைய திருவடியில் வீழ்ந்து பணிதலும் அவர், "நீ வில்வாரணியம் சென்று எம்பிரானையும் அம்பிகையையும் போற்றுவாயாயின் குறைதலோடு வளர்தலையும் பெறுவாய்" என்றருளினார். சந்திரன் அங்ஙனமே சென்று சோமதிக்காகிய வடதிசையில் ஒரு தீர்த்தம் அமைத்துச் சிவபிரானையும் அம்பிகையையும் பன்னீராயிரம் ஆண்டு வழிபட்டுத் தேய்தலோடு வளர்தலையும் பெற்றுத் தன் நிலையை அடைந்தான்.

அவன் அமைத்த சோமதீர்த்தத்தில் மூழ்குவோர் எவ்வித வினையும் தீர்ந்து எண்ணியவற்றை எண்ணியபடி எய்தி ஈற்றில் முத்தியையும் அடைவார்கள்.]

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

கடவுளா யிருந்தா னேனுங் கலைபல கற்றா னேனும்
மடமையோ னாகி னென்னா மாமதிக் கடவு ளென்பான்
இடவிய வுலக மெல்லா மிழிக்குமோ ரெண்ணங் கொண்டு
நடலைதீர் குரவன் பாரி நகிற்றுணை திளைத்தான் மாதோ. (௧)

௧௬. சோமதீர்த்தப் படலம்.

௧. நடலை - வஞ்சனை. குரவன் பாரி - ஆசிரியனுடைய மனைவி.

சற்றுமஞ் சாம லாசான் பன்னிதோ டழுவி யின்பம்
உற்றுவந் திருந்தான் யாரே யூழ்வலி யொழிக்க வல்லார்
முற்றுமாண் டளப்பா னோக்கி மூடவெஞ் சீட வுன்னைப்
பற்றுக கயநோய் நாட்கு நாட்குறை படுதி யென்றான். (௨)

கொடியவெஞ் சாப மேற்றுக் குரவன்பொன் னடிகண் மேல்வீழ்ந்
தடியனேன் செய்த குற்றம் பொறுத்தரு ளைய வென்ன
முடிவருங் கருணை யாசான் சந்திரன் முகத்தை நோக்கி
ஓடிவருஞ் சோழ நாட்டில் விளத்தொட்டி யெனுமோர் மூதூர். (௩)

பெருகுமந் நகர மேவும் பிரமபு ரீசன் றாளும்
உருகுமுள் ளகலா ஞான வொருகரும் பிரதக் கொம்பின்
மருவருந் தாளும் பன்னீ ராயிரம் வருடம் போற்றி
வெருவருந் தேய்த லோடு வளர்தலு மேவி வாழ்தி. (௪)

என்றுரை செய்ய வாலோ னெழில்விளத் தொட்டி யெய்தித்
தன்றிசை யாய சோம திக்கிலோர் தடாகந் தொட்டு
மன்றலப் புனனீர் கொண்டு வள்ளலை யுமையை யாட்டி
மென்றளிர் வில்வஞ் சூட்டி விருப்பொடு பூசை செய்தான். (௫)

கிளர்தரு குரவன் சொன்ன கெழுவுநா டீர்ந்த பின்பு
வளர்தர லோடு தேய்தன் மதிதொறு மெய்தப் பெற்றுப்
பளகறு வில்வக் கானப் பரமன்பால் விடைகொண் டேகித்
தளர்விற னிருக்கை புக்கான் றாரகைக் கணங்கள் சூழ. (௬)

சந்திர னமைத்த தீர்த்தத் தடம்புனல் படிந்து நாளும்
முந்திய வன்பிற் சென்று முதல்வனை யுமையைப் போற்றின்
எந்தவல் வினையுந் தீர்வா ரெண்ணிய வெண்ணி யாங்கே
சந்ததம் பெறுவா ரீற்றின் முத்தியுஞ் சார்வா ரன்றே. (௭)

ஆகத் திருவிருத்தம் — ௫௫௭.

௨. பன்னி - பத்தினியின். ஆண்டளப்பான் - பிருஹஸ்பதி. கயநோய் - க்ஷயரோகம்.

௫. ஆலோன் - சந்திரன். சோமதிக்கு - வடக்கு. மன்றல் - வாசனையையுடைய.

௬. நாள் - பன்னீராயிர வருடகாலம். பளகு - குற்றம்.

கஎ. ஈசானதீர்த்தப் படலம்.

கதைச் சுருக்கம்.

[ஈசானனென்னும் திக்குப்பாலகன் நாள்தோறும் கைலையை யடைந்து இறைவரைப் போற்றிவருங்காலத்தில் அவனுடைய மனம் ஒருவழிப்படாமல் ஒருநாள் அவனுடைய மனையாள் மீது ஞாபகம் கொண்டது. சிவபிரானை வழிபடுகையில் அங்ஙனம் மனம் செல்லுதலை யுணர்ந்து அஞ்சிய அவன் சிவபெருமானை வணங்கித் தன் மனநிலையை வெளியிட்டு, "இத்துயர் தீர ஒரு பிராயச்சித்தம் அருள்செய்யவேண்டும்" என்று வேண்டினன். உடனே பரமசிவன், "விளத்தொட்டியென்னும் தலஞ்சென்று எம்மைப் பூசித்தால் இந்தத்துயர் தீரும்" என்றருளிச் செய்தார். ஈசானன் அங்ஙனமே அத்தலத்தை அடைந்து வடகிழக்குத்திசையில் ஒரு தீர்த்தம் அமைத்து அதன் நீரால் வில்லவனேசரையும் கரும்பிரதநாயகியையும் அபிஷேகம் செய்து வில்வமுதலியவற்றால் அருச்சனைபுரிந்து வழிபட்டுப் பாதகந் தீர்ந்து தன் இடம் அடைந்து வாழ்ந்துவந்தான். ஈசான தீர்த்தத்தில் நீராடுவோர் துயரந்தீர்ந்து சிவலோகத்தை அடைவார்கள்.

இங்ஙனம் அமைந்த திக்குப்பாலகர் தீர்த்தங்கள் எட்டும் பிரமதேவரால் அமைக்கப்பட்டுத் திருக்கோயிலுள் விளங்கும் பிரமகூபமும் ஆகிய ஒன்பது தீர்த்தங்கள் விளத்தொட்டியில் உள்ளன. அந்த க்ஷேத்திரம் முதல் யுகத்தில் மூன்று யோசனை எல்லையும், இரண்டாம் யுகத்தில் இரண்டு யோசனை எல்லையும், மூன்றும் யுகத்தில் ஒரு யோசனை எல்லையும் உடையதாக இருந்தது. கலியுகத்தில் அரையோசனை எல்லையுடையதாக விளங்கும். அத்தல மான்மியத்தைச் சொல்பவர், கேட்பவர், எழுதிவைப்பவர் யாவரும் நற்பயனடைவார்கள். விளத்தொட்டிப் பெருமான் திருநாமத்தையும் கரும்பிரதநாயகியின் திருநாமத்தையும் தம் புதல்வர்க்கு இட்டு அழைப்போர் புண்ணிய உலகமெய்தி நற்போகம் அடைவார். அத்தலத்தில் அறம்முதலிய செய்வோர்கள் சிவபிரான் திருவருளை எய்தி வாழ்வார்கள்.

இங்ஙனம் கூறிவந்த சூத முனிவரை நைமிசாரணிய முனிவர்கள் வணங்கி, "இத்தலமான்மியத்தைக்கேட்டு முத்தர்களானோம். இனி எமக்கு என்ன குறையிருக்கின்றது!" என்று கூறி மகிழ்ந்தனர்.]

(கலிவிருத்தம்.)

மேவிய வீசானன் வெள்ளியங் கிரிமேவித்
தேவனை யடிபோற்றிச் சேவித்து வருநாளில்
ஓவரு மனமாய தொருவழிப் படலின்றிப்
பாவுதன் மனையாண்மேற் படர்ந்ததங் கொருநாளே. (க)

ஆண்டவன் றிருமுன்னர்த் தன்மன மடங்காதாய்
மாண்டதன் மனையாண்மேற் சேறலு மறிந்தஞ்சிப்
பூண்டவெந் துயரோடு மிதுசெயல் பொல்லாதென்
றீண்டிய பயமெய்த விறைவனை யடிதாழ்ந்து. (உ)

பரம்பர நின்சேவை பண்ணிடு மிதுபோதென்
வரம்பறு தீநெஞ்ச மனைவியை விருப்புற்ற
தரந்தைகொ ளதுதீர வடியனுக் கொருகழுவாய்
புரிந்தருள் செய்தியெனப் போற்றின னிரந்தனனே. (௩)

அண்ணலும் விளத்தொட்டி யாகிய தலஞ்சார்ந்து
பண்ணரும் பேரன்பிற் பரவுறு முமையோடும்
நண்ணரு மெமைப்பூசை நலமுறப் புரிவாயேல்
எண்ணரு மித்தீமை யிரிதரும் போவென்றான். (ச)

என்றலும் விளத்தொட்டி யெனப்படு தலஞ்சார்ந்து
நன்றமர் தன்றிசையே நாடியோர் தடந்தொட்டுப்
பின்றுத லில்லாத பிரமபு ரீசனையும்
ஒன்றிய கரும்பிரத வுமையையு மினிதாட்டி. (ரு)

அளவரும் வில்வமுத லாயின பலகொண்டு
களவறப் பூசிப்பக் கண்ணுத லருளாலே
பளகறு நிலைவாய்ந்து பாதக மதுதீர்ந்து
தளர்வறு தன்றிசையே சார்ந்தினி திருந்தனனால். (௬)

அருள்பெறு மீசான னுதாரத் தமைத்திட்ட
மருடபு பெருந்தீர்த்த மான்மியஞ் சொலப்போமோ
இருடபு மதின்மூழ்கும் யாவருந் துயர்தீர்ந்து
பொருவருஞ் சிவலோகம் புக்கினி தமர்வாரால். (எ)

கஎ. ஈசானதீர்த்தப் படலம்.

க. அரந்தை - துன்பம். கழுவாய் - பிராயச்சித்தம்.
௬. தன்றிசை யென்றது வடகீழ்த்திசையை.

இத்தகு பெருந்தீர்த்த மெட்டொடு திருக்கோயில்
அத்தகு மலரவனு லமைத்திடு கூபமுஞ்சேர்ந்
துத்தம வளத்தீர்த்த மொன்பது வாய்ப்பொலியுஞ்
சித்தம தொருப்படுவார் சேவிக்கும் விளத்தொட்டி. (அ)

உரைசெயக் கேத்திரந்தான் யோசனை மூன்றெல்லை
இரைதரு முதல்யுகத்தி லிரண்டினி லிரண்டெல்லை
வரைசெயொன் றுகமூன்றிற் கலியினில் வயங்கரையாம்
புரைதபு மாதவத்தாற் பொலிந்துயர் முனிவீரே. (௯)

மன்னிய விளத்தொட்டி மாநகர் மான்மியத்தை
மின்னிய பேரன்பின் விரித்துரை செய்வோரும்
பன்னிய வதனுண்மை பரிந்துறக் கேட்போரும்
துன்னிய பெருவாழ்க்கை யுறுவர்வெந் துயர்தீர்ந்தே. (க0)

இனையபு ராணத்தை யெழுதிவைத் திடுமில்லிற்
றனையவந் தடைகிற்குஞ் சொல்லிய திருவெல்லாம்
நினைதரு மக்கிருகங் காசியை நிகரென்ப
வினைதரு துயரென்று மேவுத லிலையாங்கே. (கக)

நண்ணிய விளத்தொட்டி நாயகன் றிருப்பெயரும்
எண்ணிய கரும்பிரத நாயகி யெழிற்பெயரும்
அண்ணிய தம்புதல்வ ராதியர்க் கிட்டமைப்போர்
புண்ணிய வுலகெய்திப் போகமிக் குவப்பாரால். (க௨)

ஆயிடை யுவந்தெய்தி யறஞ்சிறி தாற்றிடினும்
தீயிடை நடமாடுஞ் சிவபரன் றிருவருளால்
மாயிரும் புவிகாண வளர்ந்தது பெரிதாகும்
பாயிருங் கதிர்நேரும் பனியவர் வினையம்மா. (க௩

மறையவர் முதலோர்க்கு மடைகலை முதற்றானம்
குறைவற வங்களிப்போர் கொளுமிசை யெவர்சொல்வார்
நிறைதரும் பேரின்ப நின்மல மாமூர்த்தி
உறைதரு மொழியாமே யோங்குமத் தலமென்றும். (க௪

௯. இரண்டினில் - இரண்டாவது யுகத்தில். அரை - அ
யோசனை.

கக. கிருகம் - வீடு.

க௪. மடை - அன்னம். கலை - ஆடை.

இதுபுகல் சூதமுனி யிருசா ணப்பதும
மதுமலர் நைமிசத்து வாழ்முனி வரர்போற்றி
முதுபுக ழிதுகேட்டு முத்தர்க ளாயினமற்
றெதுகுறை யெமக்கென்றே யிவர்பெருங் களிப்புற்றார். (க௫)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

பொன்பூத்த விளத்தொட்டி நகர்வாழ்க வொளிர்பிரம புரீசர் வாழ்க, மின்பூத்த சிறுமருங்குற் கரும்பிரத நாயகிசீர் மேன்மேல் வாழ்க, தென்பூத்த வைதிகமுஞ் சைவமுநா டொறுமோங்கிச் செழித்து வாழ்க, மன்பூத்த சிதம்பரத்து நடநவிலுங் குஞ்சிதத் தாள் வாழ்க வாழ்க. (க௯)

ஆகத் திருவிருத்தம் - ௬௫௬.

விளத்தொட்டிப் புராணம் முற்றும்.

59222
40708